
பதிவு இலக்கம் : 105267
வார இதழ்
# தீபம்
25.08.2019 தீபம் -196
விலை ரூபா 30.00




## நல்லூர் உற்சவகால சிறப்பிதழ்



## 'சரா'விடம் பெரு நிதியாம்!

## இவர்களால் முடியாது!



## தளபதி இவரா?

### ஐ.நா. கண்டனம்

"முறையான பயிற்சியே உயிர் காக்கும்"
சீபன் பாஸ்கர் லேணர்ஸ்
SEEBAN BASKAR LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சி போதனாசிரியர்களைக் கொண்ட பாடசாலை

கண்டி வீதி, கைதடிச்சந்தி.
021 223 2050 | 076 713 6304
மத்திய மகாவித்தியாலய வீதி, நெல்லியடி.
021 226 0459 | 076 015 3375 | 077 057 0459
seebanbaskar
daseepan@gmail.com


பொலிவான நகைகள்.. மெலிவான சேதாரத்தில்!!
வெஸ்ரன் ஜீவல்லர்ஸ்
Western Jewellers
பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் மிக உன்னத உறவான தங்க நகைகள்

No: 81, Kasthuriyar Road, Jaffna. Tel: 021 222 6916

இது தமிழ்பேசும் மக்களுக்கான தனித்துவமான பத்திரிகை



Jaffna
Rent A Car
வாருங்கள் தருகிறோம்.,
நீங்களே ஓட்டிச்
செல்லலாம்.
பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 222 2228 ; 077 748 4820





SUNJEYA
FOODLAND
தரமாகவும் சுவையகவும்
நீங்கள், விரும்பும் உணவுகளை
சுவைத்து மகிழ்ந்திட இன்றே
நாடுங்கள்!
SUNJEYA FOODLAND
NO. 414, HOSPITAL ROAD, JAFFNA.




J.டர்மினி
நகைமாடம்
என்றுமே மாறாத
தரத்தில் 22 கரட்
தங்க நகைகள்
உத்தரவாதத்துடன்
எம்மிடமே...
J. Darmini Jewellery No: 80/4, Kasthuriyar Road, Jaffna. | T.P 077 813 1023




ரெஜிபோம் வடிவமைப்புத்துறையில்
10 வருடங்கள் கடந்து...
சித்தா ரெஜிபோம்
Subarah
weds
Arany
10.09.2019
மங்களகரமான வைபவங்களுக்கு உங்கள் எதிர்பார்ப்பை
பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றோம்.
தரமான றெஜிபோம்
Quality Dust
2D - 3D டிசைன்கள்
ஐசிங் கட்டிங் மற்றும் உருவங்கள் (தீபநாயகி)
Indian Tecnology
HD Quality
நவீனகரமான வடிவமைப்பு
No.65A, அச்சுக்கூடவீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
Mobile : 075 544 5901
Viber : 075 039 4357

NEW
NELSON
LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற A தர முதன்மை சாரதிப்பயிற்சி பாடசாலை DS590
Friendly and reliable customers
Fully qualified Instructors
Free after license advice
Drive test preparation
WE SUCCEED 100% PASS RATES
பிரதான காரியாலயம் : இல.89, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
பிரதான வீதி,
வல்வெட்டித்துறை.
077 557 3711
இல. 127, பருத்தித்துறை வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
077 111 3382
சீரணி சந்தி,
சண்டிலிப்பாய்.
0777 942 312

வார இதழ்
தீபம்
"யாமார்க்கும் குடியல்லோம்"
25.08.2019 இதழ் -196
gmail:- newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் TP:- 021 4927542, 0771989445

# தேர்தல் எந்த ஆறுதலையும் தமிழ்மக்களுக்குத் தரப்போவதில்லை

தென்னிலங்கை அரசியல் தலைவர்களின் நாடளாவிய ரீதியிலான தேர்தல்கால திக் விஜயங்கள் வேகம் கொள்கின்றன. இந்த நிலையில், இன்னமும் எந்த ஒரு அரசியல் கட்சியாலும், தம்முடைய ஜனாதிபதி வேட்பாளர் யாரெனத் தீர்க்கமான பெயர் ஒன்றை அறிவிக்கமுடியாத நிலை தொடருகிறது. இச்செயற்பாடானது அங்குள்ள தலைவர்களிடையேயான கருத்தியல் ஒருமைப்பாடின்மையையே காட்டுகிறது அது மட்டுமல்லாது தேசியம் பற்றிப் பெரும்பான்மை இன அரசியல் தலைவர்களுக்கிடையேயான பதவிப் போட்டியையும் அது வெளிப்படுத்தி நிற்கிறது

ஜே.வி.பி. மட்டும் இதற்கு விதிவிலக்காக அதன் தலைவர் அநுர குமாரா திசநாயக்காவை வேட்பாளராக அறிவித்துள்ளது. இதேவேளை வேட்பாளர் பெயர் அறிவிக்கப்படாத நிலையிலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி அரியணையில் அமரப் பலர் ஆசை கொண்டுள்ளனர். அவர்கள் அதற்குத் தயார் எனச் சுய பிரச்சாரமும் செய்துள்ள நிலையில், அதற்கான முன் ஆயத்த நிகழ்ச்சி நிரலையும் தயாரித்ததோடு மட்டுமல்லாது அதன்படி பூர்வாங்கப் பிரச்சார நடவடிக்கைகளையும் ஆரம்பித்திருப்பதுதான் கோமாளித்தனத்தின் உச்சக்கட்டம் எனலாம்.

மகிந்த அணியினர் கோத்தபாயாவின் பெயரை அறிவித்துள்ள போதிலும், அதன் பின்னால் நிறையச் சட்டச் சிக்கல்கள் இருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. அவரது இரட்டைக் குடியுரிமை தொடர்பான விவகாரமும் இன்னமும் தீர்க்கப்படாதா நிலையில் பிரச்சினைகள் தொடர்கின்றன.

எது எப்படி இருந்தாலும், இன்னொரு பௌத்த, சிங்கள பேரினவாதச் சிந்தனை கொண்ட தலைவரின் அமர்வுக்காகவே அந்த அரியணை காத்திருக்கிறது என்பது மட்டும் முடிந்த முடிவாக உள்ளது. அது எப்பவோ முடிந்த காரியம் என்பதில் ஐயமில்லை. ஆனால் இந்தப் பெரும்பான்மை இனத் தலைவர்கள் சேர்ந்து எடுக்கும் தேர்தல் செயற்பாட்டில் முக்கிய பங்கினை ஆற்றக்கூடியவர்களாகப் சிறுபான்மையினராகிய தமிழர்களின் வாக்குகள் இருப்பதுவும் மறுப்பதற்கில்லை.

இருந்தாலும் அதனை வெளிப்படையாகச் சொல்லிக் கொள்ள வெட்கப்படும் தென்பகுதித் தலைமைகளும் இருக்கவே செய்கின்றார்கள். அது அவர்களுக்குக் கௌரவப் பிரச்சினையாகக் காணப்படுகிறது. இந்த நிலையில் வடக்கு கிழக்கு வாக்கு வங்கியைச் சூறையாடும் நோக்கிலேயே அண்மைக்கால தமிழ் பிரதேசங்களை நோக்கிய 'திக்' விஜயங்கள் அமைகின்றன. அதனால் அத்தகைய விஜயங்கள் வடக்கு கிழக்குப் பகுதியை போர்க்களமாகவும் இலக்கு வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது

இந்த வகையில் தமிழ் மக்கள் நலனில் பேரார்வமும், அக்கறையும் கொண்டவர்களாக அவர்கள் போடும் வேசமும், ஆடும் நாடகமும் இருக்கின்றன. இது, எல்லாவகையிலும் ஏமாற்றப்பட்டு வலி சுமக்கும் வாழ்கையைத் தொடரும் மக்களுக்கு வேதனை மிகுந்த சிரிப்பையே ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை

தமிழ்மக்களின் காதில் வண்டி வண்டியாகப் பூச்சுற்றி அழகு பார்க்க இவர்கள் வருகிறார்கள் என்பது மக்களுக்கு நன்கு தெரிந்த விடயம். கடந்த காலப் பட்டறிவு அனுபவங்கள் அழுத்தமான பாடங்களாக மக்களுக்குள் பதிந்தே உள்ளன

சமத்துவம் சுயமரியாதை ஆட்சி உரிமை அதுவே தமிழருக்கான தமது தீர்வு என்று ரணில் சுமந்திரனுக்கு சொன்னாராம். ஆனால் 'இந்த நாட்டிற்குச் சிங்கள பௌத்த ஆட்சிதான் தேவை. அதுவே நாட்டை பாதுகாக்கும்' என்று அவரது கட்சியை சேர்ந்த சஜித் பிரேமதாசா கூறி வருகிறார்.

ஆனால், பிரபாகரனின் விருப்பத்திற்கமைய, முன்பு என்னை ஆதரித்தது போன்று கோத்தாபயவையும் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டுமென்று மகிந்த சொல்கிறார். ஆனால் கோத்தாபயவோ தனித்த பெரும்பான்மை இனத்தவரின் ஆதரவுடனேயேதான் ஜனாதிபதி ஆவேன் என்று அறிக்கை விடுகிறார். இவர்களுக்குள்ளேயே எவ்வளவு முரண்பாடுகள் இருக்கிறது?

ஜே.வி.பி யின் அநுரகுமர திஸநாயக்கவோ தமிழ் பிரச்சினை தீர்வு குறித்து தீர்க்கமாக முடிவு கூறாமல் நழுவுகிறார். இதுதான் தென்பகுதிச் சிங்களத் தலைமைகளின் அரசியல் மூலோபாயம் அதுவே சிறுபான்மையினரை பேய்க்காட்டும் தந்திரோபாயம். இவர்களில் யாரை எமது தலைமைகள் ஆதரிக்கப் போகின்றனர்? எவரை இவர்கள் ஆதரித்தாலும் இவர்களுக்கு அவர்கள் வழங்கப்போவது அதே பழைய மொந்தையில் அதே பழைய புளித்த கள்ளைத்தான் என்பதே உண்மை.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த
ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மை மாதர்
திறம்புவ தில்லையாம் அமிழ்ந்து பேரிரு ளாமறி
யாமையில் அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம் உதய
கன்னி உரைப்பது கேட்டீரோ!


உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும், ஓது
பற்பல நூல்வகை கற்கவும், இலகு சீருடை
நாற்றிசை நாடுகள் யாவுஞ் சென்று புதுமை
கொணர்ந்திங்கே திலக வாணுத லார்நங்கள் பாரத
தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம் விலகி
வீட்டிலோர் பொந்தில் வளர்வதை வீரப் பெண்கள்
விரைவில் ஒழிப்பாராம்







நன்றி : சிரித்திரன் சித்திரக் கொத்து







# இந்தோ-பசுபிக் தந்திரோபாயத்திற்கு பதிலீடான ஈரோசியன் தந்திரோபாயம் சீன-ரஷ்சிய தரப்பால் வகுக்கப்பட்டுள்ளதா?

**கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்**

அண்மைய காலத்தில் பிராந்திய ரீதியில் அணிகளும், தந்திரோபாயங்களும் அடிக்கடி நிகழ்ந்து வருகின்றன. அமெரிக்கா தலைமையில் ஓரணியும் சீனா தலைமையில் இன்னோர் அணியும் மாறிமாறித் தமது அணிகளின் தந்திரோபாயங்களை வகுத்து வருகின்றன. இத்தகைய உபாயத்திற்குள் பெரிய அரசுகள் மட்டு மல்ல சிறிய அரசுகளும் ஒன்றிணைந்து கொள்வது தவிர்க்க முடியாத அம்சமாகும். அதிலும் இலங்கை போன்ற தந்திரோபாய நிலங்களைப் பிரதிபலிக்கும் தீவுகள் முக்கியமான பங்கெடுப்பைப் பிரதி செய்வது தவிர்க்க முடியாததாகும். அந்த வகையில் சீனா – ரஷ்சியா அண்மையில் செய்து கொண்ட ஈரோசியன் உன்படிக்கை பற்றிய விடயங்களைத் தேடுவதாக இக்கட்டுரை அமைகிறது.

ரஷ்சியாவும், சீனாவும் இணைந்து ஈரோசியன் தந்திரோபாயம் ஒன்றினை வரைந்துள்ளன. யூன் 5 இல் செய்து கொண்ட இவ்வுடன்படிக்கை அதிக முக்கியத்துவம் பொருந்தியதாக அமைந்துள்ளது. இரு நாடுகளும் இணைந்தே இதனை ஏற்பத்தியுள்ளன. இரு தரப்பு உடன்படிக்கையானது பிராந்திய அம்சத்தில் அதிக அரசியல் முக்கியத்துவத்தைத் தரக்கூடியதாக அமைந்துள்ளது. மத்திய ஆசியா, கொரியப்பகுதி, ஆசியா ஆகிய பிராந்தியங்களில் பாரிய அரசியல் தாக்கத்தினை ஏற்படுத்தும் என்ற அடிப்படை நிலவுகிறது. குறிப்பாகப் பொருளாதாரத்தின் முக்கியத்துவமும் அதற்கான உறவு நிலையும் வளர்ச்சி அடைய முயலுவதுடன் அதன் பங்கில் சீனா, ரஷ்சியா இரண்டு நாடுகளும் ஆதிக்கம் பெறும் நிலை உருவாகியுள்ளது.

இது அமெரிக்க அரசியல் பொருளாதாரத் தந்திரோபாயத்தினை முறியடிப்பதாக அமைவதுடன் இப்பிராந்திய தந்திரோபாய நிலங்கள் மற்றும் கடல் பகுதிகள் அவ்வரசுகளின் செல்வாக்குப் பிராந்தியமாக அமையவுள்ளது கவனிக்கதக்கது. இதனால் நேரடியாகப் பாதிக்கும் விடயமாக இந்தோ-பசுபிக் தந்திரோபாயம் அமைந்துள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.



குறிப்பாக ஈரோசியன் அணியில் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அராங்கம் இணைந்திருப்பதே அதிக சிக்கலுக்குரிய விடயமாக மாறியுள்ளது. அதனால் ஆத்திரம் அடைந்துள்ள அமெரிக்கத் தரப்பு காஷ்மீர் விடயத்தை முதன்மைப்படுத்தி வருவதுடன் இந்தியாவை வழிக்குக் கொண்டுவரும் நடைமுறையை அண்மையில் ஆரம்பித்துள்ளது. உண்மையில் காஷ்மீர் விடயம் தீவிரமடைவதற்கு ஈரோசியன் உடன்படிக்கையில் இந்தியா இணைந்து கொண்டதும் ஒரு பிரதான காரணமாகும்.

அதன் இரண்டாவது கட்டமாக ஜப்பானிய சமாதான தூதுவர் இலங்கைக்கு வருகை தந்தமை அமைந்துள்ளது. அவரது விஜயம் அதிகம் அரசியல் பெறுமானம் உடையது. ஒரு பூகோள அரசியலுக்கான களத்தை மீளத் திறந்துவிட்டுள்ளது. அதனை சரியாகக் கணிப்பிட்டு தமிழ்த் தரப்பு செயற்பாட்டால் அதிகமான மாற்றம் நிகழ்த்தலாம். குறிப்பாக ஜே.வி.பி. வேட்பாளர் களம் இறங்கிய பின்பு இரு பிரதான வேட்பாளர்களும் அதிக நெருக்கடிக்கு உள்ளாவர். அது மட்டுமன்றி இந்தோ – பசுபிக் தந்திரோபாயத்திலிருந்து இந்தியா வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் அமெரிக்கா ஜப்பான் இலங்கையுடன் நேரடி உறவைத் தக்கவைக்க விரும்புவதுடன் தமது பிராந்தியப் பாதுகாப்புக்கு அது இலாபகரம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது இலங்கை அத்தகைய தந்திரோபாயத்துக்குள் அவசியமானது என்பதில் வேறுபட்ட சிந்தனை அமெரிக்க ஜப்பானுக்குக் கிடையாது. அத்தகைய நிலை தவறவிடப்படுமாக இருந்தால் புதிய பட்டுப்பாதைத் திட்டமும், ஒரே சுற்று, ஒரே பாதையும் தோற்கடிக்க முடியாததாகிவிடும், இதனைத் தமிழ் தரப்பு உணர வேண்டும் அதற்கு அமைவாக முடிவுகளை எடுத்து செயல்படவேண்டும்.

எனவே ஈரோசியன் தந்திரோபாயம் கண்டங்களைக் கடந்து, பிராந்தியங் களை கடந்து செயல்படக்கூடிய தாக அமைந்துள்ளது. அதனால் இலங்கையிலும் அதன் பிராந்தியத்திலும் முக்கியத்துவம் பெற்ற நாடாக மட்டுமன்றி, ஜனாதிபதி தேர்தலும் முதன்மை உடையதாக அமையவுள்ளது. இது ஒரு பூகோளப் போட்டியை உருவாக்கியுள்ளது. அத்தகைய பூகோளப் போட்டிக்கான வாய்ப்புக்கள் தமிழ் மற்றும் சிங்களத் தரப்புக்கு அதிக பயன்தரக் கூடியதாகும். சிங்களத் தரப்புச் சரியாகவும், தந்திரமாகவும் பயன்படுத்திக் கொள்ளும், தமிழ் தரப்பு கையசைப்பதுவும் மகிழ்ச்சி தெரிவிப்பதுமாகக் காலத்தை வீணடிக்கப்போகிறதா அல்லது இத்தகை சந்தர்ப்பங்களைக் கையாளப் போகிறதா என்பதே தற்போதைய பிரச்சினையாகும்.

ஈரோசியன் எதிர் இந்தோ-பசுபிக் என்ற நிலை இலங்கையின் ஜனாதி பதித் தேர்தலை மேலும் சூடுபிடிக்க வைக்கப்போகிறது. அதனை அகாஷி தொடக்கியுள்ளார்.

# ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய! இராணுவத் தளபதியாக சவேந்திர சில்வா!!

## ஐ.நா.உள்ளிட்ட சர்வதேச நாடுகள் அதிருப்தியும் கண்டனமும்



ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் இன அழிப்பு நடவடிக்கைகள், மனித உரிமை மீறல், போர்க்குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான மேஜர் ஜெனரல் (Major General) சவேந்திர சில்வா இலங்கையின் 23ஆவது இராணுவத் தளபதியாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த திங்கட்கிழமை இந்த நியமனத்தை வழங்கியுள்ளார். இந்த நியமனத்தின்போது ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன, இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சாந்த கோட்டேகொட ஆகியோரும் கலந்துகொண்டனர். இலங்கைப் படையின் பிரதானியாகப் (Army Chief of Staff) பதவி வகித்திருந்த சவேந்திர சில்வா 2009 ஆம் ஆண்டு மே மாதம் போர் உக்கிரமடைந்திருந்தபோது இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாகப் பதவி வகித்திருந்தார்.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் இலங்கை இராணுவத்தின் கட்டளை அதிகாரியாக 1996 ஆம் ஆண்டு செயற்பட்டு தமிழ் இளைஞர்கள் யுவதிகள் பலர் காணாமல் ஆக்கப்பட்டதற்கும் கொல்லப்பட்டமைக்கும் காரணமான மேஜர் ஜெனரல் துமிந்த கெப்பிட்டிவலன்னவுக்கு கடந்த ஆண்டு யூன் மாதம் இலங்கை இராணுவத்தின் காலாட் படையின் பணிப்பாளர் நாயகமாக மைத்திரிபால சிறிசேனவினால் பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது.

**சவேந்திர சில்வா எனப்படுபவர்**

இலங்கையின் 23ஆவது இராணுவத் தளபதியாக கடந்த திங்கட்கிழமை பதவி உயர்வு பெற்றுள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா இந்த ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை இராணுவத்தின் பிரதானியாகப் (Army Chief of Staff) பதவி உயர்வு வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்டது கீழ்காணும் படம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த நியமனத்தை வழங்கியிருந்தார். மைத்திரிபால சிறிசேனவை நெல்சன் மண்டேலா என்று சம்பந்தன் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புகழாரம் சூட்டியிருந்தார். ஆனால் இனப்படுகொலை, போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தமை தொடர்பாக சர்வதேச அரங்கில் பகிரங்கமாகவே குற்றம் சுமத்தப்பட்டிருந்த சவேந்திர சில்வாவை 2019 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி இராணுவத் தளபதியாக எந்தவிதமான தயக்கங்களும் இன்றி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார். 2009 ஆம் ஆண்டு போர் நடைபெற்றபோது மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்திருந்த மைத்திரிபால சிறிசேன, 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்தார். இதனால் வடக்குக்-கிழக்குத் தாயக மக்கள் கடும் விசனமடைந்திருந்த நிலையிலும் தமிழரசுக் கட்சி அமெரிக்க, இந்தியா ஆகிய நாடுகளின் வாக்குறுதிகளை நம்பி ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் சவேந்திர சில்வாவும் இலங்கை இராணுவத் தளபதியாகப் பதவியேற்றுள்ளார். 2015 ஆம் ஆண்டு அமெரிக்கா, இந்தியா போன்ற சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்றிருந்தார். மகிந்த ராஜபக்சவை பதவி கவிழ்த்துவிட்டுப் புதிய அரசியல் கலாசாரம் என்ற பெயரில் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மைத்திரி - ரணில் அரசாங்கம் உருவாக்கப்பட்டிருந்தது. ஈழத் தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அன்று அமோக ஆதரவு வழங்கியிருந்தது.

ஆனால் நான்கு ஆண்டுகள் சென்ற நிலையில் மைத்திரி- ரணில் அரசாங்கம் மீது நம்பிக்கை இழந்துவிட்டதாக கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இலங்கை நாடாளுமன்றத்தில் கடந்த யூலை மாதம் கூறியிருந்தார். சட்டத்தரணி சுமந்திரனும் அவ்வாறு தெரிவித்திருந்தார்.

மைத்திரி- ரணில் அரசாங்கத்தை நம்பி இந்தியாவுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்துவதை தவிர்த்துக் கொண்டதாகவும் சுமந்திரன் கூறியிருந்தார்.

இந்த நிலையில் சவேந்திர சில்வா இலங்கை இராணுவத்தின் தளபதியாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஶ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ச அறிவிக்கப்பட்டு ஒரு வாரம் சென்ற நிலையில் அவருடைய நெருங்கிய சகாவான சவேந்திர சில்வா இலங்கை இராணுவத் தளபதியாக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்த நியமனத்தைக் கண்டித்துள்ளது. அதேவேளை, கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்வதில் பின்னணியாகச் செயற்பட்ட கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் அலெய்னாவும் இந்த நியமனத்தைக் கண்டித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ச மீது தமிழ் இனப்படுகொலை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் ஈழத் தமிழ் மக்களினால் சர்வதேச அரங்கில் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், கோட்டாபய ராஜபக்சவை இலங்கையின் ஜனாதிபதிக் கதிரையில் அமர்த்தி அழகு பார்க்கத் துடிக்கும் அமெரிக்கா, சவேந்திர சில்வா இலங்கையின் இராணுவத் தளபதியாகப் பதவியேற்றமைக்கு கண்டனம் வெளியிட்டுள்ளமை குறித்துக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

1984ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தில் இணைந்து கொண்ட சவேந்திர சில்வா, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவின் நண்பராகவும் உள்ளார்.

சரத் பொன்சேகா இலங்கை இராணுவத் தளபதியாக பதவி வகித்திருந்தபோதே. சவேந்திர சில்வா 2009 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாகப் பதவி வகித்திருந்தார்.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் உதவி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் சர்வதேச அரங்கில் ஏற்பட்ட எதிர்ப்புகள் சர்ச்சைகளையடுத்து இலங்கை இராணுவத்தின் 53 வது தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில் இந்த ஆண்டு ஜனவரி மாதம் ஒன்பதாம் திகதி இலங்கை இராணுவத்தின் பிரதானியாக சவேந்திர சில்வா, மைத்திரிபால சிறிசேனவினால் பதவி உயர்த்தப்பட்டு இன்று இலங்கை இராணுவத் தளபதியாகப் பதவியேற்றுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவையே மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரிக்கும் என்பதன் வெளிப்பாடாகவே சவேந்திர சில்வாவின் பதவி உயர்வு அமைந்துள்ளதாகக் கொழும்பு உயர்மட்ட அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

சவேந்திர சில்வாவிற்கு எதிரான போர்க்குற்றச் சாட்டுகளை உள்ளடக்கிய 137 பக்கங்களைக் கொண்ட ஆவணம் ஒன்று தென் ஆபிரிக்காவைத் தளமாக கொண்ட சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு வெளியிட்டிருந்தது.

இந்த ஆவணத்தில்,சவேந்திர சில்வாவிற்கு எதிரான குற்றச்சாட்டுகள் அவற்றுக்கான ஆதாரங்கள் தொகுக்கப்பட்டிருந்தன.

அதேவேளை, இலங்கை ஒற்றை ஆட்சி அரசின் வீர விக்கிரம பதக்கம், உத்தம சேவா பதக்கம், ரண விக்கிரம பதக்கம், ரண சூர பதக்கம் ஆகிய விருதுகளை சவேந்திர சில்வா பெற்றுள்ளார்.

– நன்றி : கூர்மை இணையம்.



இலங்கையின் 23 ஆவது இராணுவத் தளபதியாக கடந்த திங்கட்கிழமை பதவி உயர்வு பெற்றுள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு, இந்த ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை இராணுவத்தின் பிரதானியாக (Army Chief of Staff) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமனத்தை வழங்கியிருந்தார். மைத்திரிபால சிறிசேனவை நெல்சன் மண்டேலா என்று சம்பந்தன் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புகழாரம் சூட்டியிருந்தார். ஆனால் இனப்படுகொலை, போர்க் குற்றங்கள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தமை தொடர்பாக சர்வதேச அரங்கில் பகிரங்கமாகவே குற்றம் சுமத்தப்பட்டிருந்த சவேந்திர சில்வாவை 2019 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி இராணுவத் தளபதியாக எந்தவிதமான தயக்கங்களும் இன்றி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார். 2009 ஆம் ஆண்டு போர் நடைபெற்றபோது மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தில் பிரதிப் பதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்திருந்த மைத்திரிபால சிறிசேன, 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்தார். இதனால் வடக்கு - கிழக்குத் தாயக மக்கள் கடும் விசனமடைந்திருந்த நிலையிலும் தமிழரசுக் கட்சி, அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் வாக்குறுதிகளை நம்பி ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வழிகாட்ட இயலாத தமிழ்த் தலைமைகள்

மாசிலான்

சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தலின் தொடக்கமே மிகவும் சுவையான திருப்பங்களுடனும், குழப்பங்களுடனும் நகர்ந்துகொண்டிருக்கிறது.மகிந்தவின் பொது சன பெரமுன கோத்தபாய ராஜபக்சாவை சனாதிபதி வேட்பாளராக அறிவித்து தனது தேர்தல் பணிகளைத் தொடங்கி விட்டது. ஐக்கிய தேசியக் கட்சியோ இன்னமும் இழுபறியில், 'யார் சனாதிபதி வேட்பாளர்?" என்று முடிவு செய்ய முடியாமல், வேட்பாளரையும் அறிவிக்காமல் நாட்களை இழுத்து வருகிறது. யார் ஐ.தே.க வின் வேட்பாளர்? சஜித் பிரேமதாசாவா! கரு ஜெயசூரியவா! என்று இழுபறி தொடர்கிறது. சஜித் பிரேமதாசாவுக்குப் பெரும்பான்மைக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பது போன்ற தோற்றம் தெரிகிறது. ஆனால் ரணில் விக்கிரமசிங்க சஜித் பிரேமதாசாவை ஏற்பதில் பின் நிற்பதே அங்குள்ள குழப்பமாகும். இதற்கிடையில் பெரும் மக்கள் கூட்டத்தைக் கொழும்பில் கூட்டி, மக்கள் விடுதலை முன்னணி( ஜே.வி.பி. )தனது வேட்பாளராக அனுரகுமார திசநாயக்காவை அறிவித்துள்ளது. ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ, என்ன செய்வது என்று தெரியாமல் சிக்கலில் உள்ளது. அதே நேரம் வேறு சிலரும் வேட்பாளர்களாகப் போட்டியில் இறங்குவார்கள்... ஆனால் கடுமையான போட்டி மகிந்த குழுவுக்கும், ஐதேக வுக்கும் இடையில்தான் இருக்கும் என்பது தெரிந்ததே. பெரும் மக்கள் கூட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி கூட்டியிருந்தாலும், கணிசமான வாக்குகளை அவர்கள் பெற்றாலும், அவர்களால் முதல் இரண்டு இடத்திற்குள் வர முடியாது.

மூன்றாவது இடத்தை அவர்கள் பெறுவார்கள் என்று கணிக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் பெறப்போகும் வாக்குகள் மகிந்தவுக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா? ஐதேக வேட்பாளருக்கு பாதிப்பை ஏற்படுத்துமா? என்று தெரியவில்லை. இதற்கிடையில் 'சஜித் பிரேமதாசாவை வேட்பாளராக ஐ.தே.க. நிறுத்தாவிட்டால் அவர் மைத்திரிபால ஆதரவுடன் போட்டியிடுவார்" என்றும் கூறப்படுகிறது. அவ்வாறான நிலை ஏற்படுமானால் ஐ.தே.கவுக்குப் பாரிய பின்னடைவு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். சிலவேளை இவ்வாறான நிலை ஏற்படுமானால் கோத்தாபய ராஜபக்சவுக்கு இது சாதகமாகிவிடும். என்று கூற முடியும்.அதே நேரம் கோத்தபாய ராஜபக்ச அமெரிக்கக் குடியுரிமையை இன்னமும் அவர் இழக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. ஏனெனில் இறுதியாக வெளியான அமெரிக்க அரசால் விடப்பட்ட குடியுரிமை நீக்கப்பட்டோரின் பட்டியலில் கோத்தபாய ராஜபசவின் பெயர் காணப்படவில்லை.எனவே அவர் தொடர்ந்து இரட்டைக்குடியுரிமை உள்ளவராகவும் தேர்தலில் போட்டியிட முடியாதவராகவுமே உள்ளார் என்றும் சிலர் கூறுகிறார்கள்..


இவ்வாறு தெற்கு அரசியல் களம் தேர்தல் அமளியில் இருக்கும் பொழுது. தமிழர் தரப்பிலென்ன நடைபெறுகிறது? என்பது புதிராகவே உள்ளது. அங்கு நடப்பது ஆளும் உரிமையை யார் கைப்பற்றுவது? என்பதாகும். ஆனால் தமிழினம் தேர்தல்கள் மூலம் ஆளும் உரிமையை பெறப்போவதில்லை .ஆளும் உரிமைக்கான குரல் இரண்டாயிரத்து ஒன்பது மே திங்களுடன் ஓய்ந்து விட்டது. மீண்டும் நாடாளுமன்ற அரசியல் மூலம் உரிமைகளைப் பெறலாம் என்ற வரட்டுக் கூச்சல் தான் தமிழ் அரசியல்வாதிகளால் எழுப்பப்படுகிறது. தாங்கள் நாடாளுமன்றம் சென்றால் 'உரிமைகள் பெற்றுத் தருவோம்' என்று தேர்தல்களில் கூப்பாடு போடும் அரசியல் கட்சிகள் - தங்களுக்குத் துணையாகத் தலைவர் பிரபாகரனின் பெயரையும் பயன்படுத்தத் தவறுவதில்லை. தலைவரின் இலட்சியம், கொள்கை, நேர்மை, உறுதி என்பனவற்றுக்குக் கொஞ்சமும் மதிப்புக் கொடுக்காதவர்கள் தலைவரின் பெயரைத் தங்களின் தேர்தல்களுக்குப் பயன்படுத்தும் நிலைதான் இங்கு காணப்படுகிறது.



இதிலேயும் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், மகிந்த ராஜபக்சவோ இம்முறை அவர்களை விடவும் வேகமாகவும், அவர்களையும் முந்திக்கொண்டு தலைவரின் பெயரைத் தனக்குச் சார்பாகப் பயன்படுத்த முனைந்துள்ளார். உண்மையில் பிரபாகரனின் கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள் ரணிலுக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்று கூறியுள்ளார். இதுவும் ஒரு நப்பாசையின் வெளிப்பாடே ஆகும்.

இப்பொழுது தமிழ் மக்களின் கட்சிகள் என்ன சொல்லப்போகின்றன செய்யப்போகின்றன.என்று இதுவரை சரியான கருத்தைக் கூற முடியாமல் உள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தன்னை ஒரு பெரிய கட்சி என்று கூறிக்கொண்டிருக்கிறது. ஒரு பெரிய கட்சி தனது மக்களின் வாழ்வையும் உரிமைகளையும் தனது அடிப்படை இலட்சியமாகக் கொண்டிருக்குமானால் தெளிவான முடிவை மக்களுக்குக் கூறியிருக்க வேண்டும். ஏனெனில் அவர்களுக்குத் தனி வேலைத் திட்டம் எதுவும் இல்லை. சம்பந்தன் இந்தியாவிற்குச் சென்றுள்ளார். அவர் திரும்பி வந்து தான் முடிவு அறிவிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. இந்தியா ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்குமாறு தான் கூறும் . இதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் மீற முடியாது. அத்துடன் த்.தே.கூ - ஐ.தே.க வின் ஆதரவு நிலைப்பாட்டிலேயே தொடர்கிறது.

இதற்கு முன்னர் நடந்த சனாதிபதித் தேர்தல்களில் தமிழர் தரப்பு எவ்வாறு செயல் பட்டன என்று சற்று நோக்கவேண்டும். சனாதிபதிக்கான முதலாவது தேர்தல் 1982 நடைபெற்றது. அத்தேர்தலை. தமிழர்களின் தரப்பில் பிரதிநிதித்துவப்படுத்திய அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணி புறக்கணிக்கும் படி தமிழ் மக்களைக் கோரியது. இக்கட்சியில்தான் சம்பந்தன், சேனாதிராசா ஆகியோர் இருந்தனர். தேர்தலைப் புறக்கணித்தனர். அப்பொழுது






எதிர்க்கட்சிகள் த.வி.கூ. - ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்குச் சார்பாகவே இம்முடிவை அவர்கள் எடுத்ததாகக் கூறி அமிர்தலிங்கத்தின் மேல் குற்றம் சுமத்தினர். இதன் பின்னர் இந்தியப் படைகளின் வருகையின்போது 1988 இல் நடந்த தேர்தலை எவரும் புறக்கணிக்கவில்லை. பின்னர் 1994 இல் சந்திரிகா சமாதானத் தேவதையாகப் போட்டியிட்ட தேர்தலையும் எவரும் புறக்கணிக்கவில்லை. ஆனால் 2005 இல் நடந்த சனாதிபதித் தேர்தலை புறக்கணிக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் மக்களுக்குக் கோரிக்கை விடுத்தனர்.

தமிழ் மக்கள் முந்திய புறக்கணிப்பில் பங்குபற்றியதை விடவும் கூடுதலாகப் பங்கு பற்றி தேர்தல் புறக்கணிப்பை பெரு வெற்றியடையச் செய்தனர்...இப்புறக்கணிப்பை அப்பொழுது எவரும் குறை சொன்னதில்லை.ஆனால் போரில் ஏற்பட்ட விளைவுகளை அடுத்து 'புலிகள் புறக் கணிப்பை அறிவிக்காதிருந்தால் ரணில் வெற்றி பெற்றிருப் பார் என்றும் இமாலயத் தவறை விட்டுவிட்டனர் புலிகள் என்றும் வரலாற்றுத் தவறை விட்டுவிட்டனர் என்றும்" குறைகூறுகிறார்கள். அனேகமாக இவ்வாறு கூறுபவர் கள் பெரும்பாலும் த.தே.கூ.வினரே ஆகும். இதன் பின்னர் 2010 இல் நடந்த தேர்தல்தான் மிகவும் மன வேதனைக்குள்ளான, தமிழ் மக்கள் பங்குபற்றிய சனாதி பதித் தேர்தலாகும். தமிழின அழிப்பு நடந்து குருதிச் சுவடுகள் காயாத நிலையில் உறவுகளை, உடன்பிறப்பு களை, சொந்தபந்தங்களை, உடைமைகளை, குடியிருப்பு களை முற்றிலும் இழந்த நிலையில் தமிழினம் துன்பக் கடலில் மூழ்கி இருந்தபொழுது தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் ரணில் போட்டியிட்டால் தான் வெற்றி அடைய மாட்டார் என்று நன்கு தெரிந்ததால் போரை நடத்திய சனாதிபதிக்கு எதிராக போருக்குத் தலைமை தாங்கி நடத்திய இராணுவத் தளபதியைப் போட்டியிடவைத்தார..

தமிழர்களை வென்றவர் யார்? என்ற போட்டிதான் அங்கு நடந்தது. வேதனையுடன் இருந்த மக்களுக்கு இத்தேர்தல் தேவைதானா? என்று சிந்திக்காது போரை நடத்திய இராணுவத் தளபதியை ஆதரிக்குமாறு வேண்டுகோள் விடுத்தது த.தே.கூ. சரத் பொன்சேகாவை த.தே.கூ. ஆதரித்தும் மகிந்த மிகப் பெரிய வெற்றியைப் பெற்றார் என்பதுதானே உண்மை. த.தே.கூ. தேர்தலைப் புறக்கணித்து ஒரு செய்தியை உலகுக்குக் கூறியிருக்கலாம். எவ்வளவு இன்னல்கள் வந்தாலும், துன்ப துயரங்கள் நேர்ந்தாலும், தமிழினம் தனது உரிமைகளை விட்டு விடாது என்று உலகம் அன்று அறிந்திருக்கும். உலக நாடுகள் இந்தியா, அமெரிக்கா உட்படப் பல நாடுகளின் ஆதரவினால்தான் அப்போரை வென்றது மகிந்த அரசு. ஆனால் நீங்கள் எம்மைப் போரில் வெல்லலாம், ஆனால் எமது அடிப்படை உரிமைகளை நாம் விட்டுவிடவில்லை என்று தேர்தலைப் புறக்கணித்து உலகத்துக்கு காட்டியிருக்க வேண்டிய சந்தர்ப்பத்தை இழந்து நின்றது தமிழினம். ஆனால் தேர்தலைப் புறக்கணிக்கும் படி கூறியவர்களை இன்றளவும் மகிந்தவின் ஆள்கள் என்று கூறி இனத்தை அயல் நாடுகளின் தேவைகளுக்காகப் பயன்படுத்தியதே த.தே.கூ வின் செயல்களாகும் அத்தேர்தலைப் புறக்கணிக்கும்படி கூறிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியைக் குறை சொல்வதும் அவர்களை மகிந்தவின் ஆட்கள் என்று கூறியவர்கள் இன்று கோத்தாவின் ஆட்கள் என்றும் எழுதி வருகின்றனர். .முன்பு தேர்தல் புறக்கணிப்பை வரவேற்றவர்கள் முக்கியமாக உலகுக்குக் காட்ட வேண்டிய நேரத்தில் தேர்தலைப் புறக்கணிக்கச் சொன்னவர்களைக் குறை காண்பது ஏனோ தெரியவில்லை. இந்நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இன்னமும் தேர்தலில் தமிழ் மக்களின் பங்களிப்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்று இன்னமும் கூறவில்லை.

அடுத்து தமிழ் மக்கள் கூட்டணி என்று கட்சி தொடங்கி இதுவரை அதன் அடிப்படைக் கொள்கைகளையும் கட்சி யாப்பையும் அறிவிக்காது கட்சியைப் பதிவு செய்யாமலும் இருக்கும் விக்கினேஸ்வரன் தமிழ் மக்கள் கோத்தபாயாவுக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்று கூறியுள்ளார். அதே நேரம் தமிழர்களுக்கு எழுத்து மூலம் மூன்றாம் தரப்புக்கு முன் உரிமைகளுக்கான உறுதி அளிக்கும் நபரை தமிழ் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் சொல்லியுள்ளார். எந்தக் கட்சியும் வேட்பாளரும் இவ்வாறு உறுதி அளிக்கப் போவதில்லை.எனவே இது பொருந்தக் கூடிய கூற்றல்ல.. விக்கினேஸ்வரன் ஓய்வு பெற்று வாழ்ந்துகொண்டிருந்தவர். அவர் போரின் துன்பங்களைக் கண்டு ஆறுதல் கூறிய வரும் அல்ல. வடமாகாண முதலமைச்சர் பதவியைக் காட்டி அரசியலுக்கு அழைத்து வரப்பட்டவரே அவர். அதன் பின்னர் அவருக்கு தமிழ் மக்கள் பேரவைத் தலைமையும் கிடைத்தது. அவர் அரசியலுக்கு வரும்பொழுதே அவரை அழைத்து வந்தவர்கள், தாயகம் தேசியம் என்பனவற்றைக் கைவிட்டு அரசியல் நடத்துபவர்கள் என்று தெரியாமல் அவர்களுடன் சேர்ந்து வந்தவர்.

பின்னர் அவர்களுடன் ஏற்பட்ட நெருடல்களினால் முதலமைச்சர் பதவிக்காலம் முடிந்தபின் அவர்களை விட்டு விலகித் தனிக் கட்சியமைத்து தன்னுடைய கட்சியில் வந்து சேருமாறு அழைப்பு விட்டவர் அவர். இது ஒரு புதுமையான நிகழ்வாகும் . கட்சி தொடங்குகிறேன், மார்க்சிசக்கட்சிகள் எல்லாம் வந்து எனது தலைமையில் சேருங்கள் என்பது தலைமைப் பதவி தன்னிடம் இருக்க வேண்டும் என்ற ஒரு வேட்கை என்றுதானே கூற முடியும்.இன்று வரை கட்சி பதியப்பட வில்லை தாயகம் தேசியம் பற்றிய நிலைப்பாடு தெரியவில்லை அப்படி இருக்கும்பொழுது எவ்வாறு அனைவரும் ஒன்று சேரமுடியும். அவரும் கோத்தாவுக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்று கூறியதுடன் தமிழ் மக்கள் செய்ய வேண்டியதை நேரடியாக இது வரை சொல்லவில்லை. எனவே தமிழ்த் தலைமைகள் தமிழ்மககளுக்குச் சரியான வழியைக் காட்ட முடியாமலே இருக்கின்றன என்பதே இன்றைய உண்மையான நிலைப்பாடாகும்.

# போராட்டத்தின் ஆன்ம பலத்தை உணரவும் யோக்கியதை வேண்டும்!


பகலவன்

தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டம் என்பது தனியே ஆயுத பலத்துடன் மட்டும் முன்னெடுக்கப்பட்டதல்ல. மக்களின் பங்களிப்பு அதீதமாயிருந்தது. அதிலும் பெண்களின் பங்களிப்பு காத்திரமானது. அதில் குறிப்பிட்ட சில விடயங்களை பிரபல அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் அண்மையில் சுட்டிக்காட்டினார். “அடைக்கலம் தந்த வீடுகளே – குலம் அக்காவை நினைவு கூர்ந்து சில குறிப்புகள்” என்ற தலைப்பில் தமிழர் தளத்தில் இவை வெளியாகின. அதில் சில விடயங்களைக் கவனத்தில் கொள்வோம்.

“ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பது களில் படைத்தரப்பு தெருக்களில் பயமின்றி திரிந்த ஒரு காலகட்டத்தில் துணிந்து தமது வீடுகளில் போராளிகளை பதுக்கி வைத்துப் பாதுகாத்த பல பெண்கள் உண்டு.

அக்காலகட்டத்தில் நடு இரவில் கிராமத்தில் எங்கேயோ ஒரு வீட்டில் முட்டை பொரிக்கும் வாசம் அல்லது குழம்பு கொதிக்கும் வாசம் வருமாக இருந்தால் அந்த வீட்டில் யாரோ ஒரு போராளி அல்லது பல போராளிகள் நடு இரவில் வந்திருக்கிறார்கள் என்று அர்த்தம். இந்த அம்மாக்களும் அக்காக்களும் அனேகமாக ஏதோ ஒரு இயக்கத்துப் போராளியின் தாயாக இருப்பார்கள். அல்லது சகோதரியாக இருப்பார்கள். அல்லது பொதுவில் குறிப்பிட்ட இயக்கத் தின் தீவிரமான ஆதரவாளர்களாக இருப்பார்கள்.

இப்படிப்பட்ட வீடுகளுக் குள்தான் போராட்டத்தின் ஆரம்ப கட்டத் தலைவர்கள் அனேகமானவர்கள் மறைந்திருந்தார்கள். இந்த வீடுகளில்தான் அவர்கள் இரகசிய மாகச் சாப்பிட்டார்கள். அவர்கள் எப்பொழுது போனாலும் அந்த வீடுகளின் படலைகள் அவர்களுக்காக இரகசியமாக திறந்தன. இந்த வீட்டின் அடுப்புகள் அவர்களுக்காக நடு இரவிலும் எரிந்தன. அந்த வீடுகளுக்குள்தான் அக்காலகட்டத்தில் ஆயுதப் போராட்டத்தின் பெரும்பகுதி அடைக்கப்பட்டது. பின்னாளில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஒரு பாடலில் “அடைக்கலம் தந்த வீடுகளே..” என்று மகிமைப்படுத்தப்படும் வீடுகளுக்குரிய அம்மாக்களும் அக்காக்களும் இவர்கள்தான். இவர்களிற் சிலர் படையினரின் சுற்றிவளைப்புக்களின் போது அதிகம் 'ரிஸ்க்' எடுத்ததும், கடத்தப்பட்டதும், காணாமல் ஆக்கப்பட்டதும் சிறைக்குப் போனதுமுண்டு. இவர்கள் இல்லையென்றால் ஆயுதப் போராட்டம் அதன் பிந்திய வளர்ச்சிகளை பெற்றிருக்காது. இவர்களால் பாதுகாக்கப் பட்ட பல இளம் போராளிகள் பின்னாட்களில் பெரும் தளபதிகளாக அரசியற் பிரமுகர்களாக மேலெழுந்தார்கள். இந்த அக்காக்களும் அம்மாக்களும் தமக்கு விருப்பமான போராளிகளுக்காக விரதம் இருந்தார்கள். சிலர் ஒருவேளை உணவை அருந்தினார் கள். வேறு சிலர் பாண் மட்டும் சாப்பிட் டார்கள். இன்னும் சிலர் மச்சம் சாப்பிடாமல் விட்டார்கள். இவருடைய விரதங்கள் பல வகைப்படும். முழுமையாக அல்லது பகுதியாக உணவைக் குறைப்பது, தீச்சட்டி சுமப்பது, பிரதட்டை, அடி அளப்பது என்று எல்லாவிதமான விரதங்களையும் இவர்கள் அனுஸ்டித்தார்கள். பெரும்பாலான எல்லாக் கோயில்களிலும் இவர்கள் நேர்த்தி வைத்தார்கள். இந்த


அன்னைபூபதி


குலம் அக்கா


பூரணலட்சுமி

அம்மாக்கள் அக்காக்களின் வயிற்றில் விடாது எரிந்த அந்த விரத நெருப்பு போராட்டத்திற்கான ஒரு ஆன்மீகப் பலமாக இருந்தது.

இந்த அம்மாக்கள் அக்காக்களில் அனேகர் அரசியலை ஓர் அறிவியல் ஒழுக்கமாக பார்த்ததில்லை. தமக்கும் குறிப்பிட்ட ஒரு போராளிக்கும் அல்லது போராட்ட இயக்கத்துக்கும் இடையில் உள்ள உறவினடிப்படையில் தாய்மை பாசம் போன்ற உணர்வுகளுக்கூடாகவே அவர்கள் போராட்டத்தையும் அரசியலையும் அணுகினார்கள். போராட்டத்துக்கும் அவர்களுக்குமான உறவு அதிகபட்சம் உணர்ச்சிகரமானது. அப்பாவித்தனமானது. உண்மையானது.”

• • •

அன்னை பூபதியின் உண்ணாநோன்பு போராட்டமும் காத்திரமானது. தமிழரின் போராட்டம் சாரம் கட்டிய பெடியன்களின் விளையாட்டு எனக் கருதிய இந்தியத்தரப்பின் கருத்துருவாக்கத்தை தகர்த்தெறிந்தது அன்னையின் ஈகம்.

இது போலவே அன்ரி என அழைக்கப்படும் திருமதி பூரணலட்சுமி சின்னத்துரையின் பங்களிப்பும் இருந்தது. நிலாந்தன் குறிப்பிடும் குலம் அக்காவின் பங்களிப்புடன் மேலும் பல வகையில் இனத்துக்குத் தொண்டாற்றினார் இவர். அன்னை பூபதியின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் ஏறாவூரில் பசீர் சேகுதாவூத்தின் (ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்) ஏற்பாட்டில் முஸ்லிம் அன்னையர் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இராசலிங்கம் (பன்குடா வெளி) , சந்துரு (ஏறாவூர்) முதலான ஈ.பி.ஆர்.எல்.எவ் தோழர்கள் இந்த முஸ்லிம் அன்னையரின் மண்டைகளை உடைத்தனர். பூரணலட்சுமி ஆரையம்பதி மற்றும் அயல்கிராம அன்னையர்களைத் திரட்டிக் கொண்டுபோய் பூபதி அம்மாவின் போராட்டத்துக்கு வலுச்சேர்த்தார். மேலும் இந்தியப்படைகளின் சிறையில் இருந்த போராளிகளை ஏதோ ஒரு உறவுமுறையைச் சொல்லிக்கொண்டு போய் சந்தித்து தன்னாலான பொருட்கள், உணவுகளை வழங்கி வந்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு போராளியின் விடுதலைக்காக திருக்கேதீஸ்வரம் கோவிலுக்கு நேர்த்தி வைத்திருந்தார் இவர். இப்போராளியின் விடுதலை பற்றிய செய்தி அறிந்ததும். அந்த நேர்த்தியை நிறைவு செய்துவிட்டு பிரசாதத்துடன் யாழ்ப்பாணம் வந்தார். அதனை வழங்கிய போது அவரது கையில் பெரிய காயத்தைக் கண்டார் அப்போராளி. அதைப்பற்றி விசாரித்த போது ஈ.பி.ஆர்.எல்.எவ் இனர் கம்பியைப் பழுக்கக் காய்ச்சிச் சுட்டதாக சர்வசாதாரணமாகச் சொன்னார். கண்கள் பனிக்க நின்ற அந்த போராளியிடம் ஒரு வேண்டுகோளை விடுத்தார். ஈ.பி.ஆர்.எல். எவ் உடனான மோதலின் போது கைது செய்யப்பட்ட இளைஞர்கள் விடுவிக்கப்பட



வேண்டும் என்றார் அவர். தாய்மையின் உணர்வில் இயக்க வித்தியாசம் தெரியாது அனைவரும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற மனிதாபிமானம் இருக்கும். தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் மறந்துபோகும் என்பதை உணர்ந்தார் அப்போராளி.

இரண்டாம்கட்ட ஈழப்போர் தொடங்கியதும் ரெலோவின் மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத்தளபதி ஜனா (கோவிந் தன் கருணாகரம்) எழுவான்கரையில் இருந்து படுவான்கரைக்கு எவரும் தோணியில் ஏறிச்செல்லக்கூடாது எனத்தடை உத்தரவு பிறப்பித்தார். அந்த தடையை மீறி ஒரு தோணிக்காரரின் துணையுடன் படுவான்கரைக்குச் சென்று போராளிகளைச் சந்தித்தார் அன்ரி. தனது தடையை மீறி அங்கு சென்றதிற்காக அவருக்கு மரணதண்டனை விதித்தார் ஜனா. அதனை நிறைவேற்றினர் அவரது சகாக்கள்.

யுத்தம் முடிந்ததும் பல மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டதில் பெண்களுக்கு கணிசமான பங்குண்டு. காணாமல்ஆக்கப்பட்டோர் விவகாரம், கைதிகள் விடுதலை, காணிவிடுவிப்பு போன்ற முதலான போராட்டங்களில் பெண்களே பெருமளவு பங்குபற்றி வருகின்றனர்.

• • •

13.8.2019 அன்று அம்பாறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் சுமந்திரன் “அரசுடனான பேச்சுவார்த்தையில் இருந்து எம்மை விலகும்படி பலர் கேட்கிறார்கள். பேச்சில் இருந்து விலகிவிட்டு நாம் ஆட்லறி அடிப்பதா?” எனக் கேள்வி கேட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சுமந்திரனைப் பொறுத்தவரை தான் நக்கலடித்துவிட்டதாக, கேள்விகேட்டவரை மடக்கிவிட்டதாக கொலரை இழுத்துவிட்டுக் கொள்ளலாம். போராட்டத்தின் வலி தெரியாதவர்கள், பங்களிப்பின் பெறுமதி தெரியாதவர்கள் எமது இனத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் பதவிகளில் இருப்பது சாபக்கேடே.

தென்னிந்திய திருச்சபை தொடர்பான வழக்கொன்றில் ஒரு தரப்பினருக்காக வாதிட கிளிநொச்சி நீதிமன்றுக்கு வந்தார் சுமந்திரன். மறுதரப்பினரை சுட்டிக்காட்டி இவர்கள் பயங்கரவாதிகளுடன் தொடர்புபட்டவர்கள் என்று நீதிபதியிடம் சொன்னார் அவர். 2009 வரை கிளிநொச்சியில் ஒரு நிழல் அரசாங்கம் இருந்தது என்பதே இவருக்கு தெரியாதுதான். ஒரு கைத்துப்பாக்கியில் இருந்து இவர் சொல்லும் ஆட்லறி மற்றும் கவசவாகனங்கள், விமானங்கள், கப்பல்கள் எனப் போராட்டம் விரிவடைந்தது என்றால் அதற்காகக் கொடுக்கப்பட்ட விலை என்ன என்பதும் இந்த ஜனாதிபதி சட்டத்தரணிக்கு தெரியாது. இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளராகவும் ஐ.தே.வின் உத்தியோகபற்றற்ற பேச்சாளராகவும் திகழ்கிறார். ரணிலின் பதவிபறிக்கப்பட்ட போது இவர் துடித்ததுடிப்பு, ஆற்றிய பங்களிப்பை கைதிகள்விடுதலை, காணிவிடுவிப்பு போன்றவற்றில் காணமுடியவில்லை. அரசியல்கைதிகள் என்று எவரும் இல்லை என நீதியமைச்சர் தலதா அத்துக்கோறளை குறிப்பிட்ட போதும் விசமத்தனமாக மௌனம் காக்கிறார்.

தமிழரின் தீர்வுதொடர்பான சட்டமூலம் நிறைவேற்றப்படாவிட்டால் தான் அரசியலில் இருந்து ஒதுங்கப்போவதாக இவர் தெரிவித்த கருத்து மட்டும் மக்களின் நினைவில் உள்ளது. 2009 வரை சம்பந்தனின் கோவைகளை தூக்குபவராக இருந்த இவர் இப்படிப் போராட்ட பங்களிப்பை கொச்சைப்படுத்துவார் என்று யார் கண்டார். ஆயுதப் போராட்டம் மௌனித்தது போலவே சுமந்திரனின் அரசியல் பிரவேசமும் தமிழரின் தோல்வியாகவே கருதப்படுகிறது. •

துன்னாலை செல்வம்

# 'Banker of Jaffna'

## 'சரா'வுக்கு ரணில் சூட்டிய பட்டம்

யாழ்ப்பாணத்துக்கு கடந்தவாரம் வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 3 நாட்கள் நின்று என்ன செய்தார் என்றால் ஒன்றுமே செய்யவில்லை என்று தான் கூறவேண்டும். துறைமுகத்தை கையளித்தல் புதிதாக கட்டிய வீடுகளை கையளித்தல் அபிவிருத்தி பணிகளைப் பார்வையிடல் அபிவிருத்தி குழு கூட்டத்தில் கலந்துகொண்டது வரை முழுமையான ஒரு விடயம் இடம்பெற்றுள்ளது என்று சொன்னால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் புனரமைக்கப்படாமல் உள்ள 3 வீதிகளின் புனரமைப்பு தொடர்பில் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் பிரதமர் ரணில் தலைமையிலான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பேசப்பட்ட அதே விடயம் ஒருவிதமான மாற்றம் இன்றி கடந்த வாரமும் பிரதமர் ரணில் தலைமையில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பேசப்பட்டது. வழுக்கையாறு-புங்குடுதீவு- குறிகட்டுவான் வரையான 26.5 கிலோமீற்றர் நீளமான வீதி சுமார் 12000 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்படும் என கூறப்பட்டது. யாழ்ப்பாணம்-மானிப்பாய் - காரைநகர் வரையான 27.21 கிலோமீற்றர் வீதி 3500 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்படும் என கூறப்பட்டது. யாழ்ப்பாணம்-பொன்னாலை - பருத்தித்துறை 55.38 கிலோமீற்றர் வீதி 4000 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்படும் என கூறப்பட்டது. இந்நிலையில் இதற்கான கேள்வி கோரல்கள் விடுக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்த வீதிகளின் புனரமைப்பு தொடர்பில் உறுதி வழங்கப்பட்டு 6 மாதங்களின் பின்னரும் எந்தவிதமான புனரமைப்பு பணிகளும் செய்யப்படவில்லை. கடந்த கூட்டத்தில் இந்த வீதிகளின் அபிவிருத்தி தொடர்பில் திரையிட்டு காட்டப்பட்டு அதே திட்ட வரைபு ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் மீண்டும் திரையிடப்பட்டது. அதுமட்டுமல்லாது சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரி கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் கூறியது போன்று குறித்த வீதிகளின் புனரமைப்புக்கான கேள்வி கோரல்கள் கோரப்பட்டதாக ஒப்புவித்தார். இந்தக் கூட்டத்திலும் உறுதியான முடிவின்றி பிரதமர் தலைமையில் அனைவரும் கூடிப் பேசி கலைந்து சென்றனர்.

யாழ். வடமராட்சி கிழக்கு பகுதியில் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட 5765 ஹெக்ரயர் நிலப்பகுதிக்கான வர்த்தமானி அறிவித்தலை மீள பெறுமாறு வழங்கிய உத்தரவை 6 மாதங்களாக மேற்படி திணைக்களம் நடைமுறைப்படுத்தாமல் இருந்துள்ளதுடன், கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் குறித்த திணைக்கள அதிகாரி திணறினார். நாகர்கோவில் கிழக்கு பகுதியில் சுமார் 1237 ஹெக்ரயர் நிலப்பகுதியையும், சுண்டிக்குளம் பகுதியில் 4528 ஹெக்ரயர் நிலப்பகுதியையும் வனஜீவராசிகள் திணைக்களம் கையகப்படுத்தியுள்ளது. இந்த விடயம் கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பேசப்பட்டது.

மக்களுடைய விவசாய நிலங்கள், மீன்பிடிக்கும் இடங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் குடியிருப்புக்கள் இவற்றுக்குள் அடக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. இந்நிலையில் குறித்த பகுதியை கையகப்படுத்த வனஜீவராசிகள் திணைக்களம் வெளியிட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெறுமாறு பிரதமர் திணைக்களத்திற்கு உத்தரவிட்டார். இந்நிலையில் அதே விடயம் பிரதமர் தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பேசப்பட்டது. எதற்காக அந்த வர்த்தமானி அறிவித்தல் மீளப் பெறப்படவில்லை? என பிரதமர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளிக்க முடியாமல் திணறிய திணைக்கள அதிகாரி மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் உள்ளிட்ட சில திணைக்களங்களின் அனுமதி வேண்டும் என கூறினார். ஆனால் அவ்வாறான அனுமதி வர்த்தமானி அறிவித்தல் செய்வதற்கே தேவை. அதனை மீளப் பெறுவதற்கு தேவையில்லை என பிரதமர் கூறியதுடன், உடனடியாக அந்த வர்த்தமானி அறிவித்தல் மீளப் பெறப்படவேண்டும் என பிரதமர் இரண்டாவது தடவையாக குறித்த திணைக்களத்திற்கு உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதற்கிடையில் வனஜீவராசிகள் திணைக்களத்தின் விடயம் பேசப்படுகையில் கோபமடைந்த வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் வடமராட்சி களப்பு குடிநீர்த் திட்ட விடயத்திலும் இந்த திணைக்களம் மிகமோசமாக நடந்து கொண்டதாகவும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அனுப்பட்ட செயற்றிட்டம் தொடர்பான விடயங்களை சிங்கள மொழியில் தருமாறு தன்னிடம் கேட்டதாகவும் கூறியதுடன், வடமாகாணத்தில் எதற்காக சிங்கள மொழியில் தரவேண்டும் எனவும் கேட்ட நிலையில் பிரதமர் குறுக்கிட்டு அவரை ஆற்றுப்படுத்தியுள்ளார். என்ன ஆற்றுப் படுத்தினாலும் வனஜீவராசிகள் திணைக்களத்தில் தமிழ் தெரிந்த அதிகாரிகள் இல்லை அதனால் தமிழ் அதிகாரிகள் அல்லது தமிழ்பேசத் தெரிந்த அதிகாரிகள் தேவை என்பதை வலியுறுத்தினர் அவ்வளவுதான். அடுத்த கூட்டத்திலும்



இந்தப் பிரச்சினை தொடரும் என்பது கண்கூடு.

பலாலி விமான நிலையத்தின் பெயரால் வல்வளைப்பு செய்யப்பட்டிருக்கும் பொதுமக்களின் காணிகளே இரண்டாயிரம் ஏக்கருக்கும் அதிகம். அத்துடன் வலி வடக்கு பகுதியில் இவ்வாறு வல்வளைப்பு செய்யப்பட்டிருக்கும் பொதுமக்களின் காணிகள் மூவாயிரம் ஏக்கருக்கும் அதிகம். உண்மை நிலை இதுவாக இருக்கையில் யாழ் மாவட்டத்தில் இன்னும் 900 ஏக்கர் காணிகள்தான் விடுவிக்க வேண்டும் என்று பிரதமர் பொய் கூறியுள்ளார். கூட்டமைப்பின் தலைவர்களை உடன் வைத்துக்கொண்டே இந்த பொய்யை உரைத்துள்ளார். தமது கள்ளமௌனத்தின் மூலம் இதனை வழிமொழிந்த கூட்டமைப்பினர் அதன் பின்னர் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலும் அது தொடர்பில் வாய் மூடி மௌனிகளாக இருந்துள்ளார்கள் என்பது மக்களுக்கு கிடைத்த சாபக்கேடாகும்.

மத்திய அரசாங்கத்தின் 2015ம் ஆண்டுக்கான பாதீட்டில் குருநகர் மீன்பிடி துறைமுகத்தின் புனரமைப்பிற்கான நிதி ஒதுக்கப்பட்டபோதும், அது பின்னர் காணாமல்போயுள்ளதாக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியிருந்த நிலையில், குருநகர் மீன்பிடி துறைமுகம் புனரமைத்து கொடுக்கப்படும் என பிரதமர் கூறியுள்ளார்.

வடமராட்சி கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட உடுப்பிட்டி பகுதியில் அமைக்கப்பட்ட 10 புதிய வீடுகள் கையளிப்பு மற்றும் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு முற்பகல் 11 மணிக்கு இடம்பெறுமென பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் பயனாளிகளை காலை 8.30 மணி முதல் 9 மணிக்கு முன்னதாக வருமாறும் அழைப்பு விடப்பட்டிருந்தது. இதற்கமைய குறித்த நேரத்திற்கே வந்த பொது மக்கள் மற்றும் பயனாளிகள் பாதுகாப்பு சோதனைகளின் பின்னர் நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்த நிகழ்வுக்கு அழைத்து வரப்பட்டவர்களும் அந்த நேரத்திற்குள் கொண்டு வரப்பட்டனர்.

நிகழ்வு ஆரம்பமாகுமெனக் குறிப்பிட்ட முற்பகல் 11 மணிக்கு பிரதமர் உள்ளிட்ட அதிதிகள் வருகை தராதமையினால் அங்கிருந்த பலரும் கடும் விசனமடைந்திருந்தனர். சிலர் அங்கிருந்து செல்ல முயன்றபோது, அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டனர். மாலை இரண்டு மணிக்கு பிரதமர் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் நிகழ்விடத்துக்கு வந்து 5 நிமிடத்தில் நிகழ்வை முடித்துச் சென்றனர். இதனால் நிகழ்வில் கலந்த கொள்ள வந்திருந்த பலரும் கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்தனர்.

அதே நேரம் இந்த வீட்டுத்திட்டம் கையளிப்பு மற்றும் காணி உறுதிப்பத்திரங்களை பெறும் பயனாளிகளைத் தவிர சமுர்த்தி உள்ளிட்ட வேறு திட்டங்களில் உள்வாங்கப்பட்ட பயனாளிகளும் நிகழ்விற்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதற்கான உதவிகளும் வழங்கப்படும் என அவர்களிற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை. இவ்வாறு அழைக்கப்பட்ட பயனாளிகள் பொது மக்கள் என அனைவரும் ஐந்து மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

மயிலிட்டி மக்கள் புறா கூடுகளைப்போன்ற வீடுகளுக்குள் வாழ்ந்தவர்கள் அல்ல. வசதியான பாரிய வீடுகளில் வாழ்ந்தவர்கள். எங்களுடைய சொந்த காணிகளுக்காக நாங்கள் வழக்குத் தொடர்ந்த பின்னர் எங்களுடைய வீடுகள் இடித்து அழிக்கப்பட்டன. அரசாங்கத்தினால் அழிக்கப்பட்ட வீடுகளை அரசாங்கமே மீள வழங்கவேண்டும் என வலி.வடக்கு மீள்குடியேற்ற குழுவின் தலைவர் குணபாலசிங்கம் பிரதமரிடம் கோரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளார்.

மயிலிட்டி மீன்பிடி துறைமுகம் முதலாம் கட்ட புனரமைப்பின் பின் பிரதமரால் மயிலிட்டி மக்களிடம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் அங்கு மேலும் கூறுகையில்,

1990ஆம் ஆண்டு யூன் மாதம் 13ஆம் திகதி நாங்கள் மயிலிட்டியை விட்டு வெளியேறும்போது இந்த துறைமுகத்தில் 400 கடற் கலங்களை விட்டுச் சென்றோம். அத்தனையும் எங்களுக்கு சொந்தமானது. எங்களுக்கு சொந்தமான எங்களுடைய நிலங்களை கேட்டு நாங்கள் போராட்டங்களை நடத்தினோம். எங்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்ட சம்பங்களும் உண்டு.

ஆகவே அரசாங்கம் அழித்த வீடுகளை அரசாங்கமே மீள கொடுக்கவேண்டும். வீட்டுதிட்டத்திற்காக இப்போது எமக்கு வழங்கப்படும் 10 லட்சம் ரூபாய் பணம் போதாது. 30 லட்சம் ரூபாய் பணம் தேவைப்படுகின்றது. அதற்கு மேலாக மயிலிட்டியில் வைத்தியசாலை, பாடசாலைகள் உரிய வசதிகளுடன் ஆரம்பிக்கப்படவேண்டும். மேலும் மயிலிட்டியில் தொடர்ந்தும் நிலைகொண்டுள்ள கொமாண்டோ முகாம் அகற்றப்படவேண்டும். அதனை அகற்றினால் 400 குடும்பங்களை அங்கே குடியேற்றலாம் என்றார்.

இப்படியாக தமிழ் மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் நிறைய இருக்கும் போது பிரதமர் யாழ் பயணம் தமிழ் மக்களுக்கு நன்மையைக் கொடுத்திருக்கிறது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு சொல்லலாம். ஏனெனில் அவர்கள் அரசை விமர்சிக்கப் போவதில்லை. வேறு என்ன செய்ய முடியும் ஆட்லறியா அடிக்க முடியும் என்று சொன்னதில் இருந்து இவர்களால் முடியாது என்பதை மட்டும் புரிந்து கொள்ள முடியும்.

"யாழ்ப்பாண அபிவிருத்தி தொடர்பில் எங்களுக்கு அதிகம் பிரச்சினை இல்லை. வடக்குக்குத் தாராளமாக எமது அரசு நிதியை வழங்குகின்றது. வடக்குக்கான அபிவிருத்திக்கு நிதி வேண்டுமானால் சர்வதேச நாடுகளிடம் இருந்தும் தாராளமாகப் பெறமுடியும். அப்படியும் இல்லாவிட்டால் இங்கு Banker of Jaffna இருக்கின்றார். அவரே தாராளமாக அபிவிருத்திக்கு நிதி வழங்கி உதவுவார்" என்று பிரதமர் கூறியிருக்கிறார்.

பிரதமருக்கும் Banker of Jaffna வாக இருப்பவருக்கும் தொடர்பு இருக்கிறது. அந்தத் தொடர்பு நிதி சம்பந்தப்பட்ட தொடர்பாக இருக்குமோ என்று மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். இப்படி இருக்கும் இவருக்கு தமிழ் மக்கள் தீர்வு விடயத்தில் அரசுடன் பேசுவதற்கு எப்படி கட்ஸ் இருக்கும் என்பது கேள்விக்குறியே.

தமிழ் மக்களின் பிரச்சினையை அடகு வைத்து பணம் சம்பாதிக்கும் அரசியல்வாதிகளை எந்த இடத்தில் வைக்க முடியும். தமிழ் மக்கள் தான் சொல்ல வேண்டும்.

# மக்கள் வழக்காற்றியமும் பண்பாட்டுக் கற்கையும்

## பாடநெறி உருவாக்கத்தின் தேவைப்பாடு

- கி.கலைமகள்


மக்கள் வழக்காற்றியலும் பண்பாட்டுக்கற்கையும் - பாடநெறி உருவாக்கத்தின் தேவைப்பாடு.

Folklore என்னும் பதம் நாட்டுப்புறவியல், நாட்டார் வழக்காற்றியல், நாட்டாரியல் போன்ற பல வாதப்பிரதிவாதங்களுக்கு உட்பட்ட சொல்லாக காணப்படுகின்றது. Folk என்பது நாடு, கிராமம், ஊர் என்னும் சொல்லை குறிக்கிறது. ஒரு குறிப்பிட்ட பகுதியை தன் வாழ்தல் எல்லையாகக் கொண்டு வாழும் மக்களின் வாழ்வியல், பண்பாடு, நம்பிக்கை, பாரம்பரியம் அனைத்தையும் (Lore) வழக்காறு என அடையாளப்படுத்தலாம். நாட்டார் என்னும் சொல் குறிப்பிட்ட ஊர் கிராமம் சார்ந்த வரைவிலக்கணத்தை தருவதோடு நாடார், நாட்டார் என சாதிய ரீதியான அர்த்தத்தினையும் தருவதனால் மக்கள் வழக்காற்றியல் என இங்கு பயன்படுத்தப்படுகின்றது.

இந்தியாவில் தமிழகத்தில் சமூகப்பண்பாட்டுடன் இணைத்து வழக்காறுகளை முன்வைத்தவராக நா.வானமாமலை விளங்குகின்றார். இலங்கையில் சி.வி.வேலுப்பிள்ளை, பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் சு.வித்தியானந்தன், தமிழருவி.ச.சண்முகசுந்தரம், வி.சி.கந்தையா, மு.ராமலிங்கம், முல்லைமணி, க.கங்கேஸ்வரி, அன்புமணி போன்றோர்களைக் கூறலாம். தொகுப்பு சேகரிப்பு போன்றவற்றுடன் களாய்வுகள் மூலம் வழக்காறுகளை சேகரித்து பதிப்பித்தனர். கங்கேஸ்வரி கந்தையாவின் ஆடகசவுந்தரி என்னும் உள்ளூர் வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று நாடகத்தினை உருவாக்கினார். ஆனால் இதனைத் தொடர்ந்து சமூகவியல், மொழியியல் துறைகளில் ஒரு பகுதியாக பார்க்கப்பட்டதே தவிர தனிப்புலம் சார்ந்த செயற்பாடுகள் இடம்பெறவில்லை என்றே கூறலாம். தொடர்ந்தும் ஏனைய துறைகளுக்கு பங்களிப்புச் செய்யும் துறையாகவும் தமிழ் இலக்கிய அறிவுத்தளத்தில் செயற்படும் ஒரு விடயமாகவே அதன் மொழி ரீதியான அழகியல் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளது.

1970 களுக்குப் பின்னர் மட்டக்களப்பில் பல்கலைக்கழகங்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், சிறு குழுக்கள், என்பன இலக்கிய விழா, முத்தமிழ்விழா, கலைவிழாக்கள், போன்றவை மூலம் வழக்காறுகளை நிகழ்த்துதல் தளத்திலும் உரையாடல் தளத்திலும் இயங்கச் செய்தன. இதன் தொடர்ச்சியாய் கலைஞர்கள் கௌரவிப்பு, பாரம்பரிய கலை நிகழ்த்துதல்கள், மாநாடுகள் என்பன தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. கிழக்குப் பல்கலைக்கழகத்தில் குறிப்பாக நுண்கலைத்துறையினரின் பட்டிப்பொங்கல் விழா, மாமாங்க ஆலயத் திருவிழாவில் இடம்பெறும் பாரம்பரிய கலைவிழா போன்ற செயற்பாடுகள் இங்கு குறிப்பிடப்படவேண்டியவை.

உள்ளூர் கலை பண்பாட்டு வடிவத்தினை சமூகப்புரிதலுடனும் கோட்பாட்டுத்தளத்தில் நின்றும் செயற்பட்ட குழுவினரில் மூன்றாவதுகண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டு நண்பர் குழு முக்கியமானவர்கள். உள்ளூர் உற்பத்தி, உள்ளூர் கலைகளுக்கும் உள்ளூர் உற்பத்திக்குமான உறவு நிலை, இயற்கையுடன் இணைந்து வாழ்தலின் முக்கியத்துவம், சுயமான வன்முறையற்ற வாழ்தலை உள்ளூர் வாழ்தல் முறையில் நின்று 2000 களில் மூன்றாவதுகண் உள்ளூர் அறிவுத் திறன் செயற்பாட்டு நண்பர் குழு முன்வைத்தது. இவர்களின் மாநாடுகள், ஆய்வரங்குகள், மடை போன்ற



கலைவிழாக்கள், கூத்துமீளுருவாக்கச் செயற்பாடு, சிறுவர் கூத்தரங்கு போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கை நிறுவகத்தின் பணிப்பாளராக கலாநிதி சி.ஜெயசங்கர் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் முக்கியமானவை. பாரம்பரிய கலைஞர்களும் பல்கலைக்கழக மாணவர் விரிவுரையாளர்களுடனான உரையாடல்கள், உள்ளூர் வாத்திய மரபிற்கான துறை உருவாக்கம், உள்ளூர் இசை நடன வடிங்கள் நடன, இசைத்துறையில் இணைக்கப்பட்டல், பாரம்பரிய உணவும் தத்துவ மரபும் பாடநெறி போன்றவற்றைக் கூறலாம். அத்துடன் தொட்டுணராப் பண்பாடு சார் சர்வதேச மாநாடுகள், கருத்தரங்குகள் என்பன உலகத்தரத்திலான செயற்பாட்டாளர்களை பரீட்சயமாக்கியுள்ளன. இத்தகைய செயற்பாடுகள் மக்கள் வழக்காற்றியத்தினை தனிப்புலமாக உருவாக்கும் முக்கியத்துவத்தினை உணர்த்திருக்கிறது. மக்களின் வழக்காற்றினை புரிதல் அதன் பல்தன்மை பற்றிய ஆய்வுகளின் தேவைப்பாட்டினை கூர்மைப்படுத்தியுள்ளது.

இவ்வகையில் மக்கள் வழக்காறும் பண்பாட்டுக்கற்கையும் ( Folklore and Culture Studies) துறையாக உருப்பெறுதல் என்பது சமூகத்தேவையாக உணரப்பட்டுள்ளது. வழக்காறுகளின் பண்பாட்டுப் பொருண்மை என்பது அவசியமானது. இன்றைய சூழலில் இடம்பெறும் உலகமயமாக்கல் காலனிய அதிகாரம் போன்றவற்றிக்கெதிராக, சமூகங்கள் தங்களின் சுயம் சார்ந்த வாசிப்புக்களைச் செய்கின்றனர். சமூகங்கள் தங்கள் மீதான பண்பாட்டுத்திணிப்பு ஆதிக்கங்களுக்கு எதிராக மாற்றாக வழக்காறுகளையும், பண்பாட்டினையும் முன்னிறுத்துகின்றன. மக்கள் வழக்காறுகள், பண்பாடு என்பது இரண்டும் ஒன்றுக்கொன்று இணைந்தவையாய் கொடுத்து வாங்கி தங்களை அடையாளப்படுத்துகின்றன. பண்பாடு எனத் தேடும் போது அது மக்கள் வழக்காறுகளையும் வழக்காறு என அடையாளப்படுத்தப்படும் போது அது பண்பாட்டினையும் சென்றடைகின்றது.

இத்தகைய சூழலில் மக்கள் வழக்காறும் பண்பாடும் என்பது பாரம்பரிய கலைகள் - கலைஞர்கள், நம்பிக்கைகள், தொன்மங்கள், புராணங்கள், வாய்மொழி மரபுகள், சடங்குகள், கைவினைக்கலைகள் - கலைஞர்கள், தோரணப் பாரம்பரியங்கள், பாரம்பரிய தொழில் முறைகள் - தொழிலாளர்கள், உள்ளூர் அழகியல் கோட்பாடுகள், இசை மரபுகள், உள்ளூர் பாரம்பரிய அரங்குகள், உணவுப்பாரம்பரியங்கள், பழங்குடிமக்களின் பண்பாடு, இஸ்லாமியர், பறங்கியர் சமூகப்பண்பாடு, பண்பாட்டுரிமை பயன்பாட்டுப் பொருட்கள், கைவினைப் பொருட்கள் என அனைத்தினையும் உள்ளடக்கியதாக அமைகின்றது.

நாம் நமக்கான மொழியில் பேசுவது போல், நாம் நமக்கான பண்பாட்டினை தெரிவு செய்வது போல் எமக்கான கலை எது? அழகியல் எது? எம்மிடையே ஓவியம், சிற்பம், கட்டடப்பாணி என்பன உள்ளதா? அவை எமது கற்கையில் உள்வாங்கப்பட்டுள்ளதா? அதன் அவசியப்பாடு என்ன? இவற்றை உள் இணைப்பதால் எதிர்கொள்ளும் சிக்கல்கள் கேள்விகள் என்ன? போன்ற உரையாடல்கள் அவசியமானவை.

எமது பாடவிதானங்களில் கைவினைக்கலை, புலங்குபொருட் பண்பாடு, இயற்கைச் சாயமுறைகளும் அவற்றினை மீளவும் பயன்படுத்தல், உள்ளூர் அழகியல் மரபுகள், அதன் நுட்ப முறைகள், உள்ளூர் கலைகளின் வரலாறுகள், என்பன இணைக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. அழகியல், அழகியல் மரபுகள் என நாம் அதிகமாகப் கற்பவை மேற்கத்தேய குறிப்பாக ஐரோப்பா தழுவியதாகவே காணப்படுகின்றது. இவற்றிக்கு மாற்றான எமக்கானது எது? என்னும் கேள்வி முக்கியமானதாகின்றது. காலனிய நீக்கத்திற்கான செயற்பாடுகளின் அடிப்படையில் எமது அழகியல் முறை, பாணி, நுட்பம் போன்றவை பற்றிய தேடல் அவசியமாகின்றது. நமக்கான பாணி எது? எதிலிருந்து கட்டமைக்கப்போகின்றோம் போன்ற கேள்விகளும் தேடலை விரிவுபடுத்தியுள்ளன.

ஆனால் பரவலாக மண்சார் கலைகள் எனப் பேசும் நாம் வழக்காற்றினை ஒரு புலமாக ஏற்க மறுக்கின்றோம். பின்னர் கலைஞர்களை கௌரவிக்கின்றோம், வழக்காறுகள் அழிந்துவருவதாய் அவற்றை சேகரிக்கின்றோம். அவற்றின் அழகியல் பொருண்மை என்பன படித்தவர்களுக்குரியதற்றதாய் காணப்படுவதாக செம்மையாக்குகின்றோம் நவீனப்படுத்துகின்றோம். வழக்காறுகளை தங்கள் வாழ்வியலில் தக்கவைக்கும் மக்களை படிக்காதவராய் பாமரராய் கல்விப்பரபில் அடையாளப்படுத்துகின்றோம். பின்னர் கலை - கலைஞர்கள் என கௌரவிக்கின்றோம். இத்தகைய முரண்நிலை சிந்தித்தலுக்குரியது.

ஒரு தனித்துறையாக ஆரம்பிக்கப்படும்போது மட்டக்களப்பின் அடையாளமாகவும் கிழக்கிலங்கை மக்கள் வழக்காறுகளை பண்பாட்டினை உரையாடல் தளத்திற்கு கொண்டுவரும் சூழலையும் வழக்காறுகள் சார் செயற்பாட்டாளர்களை புலமையாளர்களையும் உருவாக்கும். எனவே இதன் தேவைப்பாடு கிழக்கிலங்கையில் முக்கிய தேவையாக உயர்கல்வி நிறுவகத்தினால் உணரப்பட்டுள்ளது.

மக்கள் வழக்காறும் பண்பாட்டுக்கற்கையும் ( Folklore and Culture Studies) ஒரு துறையாக உள்ளெடுக்கும் போது, மக்கள் வழக்காறும் பண்பாடும் ஒருபுலம்தானா? அழகியற் கற்கைகள் நிறுவகத்திற்கு இப் பாடநெறி தேவைதானா? போன்ற காலனிய நீக்கத்தினை உணராத, உணரத் தலைப்படாத ஒரு சமூகத்திற்கு மீண்டும் மீண்டும பதிலளிக்கும் சாபக்கேட்டிற்கும் மீண்டும் மீண்டும் ஒரு புலம் என அறிமுகம் செய்யும் நிர்ப்பந்தத்திற்கு முன்னெடுப்பவர்களும் அழகியற் கற்கைகள் நிறுவகமும் உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. சமூகத்திற்கான அறிஞர்களை புலமையாளர்களை உருவாக்குவதோடு சமுதாயத்தின் ஆக்கபூர்வ மாற்றங்களுக்கு உதவுவதாகவும் உந்துசக்தியாகவும் செயற்பட வேண்டிய தேவையும் கடப்பாடும் உயர்கல்வி நிறுவகங்களுக்குண்டு என்பது இங்கு நினைவில் கொள்ள வேண்டிய விடயமாகும்.



# வீரம் விளைந்த எமது மண்ணில் திட்டமிட்ட பண்பாட்டுச் சீரழிப்பு

சிலம்பு

இலங்கை இந்தியாவுடன் ஒட்டியிருக்காமல் தீவாக இருந்ததால் இங்கு வாழ்ந்த தமிழ் மக்களுக்குப் பல நன்மைகள் இருந்தன. இந்தியாவுடன் ஒட்டி வாழ்ந்திருந்தால் ஈழ மக்களுக்கு என்று இருந்த சிறப்பு வாழ்வியல் சிதைந்து போயிருக்கும்.இந்தியாவின் தென்கோடியில் வாழ்ந்த தமிழ் மக்கள் அங்கே பார்ப்பனிய ஆதிக்கத்தின் தாக்கத்திலேயே விடுதலைக்கு முன்னரும் பின்னரும் ஆள்பட்டிருந்தனர். பார்ப்பனிய ஆதிக்க உச்சம் அங்கு தலை விரித்தாடியது. அவ்வாதிக்கச் சக்திகளுக்கு எதிராகவே பெரியார் சிந்தனையும் அங்கு மேலெழுந்தது. .இலங்கைத் தமிழரைப் பொறுத்த வரை இங்கு பார்ப்பனிய மேலாதிக்கம் எதுவும் இருக்கவில்லை. அதனால் பெரியாரின் சிந்தனைகளும் இங்கு பரவவில்லை எனலாம். இங்கு பார்ப்பனர்கள் கோயில்களில் பூசை செய்வதையே தொழிலாகக் கொண்டிருந்தனர்.திருமணங்களை நடத்துவதும், வேறு சில சடங்குகளை நடத்துவதும் அவர்களின் இதர வேலைகளாக இருந்தன..அவர்கள் தாம் மேலானவர்கள், தமக்கு முன்னுரிமை .முதலிடம் தர வேண்டும் என்று கூறியதில்லை.

தமிழ் நாட்டில் பார்ப்பனர்களே அரசு உயர் பதவிகளை பெருமளவில் கொண்டிருந்தனர். தமிழ் மக்களைச் சாதி ரீதியாகப் பிரித்து உயர் கல்வியை மறுத்துத் தமக்குத் தான் உயர் கல்வி என்று கூறிக் குலக்கல்வி முறையைப் புகுத்தித் தாம் உயர்வானவர்கள் என்றதை நிலைநாட்டி. உயர் பிறப்பு என்று மக்களை ஏமாற்றியும் வாழ்ந்தனர். அதனால்தான் பெரியார் அங்கு தோன்றினார். பெரியார் சிந்தனைகள் அங்கு வளர்ந்தது ..இல்லாமல் இருந்திருந்தால் தமிழ் மக்கள் இரண்டாம் நிலையிலேயே இப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருப்பார். விடுதலைக்கு முன்னரும் பின்னரும் அவர்களின் ஆதிக்கமே மேலோங்கி இருந்தது. இந்த ஆதிக்கத்தை வீழ்த்திடவே பெரியாரின் சிந்தனைகள் அங்கு மலர்ச்சி அடையத் தொடங்கியது. அரசியற் கலப்பில்லாத சமுதாயச் சீர்திருத்த இயக்கமாக இருந்த பெரியாரின் கட்சி பிரிவடைத்து. அண்ணாத்துரை தலைமையில் புதிய அமைப்பு ஏற்பட்டது. அரசியலில் இறங்கினால் தான் மக்களை ஆதிக்க சக்திகளிடம் இருந்து காப்பாற்ற முடியும் என்ற முடிவு ஏற்பட்டது. அதன்படி அண்ணா தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இதற்கு முதன்மைக் காரணம் 1965 இல் ஏற்பட்ட இந்தி எதிர்ப்புப் போராட்டமாகும். இளைஞர்களை இந்தித் திணிப்புக்கு எதிராகப் போராடத் தூண்டியது. போராட்டம் இந்தித் திணிப்பைக் கைவிட வைத்தது. இதனாலேயே அண்ணா தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மதராஸ் என்ற பெயர் மாற்றப்பட்டுத் தமிழ்நாடு என்ற பெயர் அண்ணாவால் தான் அந்த மாநிலத்திற்குச் சூட்டப்பட்டது. அண்ணா இரு ஆண்டுகளில் காலமாக அடுத்து ஆட்சிக்கு வந்த கருணாநிதி அனைவரும் பூசகராகலாம், தமிழ் மொழியில் கோயிலில் பூசை செய்யலாம் என்பன உட்பட பல முற்போக்கான சட்டங்களைப் பலத்த எதிர்ப்புகளுக்கும், சட்டச் சிக்கல்களுக்கும் மத்தியில் நிறைவேற்றினார். அரசு உத்தியோகங்களில் எங்கும் பெருமளவு ஆதிக்கம் கொண்டிருந்த பிராமண ஆதிக்கத்தைப் பின்தங்கிய சமூகத்தவரும் பெறும் வகையில் சட்டங்களை நிறைவேற்றினார். அவரது ஆட்சியில் வேறு பல குறைபாடுகள் இருந்தாலும், அவர் இன நலன்களுக்கான பல சட்டங்களைக் கொண்டு வந்ததை மறுக்க முடியாது. அதே வழியில் எம்.ஜி.ஆரும் ஆட்சியில் சமூக மேம்பாட்டுக்கான திட்டங்களை நிறைவேற்றினார். இதன் பின்னர் ஜெயலலிதாவும் பின்தங்கியவர்களுக்கு 'அறுபத்தொன்பது விழுக்காடு வேலை வாய்ப்பு - அனைத்துத் துறைகளிலும்' என்ற சட்டத்தை பலமான எதிர்ப்புகளையும் மீறி நிறைவேற்றிச் சமூக நீதிகாத்த பெண் என்று பெயர் பெற்றார். இவை யாவும் தமிழ் நாட்டில் பார்ப்பனிய ஆதிக்கத்துக்கு எதிரான முயற்சிகளாகும்.



இவ்வாறான நிலை இங்கு ஒருபொழுதும் இருக்கவில்லை. இதற்கு தமிழ் நாட்டையும், ஈழத்தையும் கடல் பிரித்ததே முதன்மைக் காரணமாகும். கடல் பிரிக்காது இருந்திருந்தால் நாமும் இவ்வகையான ஆதிக்கத்துக்குத் தான் முகம் கொடுத்திருப்போம். ஆனால் தற்பொழுது இந்த மண்ணில் என்ன நடக்கிறது என்றால், இங்கு அதுபோன்றதொரு ஆதிக்க கலாச்சாரம் திணிக்கப்படுகிறது. இந்தத் திணிப்பு யாரால் எதற்காகத் திணிக்கப்படுகிறது? என்பது தான் சிந்திக்க வேண்டியதாகும். தாம் உண்டு, தமது பூசை போன்ற தொழில் உண்டு என்று வாழ்ந்த பார்ப்பனர்களை, ஐயர்மாரை உயர்வானவர்கள் என்றும், அவர்களுக்குக் கால்கழுவிச் சேவகம் செய்யவே தமிழ் மக்கள் பிறந்தார்கள் என்ற கருத்துத் திணிப்பும் இங்கு தொடங்கி உள்ளமை மிகுந்த வேதனையைத் தருகிறது.

கிளிநொச்சியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பிராமணர்களை வரிசையில் நிற்பாட்டி தட்டத்துக்குள் அவர்கள் நிற்கும் நிலையில் எமது மாணவர்கள் அவர்களது கால்களைக் கழுவும் கொடிய செயல் ஒன்று சென்ற கிழமை நடந்துள்ளது. சனாதிபதியை விழுந்து வணங்க மறுத்த மாணவன் ஒரு பிராமணரின் காலைக் கழுவினார் என்ற செய்தி மிகுந்த வேதனையைத் தான் கொடுத்துள்ளது. இவற்றைச் செய்யத் தூண்டியவர் யார்? இதனால் அவர்கள் அடையப்போகும் நன்மைகள் தான் என்ன?

சிலர் கூறுகிறார்கள், மாதா, பிதா, குரு ,தெய்வம் என்று தானே உள்ளது. எனவே பிராமணரின் கால்களைக் கழுவுவது தவறல்லவாம். இவ்வாறு சிலர் பல்வேறு காரணங்களைக் காட்டி கால் கழுவுவது சரி என்று வரட்டு வாதங்களை முன்வைக்கின்றனர். இங்குள்ள பிராமணர்கள் இவ்வாறு கேட்கவில்லை. ஆனால் தமிழனைக் கொண்டு பிரானர்களின் கால்களைக் கழுவ வைக்க வேண்டும் என்ற வக்கிர புத்தியுள்ள ஆதிக்க சக்தி இலங்கைத் தீவில் இதனைப் புகுத்துகிறது. அதை இங்குள்ள சிலதுகள் ஏற்று எமது இளம் சந்ததியின் மூளையை மழுங்கடிக்க முனைந்துள்ளது.

மாதா பிதா குரு தெய்வம் எனவே பிராமணரின் கால்களைக் கழுவுவது தவறல்ல என்று அதன் பொருள் புரியாமல் சிலர் கூறுகின்றனர். அவ்வாறு கூறும் எவராவது எப்பொழுதாவது தங்கள் தாய் , தந்தையின் கால்களைக் கழுவி இருப்பார்களா? விழுந்து கும்பிட்டிருப்பார்களா ? என்றால் , நிச்சயமாக அவர்கள் செய்திருக்க மாட்டார்கள் என்பதே உண்மையாகும். இவர்கள் அவ்வரிகளின் உண்மையைப் புரிந்தார்களா என்றால் இல்லை! என்று தான் கூற வேண்டும். இங்கே குரு என்றால் கோயில் பூசாரி என்று பொருள் அல்ல. பிராமண சமூகத்தவரின் தொழில் அது. குரு என்பவர் ஆசிரியர். ஆசிரியர் நல்லொழுக்கத்தையும் பண்பாட்டையும் கொடுப்பவர். எனவே கோயில் பூசாரி குரு அல்ல என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அடுத்தது இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். இன்னொரு வரி உள்ளது. அது அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம் என்று. எனவே மாதா, பிதா, குரு, தெய்வம் என்றால் மாதாவும், பிதாவும்தான் ஆசிரியரும், தெய்வமும் என்று பொருள்படும். இக்கருத்தை உறுதிப்படுத்த இன்னொரு வரியும் உள்ளது. தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை. தந்தை சொல் மிக்கதோர் மந்திரம் இல்லை என்று. எனவே வரட்டு கூச்சல் போடாமல், நாம்.உண்மையை உணரவேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் பண்பாட்டைச் சிதைக்கும் வகையில் இங்கு பல காரியங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அயல் நாட்டில் புதிய கல்விக்கொள்கை என்ற போர்வையில் ,செத்த மொழியான சமஸ்கிருதத்தையும், இந்தி மொழியையும், இந்தியா முழுவதும் திணிக்கும் பாரிய திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. ஒரு நாடு, ஒரு மொழி, ஒரே ஆட்சி, அதாவது மாநில மக்களின் பண்பாடுகளை அழித்தல் போன்ற பல திட்டங்கள் அங்கு திணிக்கப்படுகிறது. அதேபோன்றே இங்கும் சிலரின் உதவிகளுடன் மறைமுகமாகத் தமிழ்ப் பண்பாட்டுக்கு எதிரான சடங்குகளைச் செய்யவைத்து மக்களை மூளைச் சலவை செய்ய விளைகின்றனர். இது மிக மிக ஆபத்தானது. ஒரு பெரிய வரலாற்றுச் சமரைக் கண்ட இனம் , கூனிக் குறுகிக் கும்பிட்டு வாழ வேண்டும் என்பதும், அப்படி வாழ வைக்க வேண்டும் என்ற பிரயத்தனத்தில் தான் இப்பொழுது கால்கழுவும் நிகழ்ச்சியும் தொடங்கி உள்ளது. தாம் உண்டு, தம் தொழில் உண்டு என்று இருந்த பூசாரிகளை இவ்வாறு கொண்டுவந்து நிறுத்தி இருப்பது திட்டமிட்ட பண்பாட்டுச் சீரழிவின் தொடக்கமே ஆகும். தமிழினம் விழித்துக்கொள்ள வேண்டும்.இல்லையெனில் வெகு விரைவில் தமிழினத்தின் எதிர்காலம் அழிந்து விடும். அரசியல் கட்சிகளை வைத்து ஒருமுனைத் தாக்குதலும், இவ்வாறான செயல்களை வைத்து மற்றொரு முனைத் தாக்குதலும் இடம்பெறுகிறது. அரசியல்வாதிகளுக்குப் பதவியும், சமயவாதிகளுக்குக் காவியும் கொடுக்கப்படுகிறது. ஈற்றில் இனத்திற்கு பண்பாட்டு அழிவு மிகுதியாகிறது. இது தான் இங்குள்ள நிலை. எனவே விழித்துக்கொள்ளுங்கள், மக்களே!

# நான் வாக்காளன் சொல்லுறன், கேளுங்கோ...!



இப்ப பெரிய சிக்கலுக்கை நாங்கள் மாட்டுப்பட்டிருக்கிறம். ஒரு பக்கத்தாலை எலக்சன். மற்றப் பக்கத்தாலை தமிழ் சனத்தின்ரை ஆசை அபிலாஷைகளுக்கு எதிராக அரசாங்கத்தின்ரை நடவடிக்கை. பாருங்கோவன் இப்ப இராணுவத் தளபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறவர் ஆர் எண்டு? கடைசி நாள் யுத்தத்திலை பல போர் குற்றத்தைச் செய்தவர் எண்டு உலக நாடுகளாலை சொல்லப்பட்ட ஒரு ஆள்? அவரிலை வேறை பல குற்றமும் இருக்கு. அதை எல்லாம் யோசியாமல் அவரைக் கூப்பிட்டுத் தளபதியா நியமிச்சிருக்கிறார் மைத்திரி. அதுக்கு ஐ.நா அதிருப்தி தெரிவிச்சிருக்கு. பல நாடுகள் எதிர்ப்பும், கண்டனமும் தெரிவிச்சிருக்கிதுகள். பலத்த எதிர்ப்பு. அதாலை மைத்திரி அவரை இராணுவத்தளபதியாத் தெரிவு செய்ய முன்னம் ஒரு தரத்துக்கு இரண்டு தரம் யோசிச்சிருக்க வேணும். இத்தினை எதிர்ப்புள்ள ஆளைத் தளபதியா நியமிக்கலாமோ? அது நியாயமான காரியமோ? அதோடை தமிழ் சனமும் இந்த நாட்டுப் பிரஜையள்தானே? அவையும் இதைக் கட்டாயம் விரும்பாயினம். கட்டாயம் எதிர்ப்பினம். எண்டெல்லாம் யோசியாமல் செய்த நியமனம். ஆனால் மைத்திரி ஒண்டுக்கும் மசியிறதாக் காணேல்லை.

மஹிந்தான்ரை மகன் அவர் தான் நாமல் சொல்லுறார் 'சில்வாவை இவ்வளவு குற்றம் இருக்கேக்கை மைத்திரி அவரை நியமிச்சிருக்கக் கூடாது. அப்பிடி நியமிச்சது பிழை எண்டும் அவர் சொல்லியிருக்கிறார். அப்ப பலரும் எதிர்க்கினம் எண்டு தெரியிதெல்லே? பிறகு ஏன் உந்த நியமனம் எண்டு சனம் கேக்கிது.

ஆனால் அதுக்கை ஒரு கேலியான விசியம் என்னெண்டு தெரியுமே? இவர் போர் குற்றத்தைச் செய்த காலம் எண்டு சொல்லப்படுகிற நேரத்திலை இப்ப ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த பட்டியலிலை தெரிவு செய்யப்பட்ட கோத்தபய பாதுகாப்புத்துறைச் செயலாளராக இருந்து போரை வழி நடத்தினவர். அவர் தன்னாதிக்கத்தோடை செயற்பட்டவர் எண்டது முன்னம் எல்லாருக்கும் தெரிஞ்ச விசியம். ஆனால் அதுக்கையும் மஹிந்தா குடும்பத்துக்கையும் பல சிக்கலாம். அது வெளிப்படையாத் தெரியிது. கோத்தாபயவின்ரை நியமனத்திலை பசிலுக்குப் பிடிப்பில்லை எண்டதை அவர் சாடைமாடையா வெளிப்படுத்தி இருக்கிறார். வடிவா அவற்றை பேச்சைக் கேட்டுப் பாருங்கோ. அப்ப தெரியும்.

சனத்துக்குத் தெரியுமே சில்வாவை ஏன் மைத்திரி நியமிச்சவர் எண்டு. அதுக்கும் ஒரு காரணம் இருக்கு. கோத்தாபயவை ஜனாதிபதி வேட்பாளரா நியமிச்சாப்பிறகு அவருக்குப் பயந்தொட்டிட்டுதோ தெரியாது. தன்ரை கன்னையையும் அதுக்குச் சமமாக்க வேணும் எண்டு கோத்தாபய மாதிரி அதே குணம் குறி உள்ள ஒரு ஆளைத் தேடினார். சில்வாதான் அதுக்கு அம்பிட்டார். அங்காலை இஞ்சாலை பாராமல், மற்ற ஆக்களையும் கேக்காமல் ஆளைத் தூக்கி உடனை போட்டாச்சு. பிறகுதான் அவருக்குத் தெரிஞ்சிது சனம் குழம்பப் போகுதெண்டு. ஆனால் உங்களுக்குத் தெரியும் தானே, மைத்திரி எப்பிடிப்பட்ட ஆள் எண்டு? பிடிச்ச கொப்பை விடார் அழுங்குப் பிடிதான். இப்ப பாருங்கோ ஐ.நாக்காரர் குழம்பினம். அவர் அதை ஒண்டும் பாராமல் அவருக்குப் பதவியும் குடுத்து, பட்டும் போத்து, அணிவகுப்பும் நடத்தியிருக்கிறார்.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குத்தானே கொண்டாட்டம் எண்டு மைத்திரிக்குத் தெரியாது போலை கிடக்கிது. ஆனால் பல விசியத்திலை மைத்திரிக்கும் அரசியல் அறிவு சுத்த சூனியம் எண்டுதான் சொல்ல வேணும். சண்டையைச் சில்வா முடிச்சிருந்தால் பறவாயில்லை. ஆனால் சண்டையைத் தான் தான் முடிச்சு வெண்டனான் எண்டு கோத்தாபய சொல்லுறார். சரத் பொன்சேகாவும் தான் எண்டு சொல்லுறார். இதுக்கை மஹிந்தா தான் எண்டு சொல்லுறார். அதுக்கிடையிலை மைத்திரி 'நான் தான் அப்ப மந்திரியா இருந்தனான். நான் தான் வெண்டனான்.' எண்டு சொல்லுறார். ஆரைத் தான் நம்பிறதெண்டு சனம் தலையைப் பிக்கினம்.

சிங்கள மக்கள் எல்லாரும் தனக்குப் போட்டால் தான் வெல்லுவார் எண்டு கோத்தாபய சொல்லி இருக்கிறார். அவர் எதிர்பாக்கிறதைப் போல எல்லாச் சிங்களச் சனமும் அவருக்குப் போடவேணுமே!

போன ஜனாதிபதித் தேர்த்தலுக்கு முன்னம் மைத்திரி அப்பம் திண்டிட்டுச் செய்த வேலையை சிங்களச் சனம் செய்திட்டால்...? எண்டுஒருக்காக் கற்பனை செய்து பாருங்கோ பாப்பம்! ஜேவிபியின்ரை கூட்டத்தைப் பாத்தனியள்தானே? சனம் பொங்கிச்சுது. வந்த கூட்டம் அப்பிடி. போன எலக்சனிலை மைத்திரி அலை அடிச்ச மாதிரி வாற எலக்சனிலை ஜே.வி.பி அலைஅடிச்சால்..? சோக்காத்தான் இருக்கும். மற்ற ஆக்களிலையும் விட ஜேவிபி ஆள் பறவாயில்லையாம்.

அவங்கள் வந்தால் நாட்டைக் கொஞ்சம் சுத்தப்படுத்துவங்கள் போலை கிடக்கு. ஆனாலும் எங்கடை அரசியல் ஆய்வாளர் அம்பலவாணர் சொல்லுறார், அது கஷ்டம் எண்டு. இப்ப இலங்கையின்ரை தலைவிதியைத் தீர்மானிக்கிறது நாங்கள் இல்லையாம். அதாவது இலங்கை மக்கள் இல்லையாம். அதை ஒரு பக்கம் அமெரிக்காவும், மற்றப் பக்கம் சீனாவும் நடுவிலை இந்தியாவும் இருக்கேக்கை வாற ஆரெண்டாலும் இவையளோடை ஒத்துப் போகாட்டி அரசாங்கத்தை நடத்திறது கஷ்டமாம்.

அமெரிக்காவுக்கு விருப்பம் ஜனாதிபதியாக் கோத்தாவும், பிரதமரா ரணிலும் வரவேணும் எண்டு. சீனாவுக்கோ எல்லாக் கதிரையிலும் மஹிந்தா குடும்பத்தை இருத்த வேணும் எண்டு. இந்தியாவுக்கு எல்லாரையும் விடத் தங்கடை சொல்லைக் கேட்டுக் குழப்படி ஒண்டும் விடாமல் இருக்கிற ஒராளை இருத்தினால் நல்லது எண்டு. சிவசேனை சச்சியை இருத்தினால் அவைக்குத்தான் நல்லது. அவர் அவையின்ரை சொல்லுக் கேக்கக் கூடிய ஆள். அரிவரி படிக்கிற பிள்ளையைப் போலை கூப்பிட உடனை கைகட்டிக் கொண்டு போய் நிப்பர் எல்லே! பாவம் அவர்..? ) ஏதோ நாங்கள் இலங்கையிலை பிறந்திட்டம். அதுவும் தமிழராப் பிறந்திட்டம் எண்டு கவலை.........?



## ரோசா லக்சம்பேர்க் சிறைக் கடிதங்கள்

தமிழில் : கி.அ.சச்சிதானந்தம்

ரோன்கி
21, நவம்பர் 1916

என் அன்பான குட்டி சோனிக்காவுக்கு,

உன் சகோதரன் போர்முனையில் கொல்லப்பட்டுவிட்டான் என்று மாடில்டாமிருந்து நான் அறியவந்தேன். நீ இந்தப் புதிய அடியை எப்படித் தாங்கிக் கொள்ளப்போகிறாய் என்பது எனக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. அண்மைக்காலமாக துயரம் அடுத்தடுத்து வருகிறதே. ஆனாலும் என்னால் உன் அருகில் இருக்கமுடியவில்லை. உனக்குக் கொஞ்சமாவது தெம்பூட்டுவதற்கு...

உன்னுடைய தாயை நினைக்கும்போது நானும் கூட சங்கடப்படுகிறேன். அவள் எப்படித்தான் புதியதாக வந்த இந்தத் துயரை தாங்கிக்கொள்ளப் போகிறாள் என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இந்த நாட்களெல்லாம் துயரமானவை, நாமெல்லோரும் நம் அன்பு கொண்டவர்களில் பலரை இழந்துவிட்டிருக்கின்றோம். சிவஸ்டாபூல் படைகளால் முற்றுகையிடப்பட்டபோது, ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ஆண்டாக இருந்தது. உன்னை வெகுசீக்கிரத்தில் பார்ப்பேன் என்ற நம்பிக்கையில்தான் இருக்கிறேன். ஏனெனில் உன்னைப் பார்க்க எனக்கு ஏக்கமாக இருக்கிறது. உன்னுடைய சகோதரனைப் பற்றி எப்படி அறிய வந்தாய். உன்னுடைய அம்மாவின் மூலமா அல்லது நேரிடையாகவா? உன் இன்னொரு சகோதரனைப் பற்றி என்ன சேதி?

மாடில்டா மூலமாகவே உனக்கு எதையாவது அனுப்பத்தான் நான் பெரிதும் முயற்சி செய்கிறேன். ஆனால் என்னிடம் சின்ன வண்ணக் கைக்குட்டையைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை. இதைப்பற்றி கேலி பேசாதே! இதை உனக்கு அனுப்பி வைத்ததின் காரணமே உன்னிடம் நான் அன்புகொண்டு இருக்கிறேன் என்பதை காண்பித்துக் கொள்ளவேதான். எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் ஒன்று அல்லது இரண்டு வரியாவது எழுது, நீ நன்றாகத் தான் இருக்கிறாய் என்பதை அறிந்து கொள்ள.

கார்லுக்கும் உனக்கும் என் இதயம் கனிந்த அன்பு.

குழந்தைகளுக்கு ஆழ்ந்த அன்பு.

உன்னுடைய
ரோசா

---

பிரஸ்லொவ்
மே, 2, 1918

நான் "காண்டிடா" வையும் "சீமாட்டி அல்பட்"டின் நினைவுகளையும் படித்துக்கொண்டிருந்தேன். இவ்விரண்டையும் படித்ததில் மிகுந்த ஆனந்தத்தைப் பெற்றேன். காண்டிடா மிக அழகாக வெளியிடப்பட்டுள்ளது. அதை நசுங்கி விடாதபடி மிகுந்த கவனத்துடன் பக்கங்களைப் புரட்டிப் படித்தேன். இது மனித இனத்தின் பெருந் துயரங்களின் தொகுப்பு. இந்தத் தொகுப்பு இந்தப் போருக்கு முன்னால் வந்திருந்தால் அது கேலிச்சித்திரமாகத்தான் எனக்குப் பட்டிருக்கும். ஆனால் இன்று என் மனதில் மிகவும் யதார்த்தமான பதிவைச் செய்திருக்கிறது. நானே எப்போதாவது இந்த வாக்கியத்தைச் சொல்வதுண்டு.

சீமாட்டி அல்பட்டின் நூலானது மனித நாகரிகத்தின் ஒரு கூட்டத்தைப் பற்றி சுவாரசியமான சொல்லோவியத்தைத் தருகிறது. சேதியை முற்றுப் பெறவும் செய்கிறது. நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? மிக அற்புதமான வசந்தப் பருவத்தை ஆனந்தமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறாயா?

எப்போதும் உன்னுடைய
ரோசா

சீமாட்டி அல்பட் டென்மார்க் அசென் கிறிஸ்டின் அவர்களின் மகள், இவள் 1663லிருந்து 1685 வரை கோபன்ஹோகனில் சிறையிலடைக்கப் பட்டிருந்தாள்.

# உண்மையைத் தேடுகிறோம்... நடந்தது என்ன?

## யாழ்.பல்கலைக்கழகம் பற்றியது

எம்.அனுசரண்


உண்மையில் நடந்தது என்னவெனில், பேராசிரியர் விக்கினேஸ்வரன் அவர்கள் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட வேண்டுமென்பதில் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ குறியாகவிருந்தார். ஒரு குறுகிய காலத்துக்குள் உயர் கல்வி அமைச்சு நான்கு அமைச்சர்களைக் கண்டது. லக்ஸ்மன் கிரியல்ல, விஜயதாஸ ராஜபக்ஸ, ஹபிர் காசீம், ரவூப் ஹகீம் இவர்களில் விஜயதாச ராஜபக்ஸ மிகவும் ஆளுமை மிக்கவராகவும் தனது செயலாளர்களிடம் தங்கியிராமல் பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் விடயங்களைத் தானே அறிந்து நடவடிக்கைகள் எடுப்பவராகவும் காணப்பட்டார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலிருந்து அவரைச் சந்திக்கச் சென்ற பலரிடம் பேராசிரியர் விக்கினேஸ்வரன் மற்றும் பதிவாளர் காண்டீபனின் தவறான போக்குகள் பற்றித் தனது கருத்தையும்,கவலையையும் பகிர்ந்து கொண்டிருக்கிறார். தகுதி வாய்ந்த அதிகாரியொருவரை நியமிப்பது பற்றி அவரிடம் ஒரு சிந்தனை இருந்ததாகவும் தெரிகிறது. ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எதிர்ப்பினால் அது கை கூடவில்லை என்றும் கூறப்படுகிறது.

உயர் கல்வி அமைச்சுக்குப் பல்க்லைக் கழகங்கள் பற்றி அறிக்கையிடும் தேசிய புலனாய்வு நிறுவனத்தைச் சேர்ந்தவர்களின் அறிக்கைகளும் பேராசிரியர் விக்கினேஸ்வரனுக்குப் பாதகமாயிருந்தன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் பெரும்பான்மையின மாணவர்கள் மூலம் பரவலான செய்திகள் உயர் கல்வி அமைச்சுக்குக் கிடைத்திருக்கவும் வாய்ப்புண்டு. ஆனால் மூன்று ஆண்டு காலத்துக்குள் நான்கு அமைச்சர்கள் மாறியமை போன்ற தடங்கல்களால் இரண்டு ஆண்டு காலம் பேராசிரியர் விக்கினேஸ்வரன் தப்பிப் பிழைத்து வந்தார்.

சென்ற ஆண்டு இறுதியிலிருந்து கல்விசாரா ஊழியர்களின் கைவிரல் பதிவு இயந்திரம் அமுலாக்கலில் குறைபாடுகள் உள்ளதாகக் கூறி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் மிகவும் இக்கட்டான நிலையை அடைந்தபோது, அவர்களின் அழைப்பின் பேரில் அனைத்துப் பல்கலைக்கழகத் தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு வருகை தந்தனர். ஆரம்பத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்கள் தீவிரமானவர்கள், போரின் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தில் இவ்வாறான ஆவேசங்கள் இருக்கும். என்ற நிலைப்பாட்டில் காணப்பட்ட தென்னிலங்கை தொழிற் சங்கத் தலைவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்ட உயர் மட்டச் சந்திப்புகளுக்குப் பின்னர் அதிர்ச்சியடைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

துணைவேந்தர் மௌனமாகவிருக்கப் பதிவாளர் அவருக்குப் பதிலாகக் காரியங்களை நடத்திச் செல்வது பற்றி அவர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணப் பேரவை உறுப்பினர் ஒருவரிடம் கலந்துரையாடியபோது, அவர் "யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இப்படித்தான்" எனக் கேலியாகப் பதில் சொன்னதாகவும் கூறப்படுகிறது. பேரவையில் இரண்டு பெரும்பான்மை இனத்தவர்களும்,








தென்னிலங்கை அரச உயர் மட்டங்களுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்ட தமிழ்பேசும் உறுப்பினர்களும் உள்ளனர். பின்னர் இந்தத் தொழிற் சங்கத் தலைவர்கள் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுத் தலைவரைச் சந்தித்துத் தாங்கள் இரண்டாம் தடவை, இந்த வருட மேமாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருப்பது பற்றியும், அங்கு நிர்வாகத்துக்கும், ஊழியர்களுக்கும் இடையிலுள்ள முறுகல் நிலை பற்றியும் கூறித் துணைவேந்தரின் அசமந்தப் போக்கும் பற்றியும் புகாரிட்டிருக்கின்றனர். அவர் அப்போது தான் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துவிட்டதாகவும், இன்னும் ஓரிரு தினங்களில் முடிவுகள் தெரியவருமெனவும், அவர்களுக்குக் குறிப்பிட்டிருக்கிறார். அவர்கள் இரண்டாவது தடவை இங்கு வந்தபோது தீர்க்கமான ஒரு நிலைப்பாட்டிலேயே வந்திருந்தனர். மே மாதம் ஆறாம் திகதி அவர்கள் பதிவாளரைச் சந்தித்தபோது பலர் முன்னிலையில் பதிவாளர் அவர்களை அமதித்திருக்கிறார். "நீங்கள் சந்திப்புக்கு அழைப்பு விடுத்ததென்னவோ உண்மைதான். ஆனால் நான் அதற்கு அனுமதி தரவில்லையே! நான் பேசுவது உங்களுக்குப் புரியவில்லையா?" எனக் கண்டவாறு பதிவாளர் அவர்களைக் கேட்டதை நேரில் பார்த்தவர்கள் கூறினார்கள்.

இதே நேரம் ஒரு வார காலத்துக்கு மேலாக ஜனாதிபதி செயலகத்தில் காத்துக் கிடந்த துணைவேந்தரின் பதவி நீக்கக் கடிதம் கையெழுத்திடப்பட்டு தொலை நகல் (பக்ஸ்) மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பப்பட்டது. அதன் பிறகு யாழ்ப்பாணத்தில் நிலைமை தலைகீழாக மாறியது. வந்தவர்களைப் பதிவாளர் விழுந்து விழுந்து உபசரித்துப் பல தடவை மன்னிப்புக் கேட்டதாகவும் கூறப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, ஏப்ரல் 21 குண்டு வெடிப்புச் சம்பவமானது அதுவரை கிடப்பில் போடப்பட்டிருந்த பல புலனாய்வு அறிக்கைகளைத் துரிதமாகப் பரிசீலிக்க வேண்டிய இக்கட்டுக்குள் ஜனாதிபதியையும், அமைச்சர்களையும் தள்ளியது. உயர் கல்வி அமைச்சர் ஹகீம் சுமந்திரனைத் தொடர்பு கொண்டு துணைவேந்தரைப் பதவி நீக்க வேண்டிய இக்கட்டான நிலைமைகளைக் கூறி அவரின் அனுமதியையும் பெற்ற பின்னரே காரியம் ஒப்பேறியதாகவும் கூறப்படுகிறது. தகுதிவாய்ந்த அதிகாரியாகப் பதவி ஏற்ற பேராசிரியர் கந்தசாமி அவர்களுக்கும் காரணமெதுவும் கூறப்படாமல் பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவுக்கு வருமாறு உடனடியாக அவசர அழைப்புவிடுக்கப்பட்டதாம்.

ஆனால் நீக்கத்துக்கான காரணங்கள் சரியாகவிருந்தாலும், இக்காரணங்களும், ஆதாரங்களும் சரியாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளனவா? எனத் தெரியவில்லை. பேராசிரியர் விக்கினேஸ்வரன் அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கு விசாரணைக்கு வரும்போதுதான் வெறுமனே "தேசிய பாதுகாப்பு" என்ற காரணத்தைக் கூறி உயர் கல்வி அமைச்சும், பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவும் தப்பிக்கப் போகிறதா? அல்லது வலுவான பிற ஆதாரங்களையும் முன்வைக்குமா? என்றது தெரியவரும்.


இதே வேளை துணை வேந்தர் ஆசனத்தில் அமர்த்தப்பட்டுள்ள பேராசிரியர் கந்தசாமி அவர்களால் எவ்வளவு தூரம் இத்தகைய பாரதூ ரமான சீர் கேடுகளை, ஒரு குறுகிய காலத்துக்குள் சீர் செய்ய முடியும்? என்பது கேள்விக் குறியே! ஒரு சிரேஷ்ட விரிவுரையாளர் கூறுவது போல "கடந்த 10 வருடங்களில் மோசமான அதிகாரிகளும், ஊழியர்களும் உள் நுழைந்து விட்ட பல்கலைக் கழகத்தைத் தனி ஒருவரால் உடனடியாகச் சீராக்க முடியுமா? என்றதும் கேள்விக்குரிய விடயம் எனலாம்.

இதேவேளை பல்கலைக் கழகத்தின் மோசமான போக்கு மாணவர்களின் பரீட்சை விடயங்களிலும்,பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளதாக மாணவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அந்த வகையில் இறுதியாண்டு மருத்துவ பீட மாணவர் பிரதிநிதி ஒருவர் கூறும் அதிர்ச்சித் தகவலை அடுத்தவாரம் தருகிறோம்.

**பல்கலைக்கழகம் ஒரு பொது மக்கள் சார்ந்த நிறுவனம். அதில் எத்தனையோ மாணவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கிறது என்ற உண்மை ஏன் சில சுய நலமிகளுக்குப் புலப்படவில்லை என்று தெரியவில்லை. தமது சொந்த நலனுக்காக ஒரு பொது நல நிறுவனத்தைப் பயன்படுத்துகின்ற சமூகப் பொறுப்பற்றவர்களை இதே போன்று தொடர்ந்தும் செயற்பட அனுமதிக்கப் போகிறோமா? என்றதைப் பொது மக்களாகிய நாம் தான் தீர்மானிக்க வேண்டும். ஒரு தனி நபரின் ஆசைக்கும், அவர் சார்ந்த அபிலாஷைகளுக்கும் தீனி போடுகின்றதாகத் தொடர்ந்தும் இந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் அமையா வண்ணம் பாதுகாக்கவேண்டியது பொது மக்களாகிய எமது கடமை. எனவே பொறுப்புள்ளவர்களா நீங்கள்? தொடர்ந்து இது போன்ற விடயங்களை எமக்கு எழுதுங்கள். அது உங்கள் பொறுப்பும் சமூகக் கடமையும் என்று உணர்வீர்களாக!**

# நிராகரிக்கப்பட்ட வெளிகளை நோக்கி ஓவியக் காட்சிப்படுத்தல்களை முன்னெடுக்கும்

## ஓவியர் சுசிமன் நிர்மலவாசன்




ஈழத்துச் சூழலில் நவீன ஓவியம் என்பது கடந்த காலத்திற்கு உரியதாயிற்று. சிறப்புத் தேர்ச்சியும் ஆற்றலும் கொண்ட கலைஞரென அழைக்கப்படும் ஒருவர் உருவாக்கிய படைப்புகளை ஓவியக் கூடத்தில் பார்த்து இரசிப்பது தராதரமானதெனக் கொள்ளப்பட்ட காலம் ஒன்றிருந்தது.

ஈழத்து நவீன ஓவிய வளர்ச்சியின் போதாமைக்குக் காரணமாக ஓவியக் கூடங்களின் இன்மையும் கூறப்படுவது வழமை. இத்தகைய நிலமைகளுக்கு ஊடாக ஈழத்து ஓவிய வளர்ச்சி ஓவியக் கூடங்களுடன் அடையாளப்படுத்தப்படும் நவீன ஓவிய கால கட்டத்தைத் தாண்டி புதிய பல பரிமாணங்களை ஏற்படுத்துகின்றது.

ஓவியக்கூடமோ, நவீன ஓவிய ஆக்கங்களுக்குத் தேவையான சாதனங்களோ அல்லது ஊடகங்களோ அற்ற சூழ்நிலையிலும் அவை பற்றி அலட்டிக் கொள்ளாமல் ஓவியச் செயற்பாட்டை முன்னெடுத்த ஓவியர் மாற்கு இங்கு குறிப்பிடப்பட வேண்டியவர்.

ஓவியக் கூடங்களில் காட்சிப்படுத்துவதும் அதற்கான தராதரமான ஊடகங்களில் ஆக்கப்படுவதும் தராதரமானதாகவும், அதிகாரபூர்வமானதாகவும், அங்கீகரிக்கப்படுவதாகவும் காணப்பட்ட காலத்தில் ஓவியக் கலையின் சமகாலச் சமூகத் தேவையுணர்ந்து தனக்குச் சாத்தியமான ஊடகங்களிலும், சாத்தியமான இடங்களிலும் ஓவிய ஆக்கங்களையும் காட்சிப்படுத்தல்களையும் மிகவும் இயல்பாக முன்னெடுத்தவராக ஓவியர் மாற்கு முன்னோட்டம் கொடுத்திருந்தார். 'காட்போட்' மட்டைகளில் கரித்துண்டுகளால் படைப்பாக்கத்தை நிகழ்த்துவது வரை அவரது செயற்பாடு அமைந்திருந்தது.



தராதரமானதென அங்கீகரிக்கப்பட்ட அதிகாரம் கொண்ட ஓவியச் சூழல் பற்றிய அங்கலாய்ப்பற்றவராக ஓவியர் மாற்கு இயங்கினார். சமூகத்திற்குத் தேவையான ஓவியச் சூழலை உருவாக்கினார். நவீன ஓவியமென்பது வெகுசனத்திற்குரியதாக புதிய பரிமாணம் கொண்டது. போர்க் காலச் சூழலிலும் மாற்குவினதும், மாற்குவினது மாணவர்களதும் தொடர்ச்சியான இச்செயற்பாடு 1980 களில் ஆரம்பமானது. அது இன்று வரை ஈழத்திற்கே உரிய போக்காக அமைவதுடன் ஓவியக் கூடங்களுக்கு வெளியே வருவது, நிரந்தரத் தன்மையற்ற ஓவிய ஆக்கங்களை உருவாக்குவது என்ற புதிய எண்ணக்கருக்கள் இலங்கையின் அதிகார மையங்கொண்ட தராதரமானதெனக் கொள்ளப்படுகின்ற ஓவிய மையங்களின் புதிய கோலங்களாக தற்பொழுது மாற்றம் கண்டுள்ளன.

தராதரமானதென அதிகாரம் கொண்ட இலங்கையின் ஓவியக் கூட மைய ஓவியச் செயற்பாடுகள் சார்ந்து கவனத்திற் கொள்ளப்படாத மேற்படி ஓவியர் மாற்குவை முன்னோடியாகக் கொண்ட ஓவியச் செயற்பாடு, அப்படியொன்று இருந்ததாகவோ அல்லது நடந்ததாகவோ கவனத்திற் கொள்ளப்படாமல் கடந்து போவது ஓவிய கூடங்களுக்கு வெளியே வருவது, நிரந்தரத் தன்மையற்ற படைப்பாக்கங்கள் என்ற புதிய எண்ணக்கருக்களின் ஓவியச் செயற்பாட்டுப் பதிவுகளில் காணமுடிகிறது.

ஈழத்து நவீன ஓவியச் செயற்பாடுகளிலும், நாடக அரங்கச் செயற்பாடுகளிலும் புதிய வெளிகளுக்கு வருதல், புதிய வெளிப்பாடுகளைத் தருதல் புதுமை நாட்டத்தின் வெளிப்பாடுகளாய் அமைந்ததல்ல. அது காலத்தினதும் சமூகத்தினதும் தேவையாக கலைச் செயற்பாடுகளை ஆற்றுப்படுத்திச் சென்றது. அது பற்றிய தேடல் சமாந்தரமான எண்ணக்கருக்களையும், நடைமுறைகளையும் அறிய வைத்து வலுப்படுத்துவதாக இருந்தது.

இத்தகையதொரு பின்னணியில் தான் ஓவியர் சுசிமன் நிர்மலவாசனின் ஒகஸ்ற் 2019 தனியாள் யாழ் ஓவியக் காட்சிப்படுத்தலை அறிமுகம் செய்வது பொருத்தமானது.

கருத்தியல் தெளிவும் படைப்பாற்றுத் திறனும் கொண்ட மிகவும் தனித்துவமான படைப்பாளுமையாக இயங்கி வருபவர் சுசிமன் நிர்மலவாசன். ஓவியக்கலையின் சமூக மையத் தன்மையை ஆழமாக உணர்ந்திருக்கும் சுசிமன் நிர்மலவாசன் தனது படைப்புகளின் காட்சிப்படுத்தல்களுக்கு தேர்ந்தெடுக்கும் இடங்கள் பாடசாலை மண்டபங்கள், 'விறாந்தைகள்' பொது இடங்கள், சமூக முக்கியத்துவம் கொண்டிருந்து பாழடைந்த இடங்கள், கிராமத்து வெளிகளென அவை விரியும்.

கவனத்திற் கொள்ளப்படாத அல்லது கவனத்திற்கெடுக்கப்படாத, நிராகரிக்கப்பட்ட வெளிகளை நோக்கி ஓவியக் காட்சிப்படுத்தல்களை முன்னெடுத்துச் செல்லும் 'வன்முறையற்ற வாழ்வுக்கான ஓவியர்கள்' எனும் செயல்வாதத்தில் முன்னின்று செயற்படுபவர்களில் ஓவியர் சுசிமன் நிர்மலவாசன் குறிப்பிடத்தக்கவர்.


காட்சிப்படுத்தும் இடத்தின் தராதரத்தில் அதிகாரத்தில் தொங்கி நிற்காத சுசிமன் நிர்மலவாசன் அந்த இடங்களிற்கு அழைக்கப்பட்டு தனது படைப்புகளை காட்சிப்படுத்துவபராகவும் இருப்பது அவரது ஆளுமையின் புலப்பாடாகும்.

தராதரமானதென, அதிகாரமானதென மிகவும் பெருமை பாராட்டிக் கொள்ளப்படுகின்ற ஓவிய கூடமையங்களில் மயங்கிக் கிடக்காத சுசிமன் நிர்மலவாசன் படைப்பாக்கம் என்பது தனியாள் சிறப்புத் தேர்ச்சி என்ற கலைஞர் மைய ஆதிக்கத்தையும் கேள்விக்குட்படுத்துபவராக இயக்கம் கொள்கிறார்.

அவரது படைப்புக்கள் பார்வையாளரை அழைத்து முழுமைப்படுத்திக் கொள்வதாகவோ, அல்லது வளர்ந்து செல்வதாகவோ இருப்பதுடன் பார்வையாளர் பங்குபற்றல் இல்லாமல் இயங்க முடியாதவையாகவும் காணப்படுபவை.

ஓவியக் காட்சிப்படுத்தல் என்பது பூரணப்படுத்தப்பட்டவற்றை பார்த்து இரசித்துச் செல்லுதல் என்ற நவீன நிலைப்பாட்டைத் தாண்டி பார்த்தும் பங்கு பற்றியும் செல்லும் திருவிழாவாக, சடங்காக பரிணமிக்கச் செய்திருப்பதில் சுசிமன் நிர்மலவாசனின் பயணம் கலையின் பன்மைப் பரிமாணங்களைத் துலங்கச் செய்வதாகக் காணப்படுவது யதார்த்தமானது.


**கலாநிதி சி.ஜெயசங்கர்**



யாழ்.பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையைச் சார்ந்த கலை வட்டம் என்ற அமைப்பினர் இளம் ஓவியர் செல்வி. ஜஸ்மின் நிலாணி யோசெப்பின் படைப்புகளைக் 'LOSS AND EXISTENCE" என்ற தலைப்பின் கீழ் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். யாழ். பல்கலைக்கழகக் கலைக் கண்காட்சிக் கூடத்தில் கடந்த 21 ஆம் திகதி மாலை 3 மணிக்கு ஆரம்பமாகிய காட்சிப்படுத்தல் தொடர்ந்து 28 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது. காலை 10மணி தொடக்கம் மாலை 4மணிவரை நீங்கள் நிலாணியின் படைப்புக்களை அங்கு சென்று பார்வையிடலாம்.



'தீர்த்தா றெட் டொட் கலரி' ஆதரவில் கொழும்பு. பொரளையில் 39 4/a டி.எஸ்சேனநாயக்க வீதியில் அமைந்துள்ள அவர்களது கலைக் கூடத்தில் கடந்த ஓகஸ்ட் 24 தொடக்கம் செப்ரெம்பர் 2 வரை ஓவியக் கண்காட்சி ஒன்று நடைபெறவுள்ளது. அதில் மட்டக்களப்பைச் சேர்ந்த 6 ஓவியர்களின் 15 படைப்புகள் காட்சிக்கு வைக்கப்படும். மட்டக்களப்பைச் சேர்ந்த ராசையா நதீஸ்,கலிடீன் பாத்திமா ஹஸ்னா, மொகமட் அனாஸ் சித்தி ஜெஸ்மின், ஜெ.டிலாந்தன், அக்பர் அஸ்னா, இந்துஜன் பரராஜசிங்கம் ஆகிய ஓவியர்களே இந்நிகழ்வில் தமது படைப்புகள் மூலம் கலந்துகொள்கின்றனர்.



**180** ஏக்கர் பரப்பளவில் தேயிலைக் காடாக காட்சியளித்த இத்தோட்டம் இன்று காடு மன்றிக்கிடக்கிறது 175 குடும்பங்கள் வாழ்ந்த இந்த தோட்டத்தில் இன்று சில குடும்பங்களே பலத்த எதிர்பார்ப்புகளுடன் நாட்களைக் கடத்தி வருகின்றனர் இவர்களுக்கு விடிவு எப்போது யாரால் வரும்? மஸ்கெலியா நகரிலிருந்து நோட்டன் வழியில் தேயிலைத் தோட்டம் காடாகக் காட்சி தருகிறது.

செல்லும்போது சுமார் 18 கி.மீற்றர் தூரத்தில் அப்புகஸ்தனை தோட்ட திபட்டன் பிரிவு இருக்கிறது தனியார் துறைக்குச் சொந்தமான திபட்டன் பிரிவானது 180 ஏக்கர் நிப்பரப்பைக் கொண்ட தேயிலைத் தோட்டமாகும். சுமார் 175 குடும்பங்கள் இத்தோட்டத்தில் வசித்து வந்தன. தேயிலை உற்பத்தியே பிரதான தொழிலாகும். சிறந்த முறையில் இயங்கி வந்த இத்தோட்டம் அப்புகஸ்தனையுடன் இணைக்கப்பட்டு பெருந்தோட்ட யாக்கத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

பெருந்தோட்டங்கள் மீண்டும் நீண்டகால குத்தகைக்கு தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டதன் பின்னர் தேயிலைச் செடிகளுக்கிடையே வாகை இன மரங்கள் நடப்பட்டன 100 ஏக்கர் நிலப்பரப்பில் பெருமளவிலான வாகை கன்டுகள் நாட்டப்பட்டன. எஞ்சிய 80 ஏக்கர் நிலப்பரப்பில் தனியே தேயிலைச் செடிகள் வளர்ந்திருந்தன. எனினும் தேயிலை உற்பத்தி செய்வதற்கான எந்தவொரு முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்படவில்லை.

காலா காலத்திற்கு ஏற்றவாறு உரமோ மருந்துகளோ இடப்படாமல் சரியான முறையில் பராமரிக்காமல் தேயிலைக் கொழுந்தை மட்டும் எடுத்து வந்தது புற்கள், மரம், செடி, கொடிகள்இ வளந்து இன்னும் 10 வருட காலப்பகுதிக்குள் திபட்டன் தோட்டம் காடாக மாறக்கூடிய வாய்ப்பு அதிகளவில் இருப்பதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வாகை மரங்கள் பெரிதாக வளர்ந்து விட்டதால் தேயிலை உற்பத்தி வெகுவாக குறைந்து கொண்டே போகிறது பாரிய வாகை மரங்கள் வெட்டப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை தேயிலை உற்பத்தியில் முதலீடு செய்தால் தொழிலாளர்களாகிய எமது வாழ்வு சிறப்பாக அமையும் நிர்வாகத்திற்கு பெருமளவு இலாபம் தொடர்ந்து கிடைப்பதற்கான அதிகமாகவே இருக்கின்றது என்றார் பெருமாள் ஜயசேகரன்.

தோட்ட நிர்வாகம் தேயிலை உற்பத்தியில் அதிகளவு அக்கறை செலுத்த வேண்டும். தரிசு நிலப்பகுதியில் மரக்கன்றுகளை நடுவதன் மூலம் நிர்வாகங்கள் மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் அதேவேளை தேயிலைச் செடிகளுக்கு இடையே பாரியளவில் வளரக்கூடிய மரங்கன்றுகளை நடுவதை தவிர்த்து கொள்ள வேண்டும். மலைப்பகுதியில் பெரிய மரங்கள் வளர்வதால் அதிகளவு நீரை உறிஞ்சுவதால் எதிர்காலத்தில் நீர் ஊற்றுகள் இல்லாமல் போகலாம்.

எனவே எதிர்கால நலனை கருத்தில் கொண்டு தொழிலாளர்களுக்கு எவ்வித்திலும் பாதிப்பில்லாத வகையில் தோட்ட நிர்வாகம் செயற்பட வேண்டியது அவசியமாகும் என்றார் ஜயசேகரன். அதே தோட்டத்தில் கீழ் பிரிவில் இருக்கும் அஜித்குமார் குடியிருப்புக்கள் பள்ளத்தாக்கில் அமைந்திருக்கின்றன. சுமார் 2 கி.மீ தூரப் பயணத்தை கடப்பதற்கான பாதை நீண்ட காலமாக கவனிப்பாறற்று குன்றும் குழியுமாக காட்சி தருகிறது. ஒரு நோயாளியை வைத்தியசாலைக்கு அவசரமாக கொண்டு செல்ல முடியாதுள்ளது.

இவ்வீதியை புனரமைப்பு செய்வதற்கென அரசாங்கம் நிதி ஒதுக்கியுள்ளது. இன்றுவரை எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை தோட்ட நிர்வாகமும் எதனையும் கண்டுகொள்வதில்லை என்றார் புஸ்பகுமார். பெண் தொழிலாளியான சுசிலா கருத்து தெரிவிக்கையில் தேயிலைச் செடிகள் இருந்த போதிலும் வாரத்தில் இரண்டு நாட்களுக்கு மட்டுமே வேலை வழுங்குகின்றனர். புற்கள் தேயிலைச் செடிகளுக்கு மேலாக வளர்ந்து காடுகள் போல காட்சி தருகிறது. ஏனைய மூன்று நாட்களும் அப்புகஸ்தனை மேல் பிரிவில் வேலை செய்ய வேண்டியுள்ளது.

அதிகாலை 5 மணிக்கெல்லாம் எழுந்து பிள்ளைகளுக்கு உணவு தயாரித்து அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை முடித்து விட்டு வேலைக்கு போனால் மாலை 6 மணிக்கு வீடு வந்து சேருகிறோம் என்றார் மழைக்காலங்களில் அட்டைக்கடியால் பெரிதும் சிரமப்படுவதாக புஸ்பவதி தெரிவிக்கிறார் தோல் வியாதிகள் ஏற்படுகின்றன. எமது தோட்டத்தில் வைத்தியசாலை இருந்தும் அங்கு வைத்தியர் ஒருவர் இல்லாததால் அருகிலுள்ள தோட்ட வைத்தியசாலைகளை நாடவேண்டி இருக்கிறது.

தோட்ட வைத்தியர் மாலை 5 மணி வரை வைத்தியசாலையில் இருப்பார் நாங்களும் ஆறு மணியளவுதாகுள் வீட்டுக்கு சென்றால்தான் அதன் பின்னர் தனியாக செல்ல முடியாது பன்றி மற்றும் காட்டு மிருகங்களின் தொல்லை அதிகரித்து விட்டது. எமது தோட்டத்தினூடாகப் பிரதான வழியைச் சென்றடைவதற்கு இலகுவாக இருக்கும் என்பதால் அல்பா மற்றும் லக்சபான தோட்ட மக்கள் இவ்வீதியையே பெரிதும் பயன்படுத்துவதுண்டு. மத்திய மாகாண உறுப்பினர் ஒருவர் தோட்ட வழியாகச் செல்லும் ஆற்றை ஊடறுத்து பாலம் ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்தார்.

எனினும் 25 சதவீத வேலைகள் நடைபெற்று பாதியில் முடங்கிவிட்டது. நாளொன்றுக்க ஆயிரத்திற்கு மேற்பட்டோர் வீதியையும் பாலத்தையும் பயன்படுத்துவதால் அதனைப் புனரமைப்புச் செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறோம் என்றார் புஸ்பவதி 1987ம் ஆண்டில் ஐ.தே.கட்சி ஆட்சியில் இருந்தபோது எமது தோட்டப் பகுதியிலுள்ள ஒரு சமதரையான 40 ஏக்கர் காணியில் விமானத்தளம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. காணி ஒதுக்கப்பட்டு அடிக்கல்லும் நாட்டப்பட்டது இறுதியில் அத்திட்டம் கிடப்பில் போடப்பட்டு விட்டது. திப்பட்டன் பிரிவிலுள்ள லயன் குடியிருப்பில் 16 குடும்பங்கள் வசித்து வந்தன. இக்குடியிருப்புக்கள் 150 வருடகால பழைமை வாய்ந்தவை. தற்போது 5 குடும்பங்கள் மட்டுமே அதில் வசித்து வருகின்றன. ஏனையோர் வேறு தோட்டங்களுக்கு இடம்பெயர்ந்து விட்டனர். தற்போது இத்தோட்ட பகுதியில் உள்ள லயன் குடியிருப்புகள் இடிந்து விழும் நிலையில் உள்ளன.

அக்குடியிருப்பின் கூரைத்தகடுகள் ஓட்டையாகி சல்லடைபோல தோன்றுகின்றன. மின்சார வசதியிருந்தும் மின் இணைப்பைப் பெறுவதற்கான போதிய பணமில்லாத நிலையில் வாழும் இத்தோட்ட மக்களின் நலனில் அக்கறை கொள்ள வேண்டியது நமது அரசியல் தலைவர்களின் கடமையாகும்.

இடிந்து விழும் அபாய நிலையில் இருக்கும் லயன் காம்பிராக்களை தகர்த்திட்டு புதிய வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கத் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு முன்வர வேண்டும். இவ்வாறான இடங்களுக்கு நேரில் சென்று பார்வையிட வேண்டும் என்பதே தோட்ட மக்களின் அவாவாகும். தேர்தல் காலங்களில் மட்டும் வந்து வாக்குக் கேட்பார்கள் நாங்களும் வாக்குகளை அளித்து அவர்களை மக்கள் பிரதிநிதிகளாக பாராளுமன்றம் அனுப்புகிறோம். ஆனால் அவர்களால் மக்களுக்கு எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை என அப்பகுதி தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மஸ்கெலியா நிருபர்
செ.தி.பெருமாள்




மலையகம் உழைப்பிற்கு உறைவிடம் மலைநாட்டான் உடல் வளைந்து உழைப்பதில் உயர்ந்தோன் அதேபோல் கலைகளையும், பண்பாட்டு பாரம்பரியங்களையும், கட்டிக் காப்பவன் என்ற பெயர் உண்டு மலையக கலைகளில் முக்கியமானது கூத்துக்கலையாகும் கூத்துக்கலை பண்டைய காலந்தொட்டு இன்றுவரை மலையக மக்களிடையே நிலைபெற்று வருகின்றமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

அன்றும் இன்றும் என்றும் ஆடப்பட்டு வரும் கூத்துக்கலைகளில் ஒன்றான காமன்கூத்து பெயர் பெற்று விளங்கும் பெருந்தோட்டங்களில் ஒன்றுதான் காட்டு மஸ்கெலியா எனத் தமிழில் அழைக்கப்படும் கிளென்டில்ட் தோட்டமாகும். மேற்படிதோட்டம் நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ பிரதேச சபைக்குட்பட்ட மஸ்கெலியா நகருக்கு மிக அண்மித்துள்ளது. சுமார் 300 ஏக்கர்களைக் கொண்ட மேற்படி தோட்டத்தில் ஆண் பெண்களாக 350 பேர் வரையானோர் தொழில் புரிகின்றனர்.

இத்தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பான்மையானோர் தமது மேலதிக வருமானத்துக்காகக் கால்நடை வளர்ப்பு, விவசாயம் போன்ற பல்வேறு உபதொழில்களில் ஈடுபட்டுவருகின்றனர் ஒரு சிலர் வர்த்தகத் துறையில் ஈடுபட்டு வருவதும் சிறப்பானதாகும் படித்தவர்கள் கணிசமாக வாழும் இத்தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவர்களில் தா. பெரியதம்பி மஸ்கெலியா பொது மருத்துவ மனையில் மருந்தாளராக நீண்டகாலம் பணியாற்றி ஓய்வுபெற்று மேற்படி தோட்டப்பிரிவுகளில் ஒன்றான கோர்த்தி டிவிசன் குடியிருப்பில் வாழ்ந்து வருகின்றார்.

1949 இல் பிரேமார் டிவிசனில் இருந்து மாற்றலாகி இத்தோட்டத்தில் வசித்துவரும் சுமார் 82 வயதான பொ. கருப்பண்ணன் தலைவர் தான் 20 வருடகாலம் இ.தொ.கா சார்பாக தோட்ட மற்றும் மாவட்டத் தலைவராகப் பணியாற்றியதாகத் தெரிவிக்கிறார். ஆரசியல் மற்றும் தொழிற்சங்கவாதிகளின் எவ்வித உதவியுமின்றி தன்னுடைய வீட்டைத் தானே தனது சொந்தச் செலவில் புனரமைத்துக் கொண்டதாக அவர் பெருமையோடு கூறும் அதே வேளை இத்தோட்டத்திலுள்ள பல தோட்டக்குடியிருப்புக்கள் இன்னும் மோசமான நிலையில் இருப்பதாக அங்கலாய்க்கிறார்

மேலும் மறைந்த சௌமியமூர்த்தி தொண்டமானின் பணிப்பிற்கிணங்க தோட்ட மக்களின் அபிவிருத்திக்காகக் கட்டப்பட்டு ஆறுமுகம் தொண்டமானால் திறந்து வைத்த வாசிகசாலை இன்று கதவு யன்னல்கள் உடைக்கப்பட்டு கவனிப்பாறற்று, பாழடைந்து காணப்படுகின்றது பரிதாபத்திற்குரியதாகும். இத்தோட்ட மக்களுக்காக ஐந்து பேச்சஸ் வீதம் வீடு கட்டிக் கொள்வதற்கு பகிர்ந்தளிக்க ஒதுக்கப்பட்ட சுமார் பத்து ஏக்கர் காணி தொழிற் சங்க போட்டி காரணமாக பகிர்ந்தளிக்கப்படாமல் பற்றைக்காடாக புல் மண்டிக்கிடப்பதாக பெயர் குறிப்பிட விரும்பாத தொழிலாளி ஒருவர் குறிப்பிட்டார்.

பல இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட இத்தோட்டத்தின் பிரதான ஆலயமான ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய திருவிழா வருடாந்தம் மிக விமர்சையாகப் பாரம்பரிய பண்பாட்டு கலாச்சார விழுமியங்களுடன் கொண்டாடப்பட்டு வருகின்றது இத்தோட்டத்தில் இ.தொ.கா தொழிலாளர் தேசிய சங்கம் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம் மலையக மக்கள் முன்னணி ஆகிய தொழிற்சங்கங்களில் தொழிலாளர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இவ்வாறு பல்வேறு தொழிற்சங்கங்கள் செயற்படுகின்ற போதிலும் தமக்குரிய தேவைகள் ஏதுவும் நிவர்த்தி செய்யப்படவில்லையென இத்தோட்ட மக்கள் பெரிதும் ஆதங்கப்படுகின்றனர் கிளென்டில்ட் தோட்ட லயன் குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் உரிய வகையில் ஏற்படுத்தப்படவில்லை.

சனத்தொகைக்கேற்ப குடியிருப்பு வசதிகள் அமைத்துக் கொடுக்காமையினால் பெருவாரியான மக்கள் தற்காலிக வீடுகளிலேயே வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும் தோட்டப்பாதைகள் செப்பனிடப்படாமலும் வடிகான்கள் பழுதடைந்த நிலையிலும் குடியிருப்புக்கள் மிகமோசமான நிலையிலும் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இத்தோட்டத்தில் பிறந்து வளர்ந்து கல்விக்கற்றவர்களில் புகைப்படப்பிடிப்பாளர்கள், ஆசிரியர்கள், தாதிகள் தொழிற்சங்க பிரதிநிதிகள் போன்றோரும் அடங்குவர்.

இத்தோட்டத்தில் பிறந்து வளர்ந்து கல்வி கற்று தற்போது சமுர்த்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி. சுந்தரகுமாரி இத்தோட்டத்திலிருந்து வெளியேறாமல் தோட்டக்குடியிருப்பிலேயே தங்கியிருந்து தனது தொழிலை மேற்கொண்டு வருகிறார். எவரது உதவிகளுமின்றி தமது சொந்த முயற்சியினால் உழைத்து உயர்ந்து வாழ முயற்சிக்கின்ற கிளென்டில்ட் தோட்ட மக்கள் மேலும் எதிர்காலத்தில் உயர்வடைவார்கள் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை எனலாம்.

# கறுப்பி சுமதியின் முகில்கள் பேசட்டும்: உடலின் வேட்கை

"வாழ்வில் இனிமேல் ஒருபோதும் கிடைக்காத சந்தர்ப்பம் என்று எதுவோ இயக்கிக் கொண்டிருந்தது. ஆடி அடங்கி நித்திரையில் மூழ்கி நான் கண் விழித்துக் கொண்டபோது அதிகாலையாகியிருந்தது. பக்கத்தில் சயன் சீரான மூச்சோடு நித்திரையாயிருந்தான். நிர்வாணமாய் இரு உடல்கள். நான் எழுந்து உடுப்பை போட்டுக்கொண்டு அவன் நெற்றியில் முத்தமிட்டுவிட்டு எனது அறையை நோக்கி ஓடிப் போனேன். நண்பிகள் விழித்துக் கொள்ளு முன்னர் போய்விட வேண்டும் அவர்களுக்கு இரவு நான் எங்கு தங்கினேன் என்று சொல்லப் போகிறேன் ? தெரியவில்லை. ஆனால் உண்மை சொல்லப் போவதில்லை என்பது மட்டும் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது."

ஒரு ஆடவனோடு உறவுகொண்டு விட்டுக் களிப்புடன் வெளியேறும் பெண்ணொருத்தி தான் தங்கியிருக்கும் - நண்பிகளோடு தங்கியிருக்கும் இன்னொரு அறைக்கு ஓடிப்போவதைச் சொல்லும் கதாபாத்திரம் பெண். ஓடிப்போய் தன் நண்பிகளிடம் உண்மை சொல்லப்போவதில்லை என்றும் சொல்கிறாள். அப்படிச் சொல்லக் கூடாது என்பதில் தெளிவாக இருப்பதாகவும் சொல்கிறாள்.

யாரும் பார்க்கும் முன் ஓடிப்போய்விட வேண்டும் எனவும், யாருக்கும் தெரியக்கூடாது எனவும், நினைக்கும்போது அந்த உறவைத் தகாத உறவு எனச் சமூகம் வகைப்படுத்தும் என்பதையும் அறிந்திருக்கிறாள். முறைப்படியான - அங்கீகரிக்கப்பட்ட திருமணத்தின் வழியாகக் கணவனான ஆணோடு மட்டுமே உடலுறவு கொள்ளச் சமூகம் அனுமதிக்கிறது. இந்தக் கட்டுப்பாடு பெண்ணுக்கு மட்டுமே இருக்கும் கட்டுப்பாடு. அந்த உறவை மட்டுமே தக்க உறவு - தகுதியான உறவு என்கிறது. அதைத் தாண்டிய எல்லாவகை உறவையும் தகாத உறவு என்று வகைப்படுத்தித் தண்டிக்கிறது சமூக நடைமுறை. சமூக நடைமுறைகள் ஒத்துக்கொள்ளாத உறவில் ஈடுபட்ட பெண் - அதைப் பெரும் சாபமாகக் கருதி விமோசனத்திற்காகக் காத்திருந்ததை நமது புராணக் கதைகளும் தொன்மக் கதைகளும் சொல்லியிருக்கின்றன.

பத்தினிப் பெண்களின் கதைகளாகவும், தெய்வக்கற்பின் வெளிப்பாடுகளாகவும் சொல்லப்பட்ட கதைகளைத் தாண்டி நவீனத்துவம் நுழைந்த பின் எழுதப்பெற்ற கதைகளும் கூடப் பெண்ணின் மனம் எப்போதும் குற்றவுணர்வுக்குள் தவித்தது என்றே எழுதியிருக்கிறார்கள். திருமணத்திற்கு முன்பு ஒருவனைக் காதலித்துவிட்டு - உடல்சார்ந்த தொடுதல்களும் உறவுகளும் நடந்த நிலையில் அவனைக் கல்யாணம் செய்துகொள்ள முடியாத சூழலில் பெரும் குற்றவுணர்வோடு தனது உடலைச் சுமந்து திரியும் பெண்களை இலக்கியங்களும் நாடகங்களும் சினிமாக்களும் காட்டியுள்ளன. இன்னொரு பெண்ணோடு கணவன் கொண்ட தகாத உறவை ஏற்றுக் கொண்டு கொண்டாடியவர்களை உதாரண மனுசிகளாகவும் முன்வைத்துள்ளன பழைய இலக்கியங்கள். இதன் எதிர்நிலையில் ஆண்கள் வாய்ப்புக்கிடைத்தபோது இன்னொரு பெண்ணிடம் உறவுகொண்டதைப் பெரும் குற்றமாகக் கருதாமல் பெருமையாகச் சொல்லிக் கொள்வதையும்கூட இலக்கியங்கள் எழுதிக் காட்டியுள்ளன. தனது மனைவியிருக்கும்போது இன்னொரு பெண்ணை முறைப்படியாகத் திருமணம் செய்துகொள்ள விரும்பும் ஆணுக்குப் பெண் அனுமதி தரலாம் அவள் அனுமதியோடு செய்யப்படும் இரண்டாவது மூன்றாவது திருமண உறவுகள் சட்டப்படி செல்லும் என்பதுதான் நடைமுறை. இத்தகைய நடைமுறைகள் பெண்ணுக்கு இல்லை.

## எழுதும் பெண்களும் எழுதப்படும் பெண்களும் - 13



சுமதி

ஒரு பெண் உடல் ஒரேயொரு ஆணுடலோடு மட்டுமே உறவுகொள்ளவேண்டும் அதுவே கற்புநிலை என்ற வரையறையின் பேரில் உருவாக்கப்பெற்ற தக்க உறவு, தகாத உறவு என்ற எதிர்நிலையை ஆண்கள் எழுதிய பனுவல்கள் பெரும்பாலும் கேள்விக்குட்படுத்தவில்லை.

**அ.ராமசாமி**

அப்படியான உறவுகளை மையப்படுத்திக் கதைகளை எழுதியிருந்தாலும் பெண்கள் தொடர்ச்சியாகக் குற்றவுணர்வில் தவித்ததாகவே எழுதியுள்ளனர். விதிவிலக்காக ஜெயகாந்தனின் கதைகளை மட்டுமே சொல்லமுடியும். தமிழில் கவிதைகள், கதைகளை எழுதிய பெண்களும் பெரிதாக விவாதிக்கவில்லை.

கற்புநிலை என்று சொல்லவந்தால் இருகட்சிக்கும் அதனைப் பொதுவில் வைக்க வேண்டும் என்ற சொல்லாடலிலிருந்து உருவாகும் பெண்ணெழுத்துகளில் இவையெல்லாம் விவாதப்பொருளாக ஆகவேண்டியவை. பாலியல் விருப்பம், பாலியல் தெரிவு, பாலியல் கொண்டாட்டம், பாலியல் விடுதலை போன்றன ஆண்களுக்கானவை மட்டுமல்ல பெண்களுக்குமானவை என்கிறது தீவிரநிலைப் பெண்ணியம். எதிர்ப்பாலினரின் மீதான ஈர்ப்பும் உடல்களின் உரசல்களும் சேர்க்கையும் அன்றாட நிகழ்வுகளைப் போன்றவையே. வழக்கமான உணவுக்குப் பின்னும் புதிதாகப் பார்க்கும் ஒரு கனியையோ, குடிபானத்தையோ ருசித்துப் பார்க்கும் ஆசைபோன்றது எனக் காட்ட முயலகிறது.

(தொடரும்)

**சிங்களக்கவிஞர் பஸில் ஃபெர்னாண்டோ கறுப்பு ஜூலை தமிழின அழிப்புக் கலவரத்தில் தான் கண்ட காட்சியை கவிதையொன்றில் இப்படி விவரிக்கிறார். ஒரு சிங்களவரே அளித்த ஒப்புதல் வாக்குமூலமாக இருக்கிறது இந்தக் கவிதை. வீதிகளிலும், வீடுகளிலும் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது மட்டுமன்றி சிறையில் இருந்தவர்களும் குரூரமாக கொல்லப்பட்டனர்.**

# கறுப்பு ஜூலை

இறந்தவர்களைப் புதைப்பது
ஒரு கலையாக வளர்ந்திருந்த எமது காலத்தில்
இந்த நிகழ்வு மட்டும் அழிய மறுத்து எஞ்சியிருப்பதற்குக்
காரணம் ஏதுமில்லை
சத்தியமாகச் சொல்கிறேன்:
நான் உணர்ச்சிபூர்வமானவன் அல்லன்..
சித்தம் குழம்பியவனாகவும் ஒருபோதும் இருந்ததில்லை..
உங்களைப் போலவே
நானும் உணர்ச்சிகளை வெளிக்காட்டத் தயங்குபவன்,
அன்றாட வாழ்க்கையிலும்
நான் ஒரு யதார்த்தவாதி
எச்சரிக்கை உணர்வுள்ளவனும் கூட.
மறந்துவிடு என்று அரசு ஆணையிட்டால்
உடனடியாக மறந்து விடுகிறேன்.
மறப்பதில் எனக்கிருக்கும் திறமை பற்றி
எவருக்குமே ஐயமிருந்ததில்லை.
என்னை ஒருவரும் குறை சொன்னதும் கிடையாது.




எனினும் அந்தக் கும்பல் அந்தக் காரை
எப்படித் தடுத்து நிறுத்தியது என்பதை
இப்போதும் நான் நினைத்துப் பார்க்கிறேன்..
காருக்குள் நாலுபேர்
பெற்றோர், நாலு அல்லது ஐந்து வயதில்
ஆணும் பெண்ணுமாய் இரு குழந்தைகள்.
ஏனைய கார்களை எப்படி தடுத்து நிறுத்தினரோ
அப்படித்தான் அந்தக் காரையும் தடுத்து நிறுத்தினார்கள்
எந்த வேறுபாடும் இல்லை.
குதூகலம் கொப்பளிக்கின்ற மனோநிலையில்
ஒரு சில கேள்விகள்
செய்ததை பிழையறச் செய்யவிரும்பும் கவனமாய் இருக்கலாம்
பிறகு செயலில் இறங்கினர் வழமை போல.

பெட்ரோல் ஊத்துவது, பற்ற வைப்பது போன்ற விடயங்கள்
ஆனால், திடீரென்று யாரோ ஒருவன்
கதவுகளைத் திறந்தான்.
அழுது அடம்பிடித்துப் பெற்றோரை விட்டு விலக மறுத்த
இரண்டு குழந்தைகளையும் வெளியே இழுத்தெடுத்தான்.
குழந்தைகளின் உணர்வுகளைக்
கவனத்தில் கொள்ளாமல் இருப்பது
சில சமயங்களில் குழந்தைகளுக்கு நல்லது என
அவன் எண்ணியிருக்கக் கூடும்.
துரிதமாக செயல்பட்ட இன்னொருவனோ
தீக்குச்சியைக் கிழித்தான்
சுற்றிலும் எரிந்து கொண்டிருந்த பலவற்றோடு
இந்த நெருப்பும் சேர்ந்து கொண்டது
அருகே நின்று தமது சாகசங்களைப் பற்றிப்
பேச ஆரம்பித்தனர் கொஞ்சம் பேர்
கலைந்து போனார்கள் ஒருசிலர்

காருக்குள் இருந்த இருவரும் என்ன எண்ணியிருப்பார்கள்
என்பதைப் பற்றி யார் கவலைப்பட்டார்கள்?
சமாதான விரும்பிகளாக மக்கள்
தமது வீடுகளுக்குத் திரும்ப ஆரம்பித்தனர்.
அப்போதுதான் திடீரென உள்ளேயிருந்தவர்
கார் கதவை உடைத்து வெளியே பாய்ந்தார்
சட்டையிலும் தலைமயிரிலும் ஏற்கனவே தீப்பற்றி விட்டிருந்தது,
குனிந்தவர் தனது இரண்டு குழந்தைகளையும் வாரி எடுத்தார்,
எங்கும் பார்க்காமல் கவனமாகத் திட்டமிட்டு எடுத்த முடிவை
செயல்படுத்துவது போல உறுதியுடன் காருக்குள் திரும்பி ஏறினார்,
கதவை மூடினார்.

தனித்துவமான அந்த சப்தத்தை நான் கேட்டேன்...
எரிந்தழிந்த கார் இப்போதும் தெருவோரம் கிடக்கிறது...
ஏனையவற்றோடு இன்னும் சில நாட்களில்
மாநகராட்சி அதனை அகற்றக்கூடும்
தலைநகரின் தூய்மையே ஆட்சியாளரின் தலையாய பணி"




# மலைகளின் அரசன் பனிச் சிறுத்தை

ராஜேஸ்

காட்டின் அரசன் சிங்கம், கடலின் ராஜா சுறா, வானத்தின் அரசன் கழுகு என்று அழைப்பது நம் வழக்கம். அவற்றின் வீரமும் கம்பீரமும்தான் அவ்வாறு நாம் அழைப்பதற்குக் காரணம். அப்படியானால் மலைகளின் அரசன்...?சந்தேகமே தேவையில்லை பனிச் சிறுத்தை. பனிச் சிறுத்தைக்கு இணையான வீரமும் கம்பீரமும் வேட்டையாடும் வியூகமும் மலைகளில் வாழும் எந்த விலங்குக்கும் இல்லை.

ஆனால்...!

புலி, சிங்கம் என்று பெரும் பூனை இனத்துக்கே உரித்தான ஆக்ரோஷம் மிக்க இந்தப் பனிச் சிறுத்தைகள் மலைகளை ஆட்சி செய்கின்றன. ஆனால் இவற்றைப் பற்றி நாம் அறிந்திருப்பது சொற்பம்தான் இல்லையில்லை மிகச்சொற்பம்தான்.

"அத்தி பூத்தாற் போல...!" என்று தமிழில் உதாரணம் சொல்வார்களே...! அப்படித்தான் இந்தப் பனிச் சிறுத்தைகளைக் காண்பதும். அத்தி பூப்பதைப் பார்க்கிலும் அபூர்வம் இவற்றைக் காண்பது. இதனால்தான் "Ghosts of the Mountains" என்று பலரும் இதைக் குறிப்பிடுகிறார்கள். அதாவது "மலைகளின் பேய்" என்கிறார்கள். பேய்கள்கூட கண்களில் பட்டுவிடுமாம்! ஆனால் இவை தென்படாது என்றால்தான் இந்தப் பெயரை வைத்துள்ளார்கள்.

பனிச் சிறுத்தைகள் நம் கண்களில் படாமல் போவதற்கு முக்கிய காரணம் அவை வாழும் இடம். பூனை இனத்தில் எந்த உயிரினமும் வாழாத இடத்தில் இவை வாழ்கின்றன. சுமாராக கடல் மட்டத்தில் இருந்து 6000 மீற்றர் உயரத்தில் வாழ்கின்றன. உலகின் மிக உயரமான மலை எனப் போற்றப்படும் இந்தியாவின் இமயமலைதான் இவற்றின் தாயகம். அதுமட்டுமல்ல இவற்றின் வாழிட அடர்த்தியும் மிகப் பெரியது. சுமார் 100 சதுரகிலோமீற்றர் பரப்பில் நான்கே நான்கு சிறுத்தைகள்தான் வாழ்கின்றன. அதுமட்டுமல்ல மனிதர்கள் எளிதில் நுழைய முடியாத கரடுமுரடான – செங்குத்தான – ஆபத்தான மலைகளின் பகுதிகள்தான் இவற்றின் வாழிடம். இப்போது புரிகிறதா இவை ஏன் மனிதர்களின் கண்களில் அகப்படுவதில்லை என்று...!

தொழில்நுட்ப வளர்ச்சியால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து இவற்றின் வாழ்வை உயிர்கூர்ப்பு அறிஞர்கள் கண்டறிந்துள்ளார்கள்.

எப்படி இவ்வளவு உயரமான மலைகளில் இந்தச் சிறுத்தைகள் தாக்குப் பிடித்து வாழ்கின்றன என்பது பலரின் ஆச்சரியம். ஆனால் எத்தகைய கடுமையான சூழலையும் தாக்குப்பிடிக்கும்படி இயற்கை இந்த சிறுத்தைகளுக்கு கொடையளித்திருக்கிறது. தங்கள் உடல்களை கடும்சூழலுக்கு ஏற்றவாறு பல நூறு ஆண்டுகள் பழக்கப்படுத்தி மெருகேற்றி உள்ளன பனிச் சிறுத்தைகள்.

உயரமான இடங்களில் வாழ்வதில் முதல் சிக்கல் சுவாசத்தில்தான் இருக்கிறது. உயரமான பகுதிகளில் ஒட்சிசனின் அளவு குறைவாக இருக்கும். எனவே இதை சமாளிக்கும் விதமாக இவற்றுக்கு அகலமான மூக்குகளும், சற்றுப் பெரிய நுரையீரலும் உள்ளன. இதனால் அதிக அளவிலான காற்றை உள்ளிழுக்க முடியும். அதிகமான சிவப்பு இரத்த அணுக்களையும் இதே காரணத்திற்காகக் கொண்டிருக்கின்றன. மேலும் இவற்றின் அடர்த்தியான உரோமங்களால் உடம்பின் ஒரு அங்குல பகுதியில் 26,000 உரோமங்கள் வரை இருக்கும். இதனால் மைனஸ் 40 பாகை செல்சியஸ் குளிரையும் இவை தாங்கும். இவற்றின் உரோமங்களின் நிறங்கள் மலையிலும் பனியிலும் இவற்றின் உடலை அப்படியே மறைத்துக்கொள்ளும்.

பனிச் சிறுத்தைகளின் தனித்துவமே அதன் வால்தான். உடலின் நீளத்தில் 90 வீத அளவுள்ள நீளத்தை வால் கொண்டிருக்கும். இந்த நீளம் இவற்றின் அன்றாட வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியம். கயிற்றின் மேல் நடப்பவர்களின் சமநிலைக்கு கையிலுள்ள தடி எவ்வளவு முக்கியமோ, அதைப் போன்றுதான் சிறுத்தைகளின் வாலும். செங்குத்தான மலைகளில் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் இந்த நீண்டவால் முக்கியம். மேலும் குளிருக்கு இதமாக அவ்வப்போது வாலைப் போர்வையைப் போன்றும் போர்த்திக் கொள்ளும்.

இவற்றுடன் நீளம் தாண்டும் போட்டியெல்லாம் வைத்தால் அவ்வளவுதான். தனது உடலைவிட 7 மடங்கு நீளத்தை சர்வசாதாரணமாகத் தாண்டிவிடும். முன்னங்கால்கள், பின்னங்கால்களைவிடச் சற்று சிறியது. இதனால் அவற்றால் இப்படித் தாவ முடியும். இந்த உடலமைப்பு சிறுத்தைகளின் வேகத்தையும் கூட்டுகின்றது. மேலும் உயரமான இடங்களிலிருந்து தாவும்போது வரும் அழுத்தத்தை, வலிய தசைகள்கொண்ட பெரிய மார்புகள் தாங்குகின்றன. இதன் பரிணாம வளர்ச்சி கொடுத்திருக்கும் இத்தனை அமைப்புகளுமே இந்த மலைகளில் பனிச்சிறுத்தைகள் உயிர்பிழைக்க மிகவும் அவசியம். அத்துடன் அழகிய தோற்றத்தையும் இந்த அமைப்புகள் இவற்றுக்குத் தருகின்றன.

இத்தனையும் இருந்தும் இன்று இவற்றின் வாழ்க்கை அவ்வளவு எளிதாக இல்லை. "முரட்டு சிங்கிள்" அடைமொழிக்கு ஏற்ற ஒரு விலங்கு இருக்குமேயானால் அது நிச்சயம் பனிச்சிறுத்தையேதான். தனியாக வாழ்வதையே இவை விரும்புகின்றன. முன்பே குறிப்பிட்டதுபோல் 100 சதுரகிலோமீற்றருக்கு வெறும் நான்கு பனிச்சிறுத்தைகள் மட்டுமே இருப்பதால் மனிதர்கள் மட்டுமல்ல ஒரு பனிச்சிறுத்தையே இன்னொரு பனிச்சிறுத்தையைப் பார்ப்பது அரிது. ஆனால், அடுத்த தலைமுறையை உலகில் விட்டுச் செல்லவேண்டும் என்ற கட்டாயம் இருப்பதால், எப்படியும் ஓர் ஆணும் பெண்ணும் சந்தித்தாக வேண்டும். அதற்கு சில யுக்திகளைக் கையாளுகின்றன இந்தச் சிறுத்தைகள்.

மலைகளில் இருக்கும் பாறைகளில் தங்கள் கன்னங்களை உரசி, பின் அதன் மீது தங்களின் சிறுநீரை கழிக்கின்றன. இது ஒரு தனித்துவமானஅடையாளத்தைக் கொண்டிருக்கும். எனவே, அந்த வழியில் வரும் இன்னொரு பனிச்சிறுத்தைக்கு எந்தப் பனிச்சிறுத்தை வந்துசென்றது என்று தெரியும். அது எந்த வழியில் சென்றிருக்கிறது என்பதும் தெரியும். கூடும் நேரம் வரும்போது பெண் பனிச்சிறுத்தைகள் அதற்கான அடையாளங்களைப் பாறைகளில் விட்டுச்செல்லும், மலையின் உச்சியிலிருந்து சத்தமிடும் (இந்தச் சிறுத்தைகள் உறுமாது). இதை உணர்ந்து வரும் ஆண் அந்த இடத்திற்கு வரும். ஆனால் பெரும்பாலான நேரங்களில் இந்தக் கூடல் ஆக்ரோஷமாகவே இருக்கும். எப்போதாவதுதான் ஒன்றும் ஒன்றும் சந்தித்துக் கொள்கின்றன என்பதால் ஒருவித பதற்றம் இவற்றைத் தொற்றிக்கொள்ளும். வன்முறை வெடிக்கும். இந்த வன்மமான கூடல்தான் அரங்கேறும். இந்தக் கூடலால் வேட்டையாடுவதே கடினம் என்றளவுக்குக்கூட காயங்கள் படும். அதுமட்டுமில்லை. சத்தம் கேட்டு இரண்டு ஆண் சிறுத்தைகள் வந்துவிட்டால் அவ்வளவுதான். பெண்ணுக்காக மோதிக்கொள்ளும். இதனால் வன்முறையும், காயங்களும் இல்லாமல் கூடல் என்பதே நடக்காது. இதில் அவ்வப்போது வேறுவிதமான சிக்கல்களைச் சந்திக்கும் பெண் பனிச்சிறுத்தைகள்.

குட்டிகள் 2 வருடங்கள் வரை தாயின் அரவணைப்பில் வளரும். ஆனால் சில குட்டிகள் நீண்டகாலம் எடுக்கும். இதனால் தாய், ஆண் பனிச்சிறுத்தைகளுடன் கூடும்போது அவற்றுக்கும் ஆபத்துதான். ஏனெனில் குட்டிகள் தன்னுடையவை இல்லை என்றால் ஆண்சிறுத்தைகள் அவற்றுக்கு அளிக்கும் பரிசு மரணம் மட்டும்தான். இதை சமாளிப்பது தாய்க்குப் பெரும்பாடுதான். குட்டிகளைப் பாதுகாப்பது தாயின் கடமை. ஆனால் அதேநேரம் இனப்பெருக்கம் என்ற இயற்கையின் உந்துதலையும் தவிர்க்க முடியாது. கூடலின்போது ஏற்படும் காயங்களால் சிலநேரம் வேட்டையாடுதல்கூட முடியாது போய்விடும். எப்படி இருந்தாலும் பெண் சிறுத்தைகள் தனது குட்டிகளை காப்பாற்றி விடும்.

வலிமையாக இருந்தால் மட்டுமே மலைகளில் உயிர் பிழைக்க முடியும் என்ற நிலையில் பனிச்சிறுத்தைகளின் "முரட்டு சிங்கிள்" வாழ்க்கை முறை எவ்வளவு சிக்கலானது என்பதை யோசித்துப் பாருங்கள்...!

மலைகளில் வேட்டையாடுவது அவ்வளவு சுலபமானதல்ல. ஏனெனில் இந்தப் பகுதிகளில் வாழ்வதே ஒரு சில விலங்குகள்தான். அவையும் பனிச் சிறுத்தைகள் போலவே கடின வாழ்க்கை முறையைக் கொண்டவை. எனவே முதலில் பதுங்குதல் பின்னர் பாய்தல் அல்லது துரத்தினால்தான் உணவு. வேட்டையில் வெற்றி, தோல்வி அனைத்து விலங்குகளுக்கும் பொதுவானதுதான். இதனால் செங்குத்தான மலைகளில் எவ்வளவு வேகமாக ஓடினாலும்கூட தோல்விகளும், பட்டினியும் அவ்வப்போது இன்றியமையாததுதான். ஆனால் இங்குதான் மனிதன் என்ற பெரும் இடையூறு – அவற்றைப் பொறுத்தவரை தீயசக்தி கதைக்குள் நுழைகிறான்.

கடந்த சில வருடங்களில் நம்மால் காலநிலை பெரும் மாற்றத்தைச் சந்தித்து வருவது துருவங்களும் இமயமலையும்தான். பனிப் படர்வு மலைகளின் உச்சியை நோக்கிக் குறைந்து கொண்டே வருகின்றன. இதனால் தாவர வாழ்க்கை பாதிக்கப்பட்டு இவற்றின் இரைகளும் குறைந்தே வருகின்றன. வேறுவழியில்லாமல் அருகில் இருக்கும் சிறிய கிராமங்களுக்குள் நுழைந்து கால்நடைகளை வேட்டையாடுகின்றன. இதன் எதிர்வினையாகப் பல பனிச்சிறுத்தைகள் கொல்லப்படுகின்றன. இதன் அடர்ந்த தோலுக்காகவும் சில பகுதிகளில் இவை வேட்டையாடப்படுகின்றன.

மாற்றங்களுக்கு ஏற்ப பரிணாம வளர்ச்சியை விலங்குகள் அடைவது உண்மைதான். ஆனால் அந்த மாற்றங்கள் நிகழப் பல ஆயிரம் ஆண்டுகள் ஆகும். அதற்கேற்ப விலங்குகளும் பழகும். ஆனால் இன்று இந்த மாற்றம் எம்மால் 10, 20 வருடங்களில் நடந்துவிடுகிறது. கடுமையான சூழல், தனிமையான வாழ்க்கை என வாழ்ந்த இந்தச் சிறுத்தைகள் இந்த மாற்றத்திற்குத் தயாராகி இருக்கும் என்று நம்புவது அபத்தம். ஏற்கனவே குறைவான அளவில் (சுமார் 4000–8000) இருக்கும் பனிச்சிறுத்தைகள் எண்ணிக்கையில் குறைந்துகொண்டே வருகின்றன. இவற்றைப் பாதுகாக்க முயற்சிகள் தொடங்கியுள்ளன. இந்த அதிசய பனிச்சிறுத்தைகள் இல்லாமல் இந்த மலைகளின் சமநிலை முழுமை பெறாது என்பது மட்டும் உண்மை!

# ஊடுருவி உலகநாதன்



வளர்ந்து வருகின்ற தன்னிறைவு பொருளாதாரத்தினைக் கொண்டுள்ள நெல் உற்பத்தியானது பண்டைய காலந்தொட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆரம்பத்தில் சுயதேவைக்காக உற்பத்தி செய்யப்பட்ட நெல்லானது இன்று வர்த்தக நோக்கத்துக்காகவும் உற்பத்தி செய்யப்படுகின்றது. மக்களின் பிரதான உணவாக நெல்லரிசி சோறு காணப்படுகின்றது. இலங்கையில் நெல் உற்பத்தியானது 63% வளர்ச்சியினையே பெற்றுள்ளது. இங்கு சிறுபோகம், பெரும்போகம் ஆகிய முறைகளில் நெல் பயிரிடப்படுகின்றது. 2018களில் 2.21 மில்லியன் மெட்ரிக் தொன் நெல்லானது களஞ்சியப்படுத்தப்பட்டதுடன் 1.51 மில்லியன் மெட்ரிக் தொன் நெல்லானது நுகர்வுக்காக பயன்படுத்தப்பட்டது.

இலங்கையில் பயிரிடப்படும் அரிசி வகைகளினை அவதானிக்குமிடத்து பண்டைய காலங்களில் காணப்படுகின்ற அரிசியும் இன்று புதிதாக பலவகையான அரிசி வகைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக பச்சைப்பெருமாள், கழுகெனதி, கீரிசம்பா, மடதவலு, நாட்டுஅரிசி, குருளுதுண்ட, கொணபரு, சம்பா, சிவப்பரிசி, வெள்ளையரிசி, சுப்பிரி நாடு, சுப்பிரி சம்பா, சுவண்டேல், மொட்டைக் கறுப்பன், ஆட்டக்காரி ஆகிய வகை அரிசிகள் காணப்படுகின்றன.

இலங்கையின் நெல் உற்பத்தியில் நவீன போக்குகளாக இயந்திர சாதனங்களின் பயன்பாடுகள், விவசாயிகளுக்கான கடன்வசதிகள், மானிய முறை செயற்திட்டங்கள், நீர்பாசன திட்டங்களின் அறிமுகம், அரசாங்கத்தின் உதவிகள் போன்றன கிடைக்கப்பெற்றும் கிளிநொச்சியில் நெல் உற்பத்தி வீழ்ச்சியை நோக்கியே செல்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்திலே நெல் உலர விடும் தளங்கள் போதியளவில் இல்லாததன் காரணமாக விவசாயிகள் தமது நெல்லினை பாதுகாப்பான முறையில் உலர வைக்க முடியாமல் அவதிப்படுகின்றனர். இதனால் காப்பெற் வீதிகளில் நெல்லினை உலர விடுகின்ற நிலமை தொடர்கின்றன. இதன் காரணமாக வீதி விபத்துகள் ஏற்படுவதற்கான நிலைமைகள் உருவாகி இருப்பதாக போக்குவரத்தில் ஈடுபடும் மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற விவசாயக் கூட்டங்களில் நெல் உலர விடும் தளங்களை குறைந்தது கமக்கார அமைப்புகளுக்கு மூன்று என்ற வகையிலாவது அமைத்துத் தாருங்கள் என தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையிலும் அவை நிறைவேற்றப்படவில்லை.

சிறுபோக காலத்தில் குறைந்தளவு நெல்லினையே உற்பத்தி செய்யும் விவசாயிகள் நெருக்கடி நிலைமை யினை எதிர்கொள்ளும் நிலையில் காலபோகத்தில் அதுவும் மழை வீழ்ச்சி இடம்பெறும் காலத்தில் நெல்லினை உலர விட முடியாத நிலையில் பச்சை நெல்லாகவே விற்பனை செய்கின்ற அவலம் காணப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டம் ஒரு விவசாய மாவட்டம் என்று சொல்லிக் கொண்டு விவசாயிகளுக்கான முக்கியமான தேவைகள் நிறைவேற்றப்படாததன் காரணமாகவே பாரிய நெருக்கடியினை விவசாயிகள் எதிர்கொள்கின்றனர்.

நாட்டில் தற்பொழுது பயிர்ச்செய்கையில் எழுந்துள்ள பெரும் பிரச்சினையாக படைப்புழுவின் தாக்கம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதன் தாக்கம் கிளிநொச்சி மாவட்டத்தில் சில பிரதேசங்களில் கண்டறியப்பட்டு தற்பொழுது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனாலும் இப் படைப்புழுவானது 100 இற்கும் மேற்பட்ட பயிர்களில் தாக்கத்தை ஏற்படுத்த வல்லது. படைப்புழுவின் தாக்கத்தை முற்றிலுமாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்குடன் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் விவசாயத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவை எந்தளவுக்கு நன்மையைத் தருகின்றன என்றால் இல்லை என்று தான் சொல்ல முடிகிறது.

இயற்கை முறையில் நெல் உற்பத்தி செய்ய ஆர்வம் உள்ளவர்களுக்கு மானியங்கள் மற்றும் உதவிகளை வழங்க கொழும்பு விவசாய அமைச்சு தயாராக உள்ளது. ஆர்வமுள்ளவர்கள் பதிவு செய்யவும் என்று விவசாய பிரிவு அறிவுறுத்தி வருடங்கள் கடந்துவிட்டன ஆனால் அது சம்பந்தமாக விவசாயிகளுக்கு ஊக்கப்படுத்த சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் முன்வராததால் அரசின் திட்டம் வீண் போகிறது.

நாட்டில் நஞ்சற்ற விவசாயம் மூலமாக உற்பத்திகளை அதிகரிப்பதற்கு அரச தலைவரின் ஆலோசனைக்கு அமைவாக பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இயற்கை உரம் மற்றும் நோய் எதிர்ப்பு கொல்லிகளைப் பயன்படுத்தி வடக்கு மாகாணத்தில் நெல் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பிரதேசத்தில் இயற்கை முறையில் நெல் உற்பத்தி வெற்றியளித்துள்ளது என்று சொல்லப்படுகிறது ஆனால் அதன் வெற்றி எந்தளவுக்கு இருக்கிறது என்பது கேள்விக்குறியாகவுள்ளது. ஆகவே இயற்கை முறை மூலமாக நெல் உற்பத்தி செய்ய ஆர்வம் உள்ளவர்கள் பிரதேச விவசாயப் பிரிவு ஊடாகப் பதிவு செய்ய முடியும். அவர்களுக்கு மானியம், உதவிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்க அமைச்சு தயாராக உள்ளது. சம்பந்தப்பட்ட திணைக்களக்காரர்கள் தயாரா?

தயார் நிலையில் இருந்தால் இன்று கிளிநொச்சி வயற்காடாக விளங்கும். நெல் உற்பத்தியை மேற்கொள்பவர்கள் பற்றி சிந்தியுங்கள் அவர்களின் உற்பத்தியில் கைவைக்காதீர்கள். மானிய அடிப்படையில் விதை நெல் வழங்குவதில் இருந்து அரசு வழங்கும் திட்டங்களை நேரடியாக வழங்குவீர்களா?

கிளிநொச்சியில் சிறுபோகத்திலும் பெரும்போகத்திலும் மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கிய விதை நெல்லில் தொடர்ந்து மோசடி இடம்பெற்று வருவதாக கிளி நொச்சி விவசாயிகள் பல முறை சுட்டிக்காட்டியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

விதை நெல்லை மானியமாக விவசாயிகளுக்கு வழங்குவதற்காக அரசு நடவடிக்கை எடுத்தால் விவசாய திணைக்களங்கள் சரியான முறையில் அதனை விவசாயிகள் பயன்பெறும் அளவுக்கு வழங்குவதில்லை என்று சுட்டிக்காட்டுகின்றனர். தமக்குத் தெரிந்தவர் களுக்கு அளவைவிட கூடுதலாக மானிய அடிப்படையில் வழங்கப்படும் உணவு உற்பத்திப் பொருள்களை வழங்குவதால் அத்துமீறிய விதைப்புக்களும் மேலதிக விதைப்புக்களும் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் உரிய முறையில் பயிர்ச்செய்கை மேற்கொண்ட விவசாயிகள் பாதிக்கப்படும் அபாய நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

அரசுடன் இருந்து வழிவிடுகின்றவர்களே வழியை மூடினால் நெல் உற்பத்தியை நம்பியிருக்கும் விவசாயிகள் எங்கு போவர். சம்பந்தப்பட்ட திணைக்களகாரர்களே நெல் உற்பத்தியில் இறங்கிவிடுகின்றனர். அலுவலகத்தில் நிற்பதைவிட வயலில் தான் நிற்கிறார்கள். இது பிழை என்று சொல்லவில்லை. மானிய அடிப்படையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய விவசாயிகளுக்குத் தான் நெல்லை அரசு வழங்குகிறார்கள். அந்த நெல்லில் நீங்களும் கைவைக்காதீர்கள்.

உழைப்பு மற்றவரை குழியில் தள்ளிவிடுவதற்கு காரணமாக அமையக் கூடாது. எல்லோரும் உழைக்க வேண்டும். தனது பாரம்பரிய தொழிலாக நெல் உற்பத்தியில் ஈடுபட்டு வருபவருக்கு மானிய அடிப்படையில் அரசு வழங்கும் நெல் கிடைக்கவில்லை என்றால் அவர் வாழ்வு என்னவாகும்.



# பத்தும் பலதும்

## தீட்டும், துடக்கும், நல்லூர் திருவிழாவும்

இரண்டாம் தீட்சை பெற்ற சுப்பிரமணியம் இந்தத் தடவைநல்லூர் திருவிழாவுக்குப் போகவில்லையாம். ஏனென்று கேட்டால் பாதுகாப்புப் படையினரின் சோதனைச் சாவடிகள்தான் அதற்குக் காரணமென்று சொன்னார். ஆனாலும் வழமைபோல் காலை வேளையில் அவர் திருவிழாவுக்குப் போகிறார். நல்லூர் கோயில் பின் வீதிப் பக்கமாகச் சென்று தூரத்தில் நின்றவாறு குமரனைக் கும்பிட்டுவிட்டுத் திரும்பிவிடுகிறார் என்று அவர் நண்பர் சொல்லிக் கேட்டோம்..


இவர் தன் வாழ்நாளில் இப்படியானதொரு காட்சியை இப்போதுதான் காணுகிறாராம். திருவிழாவுக்கு குளித்து சந்தியாவந்தனம் செய்து பொட்டுப் பிறையோடு பக்திபூர்வமாகப் போகிற ஒருவரைக் கையால் அளைந்து உள்ளே அனுப்புவதை அவர் ஒரு முறைகேடாக நினைக்கிறார். அதுவும் இரண்டாம் தீட்சை பெற்ற ஒருவர் இப்படியாக அளைந்த பிறகு கோயிலுக்குள் செல்வது தோஷமான காரியம் என்று அவர் எண்ணுவதும் அதற்குரிய காரணம் எனலாம்.

முதலில் நல்லூர் எஜமானர் 'பாதுகாப்பை ஒட்டி மட்டுப்படுத்தப்பட்ட திருவிழாவாகவே இம்முறை நடைபெறும்" என்று அறிவித்ததும் தனக்கு ஆறுதலாக இருந்ததாம். பின்னர் இது போன்ற பாதுகாப்பு நடவடிக்கையோடுதான் நடைபெறும் என்று அறிவித்ததும் தனக்குச் சோர்வு ஏற்பட்டதாகச் சுப்பிரமணியம் சொன்னார். கோயிலுக்குள் குண்டை வெடிப்பார்கள் என்று எண்ணுவது எத்தனை மோசமான விடயம் தெரியுமா? கடவுள் மீது அவ நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது என்றதை அது காட்டுகிறதல்லவா?. தெய்வத்துக்கு மேலாக ஒன்றுமில்லை.அந்தத் தெய்வம் எம்மைக் காப்பாற்றும் என்றெல்லாம் எண்ணுகிறோம். பின்பு ஏன் இப்படியான சோதனைகளை மேற்கொள்ள அனுமதிக்கிறார்கள் என்று தெரியவில்லை என சுப்பிரமணியம் மேலும் தெரிவித்தார்.

உண்மையிலேயே மிகவும் நுணுக்கமான விடயங்கள் நிறைந்தது இந்துசமயம். ஆனால் தற்போது பல மாறுதல்களுக்குட்பட்ட விடயமாகக் காணப்படுகிறது. முக்கியமாக நல்லூர் திருவிழா ஒரு களியாட்ட நிகழ்வாகப் பார்க்கப்படுவதாகப் பலர் பேசிக்கொள்கிறார்கள். கோயிலுக்குப் போய் வருகிற வழிநெடுகிலும் வியாபாரிகள் கடை வைத்திருக்கிறார்கள். பக்தர்களும் பொருட்களை வாங்கிக் குவிப்பதிலேயேதான் குறியாக இருக்கிறார்கள். இது போன்றதொரு வியாபாரச் சூழலுக்கூடாக பகதி என்பது சாத்தியமா? எனவும் ஒருவர் கேட்பது தெரிகிறது. அதனால் இடைநடுவே உண்மையான பக்தர்கள் கிடந்து தவிப்பது தெரிகிறதாகக் குற்றஞ்சாட்டுகிறார் சுப்பிரமணியம்.

## இங்கே இவர்கள் இப்படி

ஏ.ஜே.ஞானேந்திரன்



# வாய்க்குள் 526 பற்கள்

நம்ப முடியவில்லைத்தான். ஆனால் மருத்துவர்கள் சத்திரசிகிச்சை செய்து ஒரு 7 வயதுச் சிறுவனின் வாய்க்குளிலிருந்து 526 பற்களை அகற்றி உள்ளார்கள். இந்தியாவின் சென்னை மாநகரில் உள்ள சவீதா மருத்துமனையில்தான் இந்தச் சத்திர சிகிச்சை இடம்பெற்றுள்ளது. பற்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த நிலையில் வாய்க்குள் இருந்துள்ளன. 7 அவுண்ஸ் எடை கொண்ட இந்தப் பற்கள் துகள்களாகவே இருந்துள்ளன. வாய்க்குளிலிருந்த பற்களை எண்ணி முடித்து வெளியே அகற்ற 5 மணி நேரம் மருத்துவர்களுக்கு தேவைப்பட்டுள்ளது. மூன்றுநாட்கள் முடிவில் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட சிறுவனின் பெயர் வெளிப்படுத்தப்படவில்லை. ஒவ்வொரு பல்லும் அளவில் வேறுபட்டு இருந்ததாகவும், 1 மி.மீ தொடக்கம் 15மி.மீ.வரையிலான அளவுடன் இவை காணப்பட்டதாகவும் மருத்துவ அறிக்கை கூறுகின்றது. கடைவாய்ப் பற்கள் வளர்வது அடியோடு தடைப்பட்டு இருந்ததாகவும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். சிறுவனுக்கு 16வயது பூர்த்தியாகியதும், செயற்கை முறையில் கடைவாய்ப் பற்கள் பொருத்தப்பட வேண்டுமென அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மானிடராய் பிறத்தல் அரிது கூன் குருடு செவிடு பேடு நீங்கி பிறத்தல் அரிது என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள்?

# வேண்டாமே இந்த வியாபாரம்






தந்த வியாரத் தடையை அமுலுக்குக் கொண்டுவர, சிங்கப்பூரும் தீர்மானம் எடுத்துள்ளது. 2021தொடக்கம் களவில் காட்டு மிருகங்களின் உறுப்புகளை விற்பதற்கு முழுமையாக ஆப்பு வைப்பது என்று ஒரு முடிவை அரசு எடுத்திருப்பது நன்மைக்குத்தான். சமீபத்தில் களவில் கடத்தப்பட்ட 12.9 மில்லியன் டொலர் பெறுமதியான தந்தம்(மொத்த எடை 9தொன்) அதிகாரிகளிடம் சிக்கியது. இந்த நாட்டில், தந்த ஒழிப்பை தீவிரப்படுத்தி இருக்கின்றது. இந்த நாட்டில் இதுவரையில் சிக்கிய களவுத் தந்தத்தில் இதுவே மிகப் பெரிய தொகை என்றும், இந்தத் தந்தத்திற்காக 300 ஆபிரிக்க யானைகள் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் கருதுகிறார்கள். சிங்கப்பூர் வழியாக கொங்கோ குடியரசிலிருந்து வியட்னாமுக்கு அனுப்பப்பட்ட கொள்கலனே அதிகாரிகளின் கையில் சிக்கியுள்ளது. 1990இலிருந்து யானைத் தந்த வியாபாரத்தில் பலத்த கெடுபிடியை அமுல்படுத்திய ஒரு நாடு சிங்கப்பூராகும். இந்த வருடத்திற்கு முன்பு இறக்குமதி செய்யப்பட்டவை என்று நிரூபித்தால் மாத்திரமே தந்த வியாபாரம் செய்ய முடியும்.. இந்தத் தடை அமுலுக்கு வந்த பின்பு , கையிருப்பில் உள்ள தந்தத்தை வர்த்தகர்கள் இங்குள்ள நிலையங்களில் அன்பளிப்பாக வழங்கி விட வேண்டும் என்பதே அரசின் நிபந்தனை. 20ஆம் நூற்றாண்டின் நடுவில் மில்லியன் கணக்கிலிருந்த யானைகள் , எண்பதுகளில்60,000 ஆக அருகி விட்டன.

இணையத்தில் வாசித்து ரசித்த வரிகள்...

'யானைகளின் கடலில் ஆங்காங்கே இருந்த மனித தீவுகள் என்ற நிலை மாறி, மனித கடலில் யானைகளின் சிறிய தீவுகள் பெருகும் நிலை ஏற்பட்டுவிட்டது"

# வாருங்கள் குடித்து மகிழ்வோம்





சுவிட்சிலாந்து ஒரு குட்டி நாடு. அதற்குள் இருக்கும் லிக்டன்ஸ்டைன் அதற்குள் இருக்கும் இன்னொரு குட்டி நாடு.சமீபத்தில் இது தன் 300வது பிறந்த தினத்தை தடல்புடலாகக் கொண்டாடி இருக்கின்றது.160சதுரக் கி.மீற்றர் பரப்பளவைக் கொண்ட இந்தக் குட்டி நாட்டில் 37810பேர் வாழ்கிறார்கள். ஆஸ்திரியாவுக்கும் சுவிஸ் நாட்டுக்கும் இடையில் இருக்கும் இந்த நாட்டிலும் சுவிஸ் பிராங் பாவனையில் இருக்கின்றது. உலகின் ஆறாவது சிறிய நாட்டின்300வது பிறந்த தினத்தில் இளவரசர் இரண்டாவது Hans-Adam மக்களோடு மக்களாக பியர் அருந்தி, வெகு உற்சாகமாக இத தினத்தைக் கொண்டாடி இருக்கிறார். இங்குள்ளவர்கள் மன்னர் ஆட்சியை முழு மனதுடன் வரவேற்கிறார்கள. உலகின் பாதுகாப்பான இடங்களுள் ஒன்றாக நமது நாடு இருக்கிறது என்று பெருமையோடு சொல்கிறார் 51வயதான இந்த முடிக்குரிய இளவரசர். தலைநகரிலுள்ள கோட்டையில் அரச குடும்பம், தனது நாட்டுப் பிரஜைகளுடன், வெகு உற்சாகமாக இந்த நாளை கொண்டாடி இருக்கின்றது. இந்தக் குட்டி நாடு 1719ஆம் ஆண்டு, ஆகஸ்ட்15 அன்று ஸ்தாபிக்கப்பட்டது.

நீர் உயர நெல் உயரும்
நெல் உயர வரப்பு உயரும்,
வரப்பு உயர குடி உயரும்
குடி உயர கோன் உயர்வான்,
இது தான் உண்மை
அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.

# பொழியும் பிளாஸ்டிக் மழை

ஆகாயம், தரை, நீர் என்று எங்கும் காண்கின்ற பொருளாகி விட்டது பிளாஸ்டிக்!மனித குலத்தை நாசமாக்க அதே மனிதனால் அவனைச் சுற்றி ஒரு பிளாஸ்டிக உலகம் எழுப்பப்பட்டுவிட்டது. மனிதனது கண்டுபிடிப்பால் மனிதனே அவதிப்படுவதற்கு இந்த பிளாஸ்டிக் நல்லதொரு உதாரணம். பிளாஸ்டிக் என்பது, பெட்ரோலிய மசகு எண்ணையில் இருந்து பெறப்படும் ஒரு செயற்கை பொருள். மேலும், எளிதில் மக்கும் தன்மை கொண்டது அல்ல. பிளாஸ்டிக் கண்டுபிடிப்பதற்கு முன்னர், இயற்கை வளங்களிலிருந்து பெறக்கூடிய சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு உபயோகப்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பொருளும், எந்த ஒரு மாற்றமும் இல்லாமல், நீண்ட காலம் பூமியில் நிலைத்திருக்கிறது.

சமீபத்தைய கண்டுபிடிப்பாக, பிளாஸ்டிக் துகள்கள் மழையாகப் பொழிவதைக் கண்டுபிடித்துள்ளார்கள். இந்தக் கணடுபிடிப்பு நம்மைப் பயமுறுத்துகின்றது. காற்று, நீர், ஆகாயம்–எங்கும் எதிலும் நிறைந்திருக்கும் ஒன்று இந்தப் பிளாஸ்டிக் என்பது துல்லியமாகத் தெரிகின்றது. மழையில் மட்டுமல்ல, கொட்டும் பனியிலும் கலந்துள்ளன இந்த பிளாஸ்டிக் துகள்கள் என்கிறார்கள் இந்த ஆய்வாளர்கள். கொலறாடோ பிராந்தியத்தில் பெய்த மழைநீரைச் சேகரித்தே இந்த ஆய்வு நடாத்தப்பட்டுள்ளது. ஒரு விபத்தைப் போன்றதே என் கண்டுபிடிப்பு. துகள்களைக் கண்டு அதிர்ந்து போனேன் என்கிறார் வெதர்பீ என்ற பெயர்கொண்ட இந்த ஆய்வாளர். பிளாஸ்டிக் துகள்கள் பலமான காற்றில் பரவலாகப் பயணிக்கின்றன. ஆறு, குளம், கடல் ஏரி என்று எதையும் விட்டு வைப்பதில்லை. அதே சமயம் சுற்றுப்புறம் மாசடைவதைத் தடுக்க மெக்ஸிக்கோ செயற்கை மரங்களை வளர்க்க ஆரம்பித்துள்ளது. BioUrban என்றழைக்கப்படும் உலோக செயற்கை மரத்தால் 368 மரங்கள் செய்யும் பணியை தனித்துச் செய்ய முடியும். காற்றில் கலந்துள்ள காபனீரொட்சைட் வாயுவை உள்ளிழுத்து, சுத்தமான ஒட்சிசனை இதனால் காற்றில் பரவ முடியும். போனஸாக ஒரு புதுக் கவிதை


காலின்றி,
தலையின்றி,
பானை வயிறு வெள்ளை நிறப் பேய்கள்
காற்றிலாடுகிறது பிளாஸ்டிக் பைகளாய்.






# காட்டூன் ஓவியத்தின் அறிமுகமும் கலை வெளிப்பாடுகளில் அதன் பெறுமானமும்

அத்தியாயம் - 3.1




எஸ்.தர்மதாஸ்

விகடமும், விமர்சனமும் கலந்த வரைபுகளைக் காட்டூன் என அழைக்கின்றனர். அவை சமூக அசைவியக்கத்தில் நின்று அச்சமூக நிலவரங்களை, அடுக்கமைவுகளை, சமயக் கலாசார விழுமியங்களை வெளிக்கொள்கின்ற ஓர் எளிய ஊடகமாகத் தொழிற்படுகின்றன. சிக்கல் வாய்ந்த சமூக வரலாற்றை சுவைபட விளக்கிக் கொள்வதற்கு எம்முன் உள்ள முக்கிய ஆவணங்களுள் ஒன்று நகைச்சுவைப் பிரதிகளே. அவற்றுள் காட்டூன் முக்கியமான ஊடகமாகின்றது.

19 ஆம் நூற்றாண்டின் அச்சுக்கலை முகிழ்ப்புடன் ஆரம்பமான இதழியல் துறை (Print Media) சமூக ஊடாட்டங்களை வெளிப்படுத்தும் பணியை மேற்கொள்ளத் தொடங்கிற்று. இதழியலின் வளர்ச்சியின் ஊடாகக் காட்டூன் எனும் விடயமும் சமூக அரசியல் வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் ஊடகமாகத் தொழிற்படத் தொடங்கியது. இதில் மின்னியக்க ஊடகங்கள் (Electronic Media) காட்டூன்களை வேறு பரிமாணங்களுக்கு விரித்துச் சென்றது.

"Cartoon" என்ற ஆங்கிலச் சொல்லின் மூலவேர் இத்தாலியச் சொல்லான "Cartone" என்பதிலிருந்து முகிழ்ந்ததாகும். "Cartone" என்பது "காகிதம்" என அர்த்தப்படும்.(ரவிராஜ்-1990:03)

இன்று காட்டூன், கேலிச் சித்திரம், கருத்தோவியம், நகையம், கருத்துப்படம் எனும் பெயர்களால் வழங்கப்படுகின்றது.(Britanica-1968:795)

காட்டூன் என்பது கருத்தூண்கள் (Though Providing) எனவும், கண்ணுக்குத் தெரியக்கூடிய பட விளக்கமுடைய அர்த்தம் காட்டும் அமைப்பு (Various forms of visual art and inustration) எனவும் விளக்கம் கொடுக்கப்படுகிறது

மனித இனத்தின் பண்பாடு, அறிவு வளர்ச்சி ஆகியவை எப்படித் தொடங்கின என்பதைப் புரிந்துகொள்ள உதவும் முக்கியமான சான்று பாறைக் கலைகளே. மனித இனம் நாகரிமடைவதற்கு முன்பிருந்து மனிதன் தோன்றி வளர்ந்து பல்வேறு சமூதாய அமைப்புக்களை உருவாக்கியது வரையிலான வரலாற்றின் மிகப் பெரும் சான்றாக இவை திகழ்கின்றன.



வரலாற்றுக்கு முற்பட்ட தொன்மையான காலப் பகுதியில் (Primitive period) செதுக்கல்களின் ஊடாகவும், வரைகோடுகளின் மூலமாகவும் உருவங்களை ஆதிகால மனிதன் தன் எண்ணங்களை, தமக்கிடையேயான கருத்துப் பரிமாற்றப் புரிதல்களுக்காகவும், பயிற்சிக்காகவும் உருவங்களை வரைந்துள்ளான். அவ்வுருவங்கள் மந்திர தந்திர சக்திகளுடன் (Magical power) வேட்டைக்கும், விளைச்சலுக்கும் உறுதுணையாக அமைதற்காக வரைந்துள்ளான். அதில் இயல்பான தன்மைகள் அற்ற அருவ உருவங்களாக (Abstract) , உருத் திரிப்புக்களாக வரையப் பட்டிருப்பதனைக் காணலாம். இதுவே காட்டூன் ஓவியங்களுக்கு முன்னோடியாக அமைந்தன எனலாம். (Cartoon-2003:08)



புராதன எகிப்திய நாகரிக காலத்தில் கதை சொல்லும் பாணியிலான ஓவியங்கள் (Naïve painting) காணப்பட்டன. குறிப்பாக இத்தாலியில் இருந்து எடுக்கப்பட்ட பப்பிரஸ் தாளில் வரையப்பட்ட ஓவியம் ஒன்றில் ஆடு மாதிரியான உருவமுடைய Gazelle எனும் விலங்குடன் சிங்கம் செஸ் விளையாடுவது போன்றும், மற்றும் ஆடுகளை மேய்த்துச் செல்லும் ஒரு நாய் போன்ற விலங்கும் காணப்படுகின்றது. இது காட்டூன் பாணியில் அமைந்த, அக்காலத்திலேயே ஜனரஞ்சக விடயங்கள் மாற்றமடைந்து வந்தமைக்கு இது ஒரு நல்ல சான்றாகக் காணப்படுகின்றது.

அதேநேரம் எகிப்திய சிற்பங்களிலும் உருச் சிதைப்பு முறை தோன்றலாயிற்று. பரோவா அகேனதன் (Ahenaton) காலத்திலேயே காட்டூன் பாணியிலமைந்த சிற்பங்கள் தோற்றம் பெறலாயிற்று.(Cartoon-2003:08)



கிரேக்க உரோமன் காலத்தில் காட்டூன் இன்னோர் பரிமாணத்திற்குள் ஊடுருவுகின்றது. இவர்கள் வித்தியாசமான உருவங்களை எல்லாம் காட்டூனில் வெளிப்படுத்தியுள்ளனர். அதிலும் உளவியல் தன்மைகளை அக்காலத்திலேயே வெளிப்படுத்தியிருப்பதனைக் காணலாம். இதில் நகைச்சுவை எனும் விடயம் காட்டூனில் உள்வாங்கப் படுகின்றது. இங்கு Fauns எனச் சொல்லப்படும் கொம்பு, வால் வைத்த இலத்தீன் கிராமியக் கடவுள், Satyrs எனப்படும் குதிரை அல்லது ஆடு மாதிரி உருவைக் கொண்ட காட்டுப் பகுதிக் கடவுள் போன்றவை கருக்களாகக் காணப்பட்டன. (Cartoon-2003:09)



பெரும்பாலும் கிரேக்க, உரோம மட்பாண்டங்களிலேயே இவ்வகையான காட்டூன் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் "Poson" எனும் கிரேக்க ஓவியர் கிரேக்கத்திலுள்ள மிகக் கேவலமான, அசிங்கமான மக்களை அப்படியே ஓவியங்களாக வரைந்துள்ளார். இது நகைச்சுவை உணர்வுக்காகவே இவ்வாறு வரையப்பட்டிருப்பதனைக் காணலாம்.(Cartoon-2003:09)

- தர்மதாஸ்.

# வைரமுத்து வாத்தியார் பேசுகிறார்



கல்வி அறிவு மட்டும் போதாது அனுபவ அறிவும் ஒரு விடயத்தைச் செம்மைப் படுத்தவும், நேர்த்தியாகச் செய்யவும் உதவுகிறதென்ற விடயத்தை நான் பல தடவைகளில் உணர்ந்திருக்கிறேன். எனது பாடசாலைக் காலங்களிலும், பின்னர் நான் படிப்பித்த பாடசாலைகள் தந்த அனுபவத்தினூடாகவும் பார்த்திருக்கிறேன். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்பதைப் போலப் பல பேராசிரியர்களும், கலாநிதிகளும் தமது கல்வி வட்டத்தில் வேணுமாயின் வென்றிருக்கலாம், ஆனால் அதை விட்டுப் புறம்பான பல காரியங்களில் அவர்கள் தோற்றவர்களாக வலம்வருவதைப் பார்த்தபோது மனம் வேதனையடைகின்றது. அவர்கள் தமது பதவிகளிலும், இருக்கைகளிலும் இருப்பைத் தக்க வைக்கின்ற அளவுக்குச் சொந்த வாழ்க்கையில் தமது இருப்பையும், அடையாளத்தையும் தக்க வைத்துக் கொள்வதில்லை.

ஒரு பெரிய பிரசித்தி பெற்ற ஓய்வு நிலையில் உள்ள நீதிபதி ஒருவரை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் திருமண வயதில் இருந்த போது வழமைபோல் அவருக்குத் திருமணப் பேச்சு நடைபெற்றுப் பாரிய சீதனத்துடன் சொந்தத்தில் ஒரு பெண்ணைப் பேசிக் கலியாணமும் செய்துவைத்தனர். ஆனால் அந்தப் பெண் ஒரு குடும்பச் சூழ்நிலையில் வளர்ந்த கிராமத்துப் பெண். அவளுக்குக் கல்விச் சூழல் என்பது புதியது. அதற்குப் பழக்கப்படவும் இல்லை. அவள் உயர் கல்வியையும் பெற்றதாகவும் இல்லை. பின்பு அந்த நீதிபதி தொழில் ரீதியாகப் பல இடங்களுக்குச் சென்று பணியாற்ற வேண்டிய சந்தர்ப்பத்தில் பல பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ள வேண்டி வந்த போதெல்லாம் அவர் மானசீகமாக இடைஞ்சல்களுக்கு உள்ளானார். தேவை இல்லாது மனைவிமீது வெறுப்பைக் கொட்டுவதும், வேண்டாதவள்போல அவளை நடத்துவதும் அவர் பழக்கமாயிற்று.

பல வருடங்களுக்குப் பின்பு அவர்கள் பிள்ளைகள் படித்துப் பெரியவர்களானதும், ஒரு நீதிபதியின் மனைவி என்ற இடத்தில் இருந்த அவள் பின்பு, வைத்தியரினது தாயார் என்றும், பொறியலாளரின் தாயார் என்றும் அடையாளப்படுத்தப்பட்டாள். நீதிபதி வயது முதிர்ந்தவராய்ப் போனபோது சகல விடயங்களிலும் அவர் மனைவியையே தங்கி வாழவேண்டிய சூழ்நிலைக்குப் போய் பின்னர் தனது கடைசிக்காலத்தையும் மிகவும் வேதனையோடு கழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத்தள்ளப்பட்டிருந்தார்.

நீதிபதியாக இருந்தவர் தனது கல்விப் படிப்பால் நீதிபதியானதும், அனுபவப் படிப்பாற்றல் அற்றவராக இருந்தபடியால் வாழ்க்கையில் தோற்றுப்போனதையும் கண்ணால் கண்டவன் இந்த வயிரமுத்து. எனவே வாழ்க்கையில் புத்தகப் படிப்பும், அனுபவக் கல்வியும் இணைந்தும் சமாந்தரமாகவும் செல்ல வேண்டும் என்றதில் நான் அக்கறை உள்ளவன். நீங்கள் இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்..?

# அந்த ஒரு நிமிடம்

எஸ். கணபதி

அந்தத் துயரம் அவனைத் துரத்திக்கொண்டு தான் இருக்கிறது. ஆனாலும் அந்த முடிவை அவன் எட்டுவதற்கு அவன் நண்பன்தான் காரணமாயிருந்திருக்கிறான்.

'என்னெண்டாலும் கொஞ்சக் காலம் உறவாய் இருந்திருக்கிறாய். சரியோ, பிழையோ நீ போக வேணும். ஒரு மனுசர் ஓராளை ஏற்கிறதும், நிராகரிக்கிறதும் அப்பப்ப வாற சூழ்நிலையைப் பொறுத்தது. என்னைப் பொறுத்தவரை எமக்கு நிரந்தரமானதெண்டு நான் ஒண்டையும் சொல்லமாட்டன். மனம் மாறக் கூடியதாகச் சம்பவங்கள் நடக்கேக்கை அவை தங்கடை எண்ணங்களையும் மாத்திப் போடுவினம். பிறகு தாங்கள் விட்டது பிழை எண்டு யோசிப்பினம். அப்ப அவை யோசிக்கேக்கை சில நேரம் காலம் போயிடும். ஆனால் உன்ரை விசியத்திலை அவை யோசிச்சால் என்ன? திருந்தினால் என்ன? எல்லாம் இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை எண்ட கதைதான்" என அவன் நண்பன் பேசிய போது அதை மறுக்க முடியாதவனாகச் சோமன் இருந்தான்.

யாழ். பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து பெரிய ஆஸ்பத்திரிவரை நடந்து சென்ற போது அவன் நினைவுகள் அங்குமிங்குமாய் தட்டுத் தடுமாறிக்கொண்டிருப்பதை அவன் உணர்ந்து கொண்டான். எந்த நேரத்திலும் அவன் மனம் மாறலாம். நண்பனின் கட்டளைப்படி அது மாறக்கூடாது. கட்டளை என்பதைவிட அவன் வேண்டு கோளாகவும் வைத்திருக்கிறான்.

'எப்படி இருந்தாலும் அவள் அப்படிச் செய்திருக்கக் கூடாது. பாவனைக்கு உதவாத ஒரு பொருளை எறியிற மாதிரி....ச்..சீ.." அவனுக்கு அதை நினைக்க அருவெறுப்பாக இருந்தது.

ஒற்றை கமக்கட்டுக்குள் 'கிளச்" ஐ வைத்தபடி அந்தக் கை விரல்களில் அவன் வாங்கிய அப்பிள்கள் நிரம்பிய பையொன்று தொங்கிக் கொண்டிருந்தது. மறு கையில்லாத பக்கமாக அவன் போட்டிருந்த சேட்டின் நீண்ட கை தொங்கிக் கொண்டிருந்து. அதனை வீசித் தன்முகத்தில் வழிந்தோடிய வியர்வையைத் தொடைத்துக் கொண்டான் சோமன்.

பலர் அவனைக் கடந்து சென்றனர். அவர்களில் சிலர் அவனைப் பார்த்துவிட்டுச் செல்வதாக அவன் உணர்ந்தான். பார்வைகள் சாதாரணமாக இல்லை. பரிதாபத்தோடு பார்க்கிறார்களா? அல்லது ஏழனத்தின் வெளிப்பாடா அது? அவனால் இனம் காண முடியாதவனாக...

இன்னும் சில நிமிடங்களில் அவன் அவளைப் பார்க்கப் போகிறான். பார்த்ததும் உடனடியாக அவன் எப்படியான உணர்வை வெளிப்படுத்தப் போகிறான் என்றது அவனுக்கே புரியாமல் இருந்தது. இத்தனை விடயங்கள் நடைபெற்றப் பிறகு அழுவது என்பது முடியாத காரியம்.

அவனைக் கடந்து சென்றவரின் கை அப்பிள் பையைத் தட்டியது. 'நல்ல காலம். பை தப்பி விட்டுது. கிழியேல்லை" அவன் ஒருமுறை நின்று திரும்பிப் பார்த்துக் கொண்டான். தட்டியவன் என்ன அவசரமோ திரும்பிப் பாராது நடந்து கொண்டிருந்தான்.

யுத்தத்தின்போது ஒரு கையையும்,காலின் பாதத்தையம் இழந்தவன் சோமன். அதுவரை அன்பாய், ஆதரவாய் மகிழ்ச்சியோடு இருந்தவள் ஒரு நாள் 'எத்தினை காலம் உழைப்பில்லாத ஓராளோடை சீவியம் நடத்திறது. பிள்ளையையும் வைச்சக்கொண்டு என்னாலை இருக்கக் கஸ்டமாக்கிடக்கு. நான் என்ரை பாட்டிலை போகப்போறன்." என்று வெளிப்படையாகச் சொல்லிவிட்டுப் பிள்ளையையும் கூட்டிக்கொண்டு போய்விட்டாள். அவன் கதைப்பதற்குக் கூட அவள் அவகாசம் கொடுக்காது சென்றதுதான் அவனுக்கு வருத்தமாக இருந்தது. அதுவும் பிள்ளையோடு.... கால் உடைந்த கதிரை ஒன்றைத் தூக்கி எறிவதைப் போல....

பின்னர் எதிர்பாராது சந்தித்த ஒரு பள்ளித் தோழனின் மோட்டார் கராச்சை நிர்வகிக்கின்ற பொறுப்பைப் பெற்றுக் கொண்டதோடு அவன் நிலை மாறத்தொடங்கியது.

பின்னர் அவனுக்கும் அவளுக்கும் தெரிந்த சிலர் தூது வந்தனர். அவள் மனம் வருந்துவதாகச் சொன்னார்கள். பின்னர் ஒருவர் அவன் பிள்ளையையும் கூட்டிக் கொண்டு வந்தார். எல்ரோரும் பணத்தை மையமாக வைத்துச் செயற்படுவதாக அவனுக்குத் தோன்றியது. நெஞ்சு ஈரப்பட மறுத்தது. பிள்ளைக்காகத் தன்னும்....!





**நண்பகல் 12 மணி 11 நிமிடம் 21 செக்.**

குறித்த வாட்டின் நுழைவாயிலில் சோமன் நின்று கொண்டிருந்தான். 'பாக்கிற நேரம் முடியப்போகுது. ஓடுங்கோ" என்று துரத்தியபடி ஒரு வயோதிபப் பெண் ஓடினாள். இடுப்பில் கட்டியிருந்த சாரம் இளகிக் கிடந்தது. வாயில் சேட்டுத் தலைப்பை வைத்துக் கொண்டு சாரத்தை இறுகக் கட்டினான். அவன் கண்கள் உள்ளார இருந்த கட்டில்களை ஒருமுறை துளாவிக் கொண்டு வந்தன. வண்டி ஒன்றில் வைத்துக் காயப்பட்ட ஒருவனைத் தள்ளிக் கொண்டு போனான் ஒரு அட்டென்டன்..

**நண்பகல் 12 மணி 14 நிமிடம் 12 செக்.**

'ஏன் ஐயா நடு வழியிலை நிக்கிறியள்?" ஒரு நேர்ஸ் வந்து கேட்டாள்.

'காட் அற்றாக் எண்டு கொண்டு வந்திருக்கினம். அவவின்ரை பேர் பூமணி. அவவைப் பாக்க வேணும்" சோமன் பதில் சொன்னான்.

'ஐயா. உப்பிடியே நேரைபோய் வலப் பக்கம் திரும்பிக் கேளுங்கோ. சொல்லுவினம்" நேர்ஸ் சொன்னாள்.

**நண்பகல் 12 மணி 19 நிமிடம் 32 செக்.**

வாட் நம்பரைத் தேடிப் பிடித்து வந்துவிட்டான். அவர்கள் சொன்ன இடத்தில் ஆள் இல்லை. பக்கத்தில் இருந்த வயோதிபர் தான் சொன்னார் ஐசியூவுக்குக் கொண்டு போயிருப்பதாக.

**நண்பகல் 12 மணி 22 நிமிடம் 48 செக்.**

ஐசியூ வாசலில் நின்றபடி வருவோர் போவோரை அவதானித்துக் கொண்டிருந்தான் சோமன்.

'ஆரைப் பாக்க நிக்கிறயள்" ஒரு இளவயதுப் பெண் வந்து கேட்டாள். ஆரோ தெரிந்தவள் போல் கிடந்தது."ஏன் கேக்கிறியள்" சோமன் அவளைக் கேட்டான்.

'இல்லை பூமணி அக்கான்ரை அவரே நீங்கள்?" அவள்தான் கேட்டாள்.

'ஓம். சோமன் தலையசைத்தான்"

'இப்ப கொஞ்ச முன்னமும் அவ உங்களை விசாரிச்சவ. பொறுங்கோ வாறன்" என்றபடி அவள் ஓடினாள்.

**நண்பகல் 12 மணி 28 நிமிடம் 22 செக்.**

'வாங்கோ" அவள்தான் கூப்பிட்டாள்.

உள்ளே சென்ற அவனை பூமணியின் கண்கள் வவேற்றதுபோல இருந்தது. வாய், மூக்கு வழியாக பிளாஸ்ரிக் வயர்கள் போடப்பட்டு அவள் உடல் ஒரு இயந்திரத்தைப்போல இயங்க வைத்திருப்பதாக அவனுக்குப்பட்டது.

**நண்பகல் 12 மணி 32 நிமிடம் 04 செக்.**

அவள் அருகே வருமாறு கையசைத்தாள். சோமன் அவளை நெருங்கினான். கைத்தடி தடுமாறி நிலத்தில் வீழ்ந்தது. கையால் சாரத்தைப் பற்றிக் கொண்டபடி அவள் படுத்திருந்த கட்டில் விழிம்பில் அவன் மெல்ல அமர்ந்தான். அவன் கைகளைப் பற்றிபடி அவள் கண்கள் மெல்ல மூடிக்கொண்டன.

ஐசீயூக்கு வெளியே கதிரையில் அநாதரவாகக் கிடந்த அப்பிள்களை யாரோ எடுத்துச் சென்றிருக்க வேண்டும். சோமன் கைத்தடியை ஊன்றிக் கொண்டு வேகமாக நடந்தான், பார்ப்பதற்கு பைத்தியம் பிடித்த ஒரு மிருகத்தைப் போல.....






# தகராறும் இடைநிறுத்தமும்

அமெரிக்காவின் ஓஹியோ மாகாணத்தில் உள்ள சின்சிநற்றி டென்னிஸ் சுற்றுப் போட்டி , உலகின் மிகப்பழமையான (1899) ஒன்றாகும். அணமையில் இங்கே இடம்பெற்ற ஒரு மோதலில் நடுவருடன் வாதாடினார் என்ற குற்றச்சாட்டிற்காக , ஆட்டக்காரர் 167,000 அவு.டொலர்(20,054,013.45slr)தண்டப்பணம் செலுத்தியாக வேண்டும். இவர் பெயர் Nick Kyrgios. இந்த வருடம் இரண்டு கிண்ணங்ஹகளை வென்ற இவரின் வெற்றிப்பணத்தின் 10 வீத தொகையே இப்பொழுது தண்டப் பணமாக அறவிடப்படுகின்றது. இப்பொழுது விளையாடுவதிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள இவர், வரப்போகும் பிரபல்யமான யுஎஸ் ஓபின் தொடர் மோதலிலும் பங்கேற்க முடியாத நிலை வரப்போகின்றது. நாவடக்கம் எவருக்குமே தேவை!







# ஆட்டங் காணாத ஆட்டம்

தான் விளையாடிய இறுதி 23 இன்னிங்ஸ்களில், முதற் தடவையாக ஒரு செஞ்சரி அடித்திருக்கிறார் இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் திமுத் கருணரட்ண. இவரது 9வது சதம், இவரது அணியின் அசத்தலான வெற்றிக்கு ஒரு முதுகெலும்பாக அமைந்திருப்பது இங்கே விஷேடம். ஆடப்படும் ஒவ்வொரு டெஸ்ட் போட்டிகளின் முடிவிலும், புள்ளிகள் இட்டு அணிகளைத் தரப்படுத்தும் புதிய முறையில், இல்ங்கை அணி 60 புள்ளிகளைப் பெற்று, முதலிடத்தைப் பிடித்துள்ளது. இரண்டு ஆண்டு காலத்தைக் கொண்டதான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடர் கடந்த ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆஷஸ் டெஸ்ட் போட்டிகளுடன் ஆரம்பமானதோடு 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி முடிவடையவுள்ளது. இந்தக் காலப்பிரிவில் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தை பிடிக்கும் இரு அணிகள் சம்பியன் பட்டத்திற்காக மோதவுள்ளன.

இந்தத் தடவை ஆட்டங் காணாத இலங்கை அணியின் நிதானமான ஆட்டம், ரசிகர்களை மனங்குளிர வைத்துள்ளது. நான்காவது இன்னிங்ஸில் ஒரு நூறு அடிப்பதில், நான்காவது ஆளாகி இருக்கிறார் திமுத். இவருக்கு முன்னர், அரவிந்த டி சில்வா (1998), மஹேல ஜயவர்த்தன(2006), குசல் பெரேரா(2019) ஆகியோர் , இறுதி இன்னிங்ஸில் சதமடித்திருக்கிறார்கள். ஆனால் இலங்கை அணியின் ஒரு ஆரம்பத் துடுப்பாட்டக்காரர், நான்காவது இன்னிங்ஸில் நூறடிப்பது இதுவே முதற்தடவையாகும்.

# போதை மயக்கத்தில் ஒரு பேதை

பார்வையாளர் ஒருவருடன் சூடான வாய்த் தகராறில் சம்பந்தப் பட்ட பெண் குத்துச் சண்டை வீராங்கனையாக அலீசியா பொக்ஸ் என்பவரை அதிகாரிகள், வரப்போகும் சிறப்பு மோதலான சம்மர்ஸ்லாமில் கலந்து கொள்ள அனுமதிக்காமல், "வீட்டுக்கு" அனுப்பியுள்ளார்கள். 33வயதான இவர் ஏற்கனவே பல தடவைகள் குடிபோதையில் அதிகாரிகளிடம் வசமாக மாட்டிக்கொண்டிருக்கிறார்.



# தொடரும் பணி

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக ரவிசாஸ்திரி நீடிப்பார் என பிசிசிஐ அறிவித்துள்ளது. புதிய பயிற்சியாளராக 2,000 பேர் விண்ணப்பித்த நிலையில், ரவிசாஸ்திரியை பி.சி.சி.ஐ. ஆலோசனை குழு ஒருமனதாகத் தேர்வு செய்துள்ளது.




# அற்பகால ஆயுள்கால ஒப்பந்தம்

அமெரிக்க மல்யுத்தக் களத்தில் பலருக்கு சிம்ம சொர்ப்பனமாக இருக்கும் "அண்டர்டேக்கர்" என்று அறியப்படும் குத்துச்ண்டை வீரருடன் இந்த சம்மேளனம், ஆயுள்கால ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது. பெருமளவு பணத்தை ஒப்பந்தம் மூலம் சம்பாதிக்கும், இந்த வீரர் வேறு எந்த வழியிலும் பணம் சம்பாதிக்க அனுமதிக்கப்படமாட்டார். ஏழு தடவைகள் சாம்பியனாக ஜொலித்த 54 வயதான இந்த அசாதாரண பலசாலி, எவ்வளவு தொகையைப் பெறுகிறார் என்பது வெளிப்படுத்தப்படவில்லை.நீண்ட காலமாக "சண்டை போடும்" இந்தச் "சாவு மனிதன்" களத்தில் இருந்து ஒதுங்கும் காலம் தூரத்தில் இல்லை என்ற நிலையில், இவருடன் ஆயுள் கால ஒப்பந்தம் என்பது வேடிக்கையாகத்தான் இருக்கின்றது. ஏப்ரல் 2020இல் இடம்பெறப் போகும் வருடாந்த "றெஸ்ஸிள்மேனியா" மோதலில், இவருக்கான எதிரி இந்தச் சம்மேளனத் தலைவர் மக்மோகனின் பிரத்தியேகமான தெரிவாக இருக்கும்.



# அசுரப் பந்து வீச்சு

இங்கிலாந்து அணியினரின் வேகப் பந்து வீச்சாளர் ஆர்ச்சர், அவுஸ்திரேலிய துடுப்பாட்டக்காரர்களை நன்றாகவே இரண்டாவது டெஸ்டில் மிரட்டி இருந்தார். சென்ற தடவை இரு செஞ்சரிகள் அடித்து, இங்கிலாந்து அணியை தடம்புரள வைத்த ஸ்மித்தை, இந்தத் தடவை ஆர்ச்சர் தனது மிரட்டலான பந்து வீச்சால், நிலைகுலைய வைத்து தரையில் வீழ்த்தியும் இருக்கிறார். ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தாலும், ஆர்ச்சர் துடுப்பாட்டக்காரர்களை நிலைதடுமாற வைப்பதில் வெற்றிகண்டுள்ளார். தொடரும் மோதல்களில் விளையாட்டின் போக்கை மாறவைப்பவராக ஆர்ச்சரின் பந்துவீச்சு இருக்கப் போவதாக, இங்கிலாந்தின் அணித் தலைவர் றூட் அபிப்பிராயப்பட்டுள்ளார். பிந்திய செய்திகளின்படி, இறுதி நாளில் ஆட்டத்தில் பங்கேற்காத ஸ்டீவ் ஸ்மித், மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் விளையாடாத நிலை வரலாம்.

# பணத்தைக் கொட்டும் குதிரை ஓட்டம்

பணத்தில் புரள்பவர்கள் அரேபியர்கள். செலவழிப்பதிலும் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல. சரித்திரத்தில் என்றுமே இல்லாதவாறு, 20 மில்லியன் பரிசுப் பணத்தை சவுதிக் கிண்ணத்திற்காக அள்ளி வீசும் புதிய குதிரைப் பந்தயப் போட்டியொன்றை அறிமுகம் செய்வதில் அவர்கள் முனைப்பாக இருக்கிறார்கள்.

Pegasus உலகக் கிண்ணம் என்ற பெயரில் இடம்பெற்று வரும் குதிரைப் பந்தயப் பரிசுப் பணமே இதுவரையில் பெரிய தொகையாக (2018இல் 16மி.டொலர் தொகை) இருந்து வந்துள்ளது. அதற்கு முன்பு துபாய் உலகக் கிண்ண பரிசுத் தொகையான 12மி.டொலர் தொகையே "சாம்பியன்". எவர் விரும்பினாலும் பங்குபற்றலாம். அதிக பட்சம் 14 குதிரைகளை களத்தில் இறக்கப்படும். வெற்றி பெறுபவர் சுளையாக 10 மி.டொலர் தொகையைக் கொண்டு செல்வார்.. பெப்ரவரி 29, 2020இல் போட்டிகள் இடம்பெறவுள்ளன. 1800 மீற்றர் தூரத்தை பந்தயக் குதிரைகள் ஓடி முடித்தாக வேண்டும். Pegasus, துபாய் வெற்றிக் கிண்ணப் போட்டிகள் இடம்பெறும் நாட்களின் இடைவெளியில் இந்தப் போட்டியை நடத்த உள்ளார்கள்.




# ஆரம்பமாகிவிட்டது உலக பட்மின்டன் போட்டி

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கும் 25ஆவது உலக பாட்மிண்டன் சாம்பியன் ஷிப் போட்டி சுவிட்சர்லாந்தின் பாசெல் நகரில் கடந்த திங்கட்கிழமை தொடங்கி 25ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது. இதுவரையில் இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றுள்ள 24 வயது இந்தியரான பீ.வீ.சிந்து இந்தத் தடவை, தங்கப் பதக்கத்தை குறி வைத்துள்ளார்.றியோ ஒலிம்பிக் போட்டியில் இவர் வெள்ளிப் பதக்கத்தை வென்றிருந்தார். கடந்த வருடம் ஒலிம்பிக் சாம்பியனும், ஸ்பானியருமான கரோலினா மாரின் என்பவர், சிந்துவை இறுதி மோதலில் தோற்கடித்திருந்தார். ஆண்களும் பெண்களுமாக 45 நாடுகளிருந்து வந்துள்ள 359 போட்டியாளர்கள், இந்தப் போட்டியில் பங்கேற்கிறார்கள். இலங்கையின் பாட்மிண்டன் சம்பியனான நிலூக் கருணாரத்ன இப் போட்டித் தொடரில் பங்கேற்கிறார்.





# அங்கதன் பதில்கள்

● **புதிதாக வந்த இராணுவத் தளபதி என்ன செய்வார்?**

க.ஜெயசூர்யா – நவாலி

■ முன்பு அவர் என்ன செய்தார் என்பதை உணர்ந்து கொண்டால் எதிர் காலத்தில் என்ன செய்வார் என்பது புரிந்து விடும்

● **கோயில் ஒலி பெருக்கிகளினால்..?**

சர்வேஸ்வரன் – கீரிமலை

■ ஆத்மா இறைவனோடு லயமாகும் ஆலய அமைதிக்கு ஆபத்து. ஒலியால் வலிபெருக்கிகளாக செயற்படுகின்றன.

● **தோட்டக் காணிகளில் மாடி வீடுகள்... நினைக்கச் சந்தோஷம் தானே?**

மகாலிங்கம் – சுன்னாகம்

■ மாடி வீட்டில் இருந்து பார்க்கும் போது பசுமை நிறைந்த தோட்டங்களை இழந்துவிட்ட கவலைதான் மிஞ்சுகிறது.

● **பாதை தெரியாமல் போதை ஏறக் குடிப்பவர் குடும்பம் எப்படி இருக்கும்?**

க.ரமனகரன் அரியாலை

■ அக் குடிகேடன் குடும்பம் குடியும் குடித்தனமுமாக இருக்கும்

● **ரணில் பிரபாகரனைப் பற்றிப் புகழ்வது எதனால்?**

எஸ்.கனகசூரியன் ஏழாலை

■ எல்லாமே வாக்கு வங்கியை குறிவைத்து பேசும் வார்த்தை ஜாலம்தான்.

● **தற்போதைய பட்டப் படிப்பு பற்றிய தங்கள் கருத்து...**

த.த.உமலோகனி – அளவெட்டி

■ பட்டம் வெறும் தம்பட்டம் அடிப்பதற்காக மட்டுமே. படிப்பின் தரமோ மகா மட்டமாகியே வருகிறது

● **வாழ்க்கையில் மனைவியின் முன்னால் நடிப்பவர் பற்றி?**

ப.கருணாநிதி – முல்லைத்தீவு

■ அவரின் நடிப்பில் மனைவி மயங்கினால் அவள் அப்பாவி ரசிகை. நம்பத் தயங்கினால் இவர் ஒரு அப்பிராணி மனிதர்.

● **தேவையில்லாமல் பொய் பேசுபவர்கள் பற்றித் தங்கள் கருத்து?**

சி.பிரான்சிஸ் – மாதகல்

■ எதிர்காலத்தில் அரசியல் வாதியாக வரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் என நினைக்கிறேன்

● **எப்பொழுதும் தன்னைப் பற்றியே சிந்திப்பவன் பற்றியும், தனக்கு என வைத்திராது கொடுப்பவன் பற்றியும்..?**

அர்ஜீன்தாஸ் – மண்டைதீவு

■ முன்னவர் வெறும் மனிதர் – மற்றவர் மகா மனிதர்

● **கார் வைத்திருந்தும் நடந்து திரிபவன் எப்படிப்பட்டவனாக இருப்பான்?**

க.வேலுச்சாமி – கிளிநெச்சி

■ தன் கால் தேய்ந்தாலும் காரின் ரயர் தேயக் கூடாது என நினைக்கும் காருண்யக் கஞ்சன்

● **குடும்பத்துக்கும் உதவாமல் சமூகத் துக்கும் உதவாமல் திரிபவனுக்கு நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?**

சின்னத்தம்பி சிவமணி – மன்னார்

■ அவன் தனக்குதானே உதவாக்கரையாக இருப்பான்

● **பதின்மூன்றாம் சட்டத் திருத்தம் ஒரு வெற்றுப் பாத்திரம் என்று தெரிந்தும் ஏன் இன்னும் அதைப் பற்றிப் பேசுகிறார்கள்?**

திருக்குமரன் – பருத்தித்துறை

■ அதனை ஓர் அமுதசுரபி என அவர்களின் சுயலாப அரசியல் ஆலோசனைகள் அறிவுறுத்தியிருக்கிறதே!

● **கற்றது கை மண் என்று சொல்லிவிட்டு எல்லாம் அறிந்தவன்போலப் பேசுபவனைக் கண்டால்?**

ச.சத்தியசீலன் – மானிப்பாய்

■ அவன் தன்னை தானே மேதையாக நினைக்கும் பேதை அவ்வளவுதான்!

● **இராஜராஜசோழன் காலத்துச் சிலைகளுக்கும் தற்போதைய சிலைகளுக்குமிடையே என்ன வித்தியாசம்?**

ஆ.மாசிலாமணி – கிளிநொச்சி

■ அவை விலை மதிப்பற்ற கலை வடிவங்கள் இவை விலைபேசப்படும் சிலை வடிவங்கள்

● **நல்லூர் திருவிழாவில் ஏற்பட்ட சோதனை அனுபவம் பற்றி?**

தி.ஆரூரன் – மல்லாகம்

■ பக்தனை ஆண்டவனும் சோதிக்கிறான். ஆள்பவனும் சோதிக்கிறான். இது அடியவர்களுக்கு வேதனையா? ஆன்மீக போதனையா? அப்படியும் மனம் சிந்திக்க தொடங்கியிருப்பது ஒரு சாதனைதான்

● **தற்போது நடைபெறும் விபத்துக்கள் என்னத்தை உணர்த்துகின்றன?**

எம்.செல்லக்கணபதி – வேலணை

■ வீதிப் போக்குவரத்து விதிகளால் மக்கள் தலைவிதி அகாலத்தில் விபத்துக்களால் தீர்மானிக்கப்படுவதை தடுக்க முடியவில்லை என்பதை!

● **ஒருவனுக்குக் காலம் கை கொடுக்காவிட்டால்..?**

வ.சுரேஸ்ஜித் – பளை

■ காலன் கை கொடுப்பான் என நம்பி மனமுடைய வேண்டியதில்லை. காலமும் விரைவில் காலமாகி வடும் என்பதை உணர்ந்து காலத்தை புறந்தள்ளி முன்னேற முயன்றால் வெற்றி நிச்சயம்

● **சகல அரச அதிகாரிகளையும் ஒரு நிலைப்படுத்தி நாட்டை வலுப்படுத்துவோம் என்கிறாரே ரணில்... செய்வாரா?**

சிறிசபேசன் சிறிகுகன் – நாவற்குழி

■ முதலில் சகல உறுப்பினர்களையும் ஒரு நிலைப்படுத்தி ஒன்றுபடுத்தி முதலில் அவர் தனது கட்சியை வலுப்படுத்தட்டும் பிறகு பார்க்கலாம்

● **ஜனாதிபதித் தேர்த்தல் தொடர்பாக ஐயா சம்பந்தன் என்ன முடிவு எடுப்பார்?**

அ.குருபரதன் – பன்னாலை.

■ ஐயா டெல்லி போயிருக்கிறார் இந்தியா விரும்பும் அல்லது சொல்லும் முடிவை தமது முடிவாக இங்கு வந்து சொல்லுவார். இதில் சுய முடிவுக்கு இடமேயில்லை



**அங்கதனிடம் பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கோ அல்லது இல.10, வில்வந்தெரு ஒழுங்கை கொழும்புத்துறை,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**தரமான கேள்விகளை அனுப்புவோருக்கு 500 ரூபா பணப் பரிசில் வழங்கப்படும்.**

பெயர் :.................................................

முகவரி :...............................................

.................................................

தொலைபேசி இல. ...................................

---

# அவர்கள் சொன்னதும் ஐயா சொல்வதும்

● **போர் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டு குற்றம் சுமத்தப்பட்ட சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்பார்க்காத ஒன்றாக இருந்திருக்கலாம். ஆனால் தமிழ் மக்களுக்கு இது ஒன்றும் அதிர்ச்சியை ஏற்படுத்திய செய்தியே அல்ல. பௌத்த சிங்கள நல்லாட்சியில் இதனை விட வேறெப்படி தமிழ் மக்களை அவமானப்படுத்த முடியும்?**

■ அவர்களைப் பொறுத்த வரை அவர் ஒரு தேசிய வீரர் தமிழ் மக்கள் மீது போர் குற்றங்களை இழைத்தவர் என்று எவர் சொன்னால் என்ன? இராணுவத் தளபதிப் பதவிக்கு அவரே பொருத்தமானவர் என்ற மைத்திரியின் முடிவு தமிழ் மக்களுக்கு மட்டுமே அச்சமூட்டும் விடயம், பெரும்பான்மை இனத்தவருக்கல்ல..! ஐ.நாவும் அமெரிக்காவும் ஏனையோரும் இந்த நியமனத்திற்காக அரசை கண்டித்திருக்கலாம் தண்டிக்க முடியுமோ?

● **சும்மா சொல்லக் கூடாது ஜே.வி.பியினருக்கு வந்த ஞானம் நம்பமுடியாத ஒன்றுதான்.**

■ கொலைகாரர்களினதும், கொள்ளைக்காரார்களினதும் ஆட்சியை அடியோடு இல்லாதொழிக்க வேண்டும் என்றெல்லே மக்களிடம் அறை கூவல் விடுத்திருக்கினம். சிலவருடங்களுக்கு முன்னர் இவர்கள் சொல்லும் கொலைகாரர்களும், கொள்ளைகாரர்களும் ஆட்சிக்கு வர இவர்கள் எவ்வாறெல்லாம் உதவினார்கள் என்பது எல்லோரும் அறிந்த விடயமே. இப்போ அவர்களை ஒழிக்க மக்களை வருமாறு கேட்கின்றனர். இடதுசாரிகள் எவ்வாறெல்லாம் இருக்கக்கூடாதென்பதுக்கு மோச மான முன்னுதாரணமாக இருந்து விட்டு இப்போது மாற்றத்திற்கான அறை கூவலை விடுத்திருக்கினம் பேரினவாத தலைவர்களும் தேர்தல் கால அரசியல் வாதிகளும் அர்த்தமற்றுக் கத்துவது இயற்கை தானே! தேர்தல் முடிய அவர்கள் ஓர் அறிக்கையை விட்டிட்டு அடங்கிப்போவார்கள். குறிப்பிடப்பட வேண்டியதொரு ஒரு விடயம், காலி முகத்திடலில் மாபெரும் கூட்டம் ஒன்றை நடத்தி முடித்துவிட்டு அந்தத் திடலை தலைவர்களும் தொண்டர்களும் துப்பரவாக்கி விட்டுச் சென்றது பாராட்டப்பட வேண்டியதுதான். நிலத்தைச் சுத்தம் செய்யலாம்! அரசியலை சுத்தம் செய்ய முடியுமோ?

● **அறிக்கை மன்னர் ஆனந்தசங்கரியார் கன காலத்திற்கு பிறகு ஓர் அறிக்கை விட்டு அரசியல் அரங்கில்தான் இன்னமும் இருப்பதை நினைவுபடுத்தி உள்ளார்.**

■ இம்முறை அறிக்கையில் விக்னேஸ்வரன் ஐயாவுக்கு தன் கோபத்தை கொட்டியிருக்கிறார் எழுக தமிழ் பேரணியால் எந்த மாற்றமும் ஏற்படாது என்று அடித்துக் கூறியிருக்கிறார்.

அது சரி ஐயா நீங்களும் சலிப்பின்றி விடும் அறிக்கைகளால் இதுவரை ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக் கிறதா? சொல்லுங்கள்!



● **எதிர்வரும் தேர்தல்களில் பெரும்பான்மை தமக்கு வழங்கினால் ஆயிரம் மடங்கு அபிவிருத்தியை செய்வதாக ரணில் கூறியிருக் கிறார்.**

● பெரும்பான்மை கிடைத்தால் ஆயிரம் மடங்கு அபிவிருத்தி என்று தான் ஐயா சொல்லியிருக்கிறாரே தவிர சிறிதளவேனும் சிறுபான்மையினருக்கு எதையும் செய்வேன் என்று உறுதி கூறவில்லையே. சிறுபான்மையினர் கேட்பது உரிமை. அபிவிருத்தியல்ல. அதனை அறியாதவரா அவர்!


UTHAYAA JEWELLERS
No.79G, Kasthuriyar Road, Jaffna.
T.P : 021 222 4434 | 021 221 6877
uthayaajewellers4434@gmail.com
www.facebook.com/uthayaajewellers



கணேசன் ஸ்ரோர்ஸ்
Wholesale & Retail
Dealers in Textiles
No.201 K.K.S Road, Jaffna.
T.P : 021 222 2830
077 445 7344


Fashion House
பெஷன் ஹவுஸ்
No. 203, K.K.S. Road, Jaffna.
Tel : 021 222 8713 |
Mobile : 076 717 7185
Fax : 021 222 3034
E-mail : fhjaffna@gmail.com
WHOLESALE & RETAIL DEALERS IN EVERSILVER,
ALUMINIUM, ENAMELWARE, GLASSWARE,
CERAMICWARE, PLASTIC ITEMS,
RUBBER PRODUCTS & HOTEL EQUIPMENTS ETC...


இளவரசி
சேலைச்சோலை
பட்டுப் புடவைகளின்
சாம்ராஜ்யம்
இல.125. மின்சாரநிலைய வீதி. யாழ்ப்பாணம். தொ.இல : 021 222 2503. 076 807 9080


ஹோட்டல்
அடுப்பங்கரை
உயர்தர அசைவ
உணவகம்
இல.102A பருத்தித்துறை வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம் தொ.இல : 0772487234


LINGAN
CREAM HOUSE
No.213, Stanley Road, Jaffna. | T.P : 021 221 6660
No.526, Point Pedro Road, Nallur, Jaffna.


Thillai Wedding Service
உங்கள் வாழ்வில் திருமணம், பூப்புனித
நீராட்டு விழா, பிறந்தநாள் விழா போன்ற
மங்களகரமான வைபவங்களுக்கு தேவையான
மணவறை, தங்க மணவறை, பலூன் அலங்காரம்
மற்றும் சகலவிதமான சேவைகளையும்
எம்மிடம் சிறப்பான முறையில்
பெற்றுக்கொள்ளலாம்.
No.14, Bandaranayaka Mawatha, Kalubowila, Dehiwala, Srilanka.
CONTACT : 077 889 0428




இந்தப் பத்திரிகை இல. 10, வில்வம் தெரு, கொழும்புத்துறை என்ற முகவரியில் உள்ள நோர்சி மீடியா (பிரைவேற்) லிமிடெட் நிறுவனத்தால் 25.08.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.


"தூய்மையானதும் நீண்ட காலம்
பாவிக்க கூடியதுமான
இல்லத்தரசிகளின்
ஒரே தெரிவு"
LITRO
GAS
S.V
முருகேசு
தேசிய எரிவாயு ஏக விநியோகஸ்தர்
No.154, Hospital Road, Jaffna.
T.P : 021 222 8899 | 021 492 5831
No.106, Hospital Road, Jaffna.
T.P : 021 492 5830 | 021 222 4341
Fax : 021 222 4341
No.288, A9 Road, Karadippokku, Kilinochchi.
T.P : 021 492 5827
LITRO GAS
12.5 kg


The Style Expert
Malini
Beauty Parlour Dress Designing
Bridal Makeup
Facial (All Skin Type)
Eye Brows
Face
Bleaching
Head Oil Massage
Hair Straightening
Hair Colouring
Mehandi
Gel Nail
பெண்களுக்கான ஆடைகள் தைத்துக் கொடுக்கப்படும்.
Urumpirai East, Palaly Road. 077 463 1257


5ம் ஆண்டில் கால்பதிக்கும் தீபம் வார மலரை சிறப்புற வாழ்த்துகின்றோம்
யாழ் அகி ஐஸ்கிறீம்
இல. 46. கனகபுரம் வீதி. கிளிநொச்சி.
No.46, Kanakapuram Road , Kilinochchi.
T.P.021 7917585 / 0770232328


தேங்காய் கொப்பறா, எள்ளு, இலுப்பை, வேம்பு போன்றவற்றை
நவீன இயந்திரம் மூலம் ஊற்றி கொடுக்கப்படும்.
K.T.M
OIL MILL
Point Pedro Road, Kalviynkadu, Jaffna | T.P : 077 997 4311


யாழ் நகரில் பட்டுப் புடவைகளுக்கு
கைராசியான நிறுவனம்
Rasi
Collections
27
வருடங்கள்
இல. 199, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 222 5571


சிறி நதியா
நகை மாளிகை
SN
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல : 021 222 2709
இல.56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல : 021 222 6744


சாய்ராம் உயர்தர சைவ உணவகம்
அனைத்து வகையான உணவுகளையும் தரமாகவும், மலிவாகவும்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. தொ. இல 077 487 5116


NORTHERN
FITNESS
GYM
NORTHERN FITNESS
BOYS ONLY : 5.00AM - 11.00PM
LADIES ONLY : 6.00AM - 9.00PM
OPEN
DAILY
யாழ் மாவட்டத்தில் முதன்முறையாக
ஆண், பெண் இருபாலருக்கும் NVQ LEVEL 4
உடற்பயிற்சி கற்கைநெறி பயின்ற
பயிற்றுவிப்பாளரினால் நடாத்தப்படும்
உடற்பயிற்சி நிலையம்
யாழ் நகரில் முதன்முறையாக
பெண்களுக்கான உடற்பயிற்சி நிலையம்
ஒரு கிளையும் ஆண்களுக்கான உடற்பயிற்சி
நிலையம் இரு கிளையும் கொண்ட ஒரே ஒரு
உடற்பயிற்சி நிலையம்...
பெண்களுக்கான உடற்பயிற்சிகள் யாவும்
பெண்களாலேயே வழங்கப்படுகின்றது
Fitness Training | Strength Training
Endurance Training | Power Training
Muscle Gaining | Weight Loss | Fat Burning
CONTACT US 077 025 0339
MAIN BRANCH : No. 573, Manipay Road, Oddumadam, Jaffna.
2ND BRANCH : No. 18, Pandithar Manikka Thiagarayar Road, Chunnakam.
3RD BRANCH : No. 109, (In YMCA Building Ground Floor) Kandy Road, Jaffna.


Chennai
Fashion
World
No.63, Grand Bazaar, Jaffna T.P : 021 221 5464


KAJASANKAVI
CENTER & PRINTERS
கஜசங்கவி சென்ரர் & பிறிண்டேர்ஸ்
Dealers in Indian Wedding Cards, Visiting Cards, Offset Printing & Screen Printing
எம்மிடம் சகல விதமான திருமண அழைப்பிதழ்கள், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதல்கள்,
கேக் பெட்டிகள், அன்பளிப்பு பொருட்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
kajasankavi@gmail.com | www.kajasankavi.com
No. 217, K.K.S. Road, Jaffna. | Tel : 021 222 7885 / 077 6031 071
இல. 217, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் | தொ.இ : 021 222 7885 / 077 6031 071


அனைத்து வகையான
உணவு வகைகளுக்கும்
HARRY
HOTEL
No.328, Point Pedro Road, Anaipanthy, Jaffna.
T.P :021 221 7819, 077 990 1340

## கிருபா லேணர்ஸ்
## KIRUBA LEARNERS

D.S 589

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

### யாழ்ப்பாணம்

227/6 கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம். (மதவடி அருகில்)
021 224 2022, 071 454 6956

முதலாம் கட்டைச்சந்தி,
பருத்தித்துறை.
021 492 3201, 071 154 6961

36, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (கச்சேரி அருகில்)
021 222 6699, 071 777 6969

ஓம்பிளாசா, பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்.
021 222 6688, 071 454 6969

கண்டி வீதி, சாவகச்சேரி.
(நீதிமன்றம் அருகில்)
021 227 0700, 071 454 6957

கே.கே.எஸ் வீதி,
தெல்லிப்பளைச்சந்தி தெல்லிப்பளை.
021 224 3737, 071 454 6959

பிரதான வீதி, (பொலிஸ் நிலையம் முன்பாக), நெல்லியடி.
021 300 6550, 071 454 6958

இராமநாதன் வீதி, திருநெல்வேலி
(பல்கலைக்கழகம் முன்)
021 221 4488, 077 722 7740

பிரதான வீதி, காரைநகர்,
சித்தங்கேணி.
021 225 2500,
076 212 1299

### கிளிநொச்சி

புளியடிச்சந்தி, முல்லை வீதி,
விசுவமடு.
021 320 1515,
077 858 5263

ஏ9 வீதி, கிளிநொச்சி
(கச்சேரி முன்பாக)
021 228 5505,
071 454 6955

நாச்சிக்குடா சந்தி,
மன்னார் வீதி,
முழங்காவில்.
021 300 6544,
070 333 6161


வாடியடிச்சந்தி, பூநகரி.
021 320 1818,
070 333 7171

### வவுனியா

216. ஏ9 வீதி, வவுனியா.
(வசந்தி திரையரங்கு முன்பாக)
024 222 7777,
0777 100 444

### மன்னார்

94. பிரதான வீதி, மன்னார்.
023 225 1656,
077 847 2732




- விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
- இரவு நேர வாகனப் பயிற்சி
- தவணைமுறைக் கட்டணங்கள்
- சகல கிளைகளிலும் வாகனப் பயிற்சி
- விசேட பரீட்ச ஒழுங்குகள்

**இல.226 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 4353, 021 492 3200, 071 454 6960**




மனம் நிறைந்த விருந்தோம்பல்களுடன்..

★★★★★★

## TILKO JAFFNA CITY HOTEL

- சொகுசு அறைகள்
- அறுசுவை உணவுகள்
- உயர்தர மதுபானங்கள்
- மதுபான விடுதி
- உடற்பயிற்சி கூடம்
- மண்டப வசதி
- நீச்சல் தடாகம்

கடல் அலைகளுடன் உங்கள் பொழுதை
களிப்புடன் கொண்டாட
**CHARTY BEACH RESORT**

PARK VIEW HOTEL
NO: 107, KANDY ROAD,
(NEAR JAFFNA DISTRICT SECRETARIAT)
JAFFNA.

CHARTY BEACH RESORT
CHARTY, VELANAI,
JAFFNA, SRI LANKA.

FORTWAY HOTEL
MAIN STREET,
(3rd CROSS STREET JUNCTION)
JAFFNA.

E-mail : info@cityhoteljaffna.com Web : www.cityhoteljaffna.com Tel : 021 222 5969 021 720 0707




## TOPAZ

**NO. 01**
**SHOP IN JAFFNA**

பட்டு சேலைகள்
காஞ்சிபுர சேலைகள்
சுடிதார் மற்றீரியல்கள்
சேட், கோட் வகைகள்

சிறுவர்களுக்கான
பெஷன் ஆடைகள்

**TOPAZ**
No. 72, Grand Bazaar,
Jaffna.
Tel : 021 222 4743
Fax : 021 222 7645

**TOPAZ TAILORING**
No. 80/24, Kasthuriyar Road,
Jaffna.
Tel : 021 222 4643

**TOPAZ MALL**
No. 195, Power House Road,
Jaffna.
Tel : 021 222 4933
021 222 7445

E-mail : agntopazmall@gmail.com


இராஜேஸ்வரி
ரெக்ஸ்ரைல்ஸ்
RAJASWARIE TEXTILE
Dealers in All kind of silk sarees and Sudithar
No. 305, Power House Road, Jaffna | 021 222 6953


மலாயன் கபே
MALAYAN CAFE
பல ஆண்டுகளாக யாழ் நகரில் மக்கள் அபிமானம்
வென்ற உயர்தர சைவ உணவகம்
No. 36, 38 Grand Bazaar, Jaffna, Srilanka.
T.P : 021 222 2373


DEALERS IN 22KT GOLD JEWELLER
NEW
V.M.K
JEWELLERY
வீ.எம்.கே ஜுவல்லரி
No. 80/30, Kasthuriar Road, Jaffna. Tel : 021 222 2515, 0777 849 369
Kandy Road, Chavakachcheri. Tel : 021 227 1616, 0777 849 369


TCN EXPRESS
THIRUMURUGAN COM NET (PVT) LTD
Local & International Parcel and Document Delivery Service
All Countries Air Ticketing & Visa Consultancy Service
Bus Booking Service
208A, Galle Road, Wellawatta. Colombo - 06
321 (323) K.K.S. Road, Jaffna.
46, Adiyapatham Road, Thirunelvely.
04, Central School Road, Nelliady.
165, Main Street, Mannar.
Kanagapuram Road, Kilinochchi
HOT LINE
0777 554 528
Authorized Dealer
DHL
aramex
SKYNET
SriLankan


றோயல் மூக்கு கண்ணாடியகம்
இலவச கண் பரிசோதனை
குறைந்த பார்வை உடையவர்களுக்கான
கண் பரிசோதனை
இல 448, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
021 454 5804 | 077 915 3456
இல 16, 18, இன் மேல்மாடி பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 2584 | 077 400 6008
பிரதான வீதி, முல்லைத்தீவு (மாஞ்சோலை வைத்தியசாலை முன்)
076 863 8146


G.S LINGANATHAN & CO
Dealers in Textiles & Fancy Goods
No. 13, 14, 51, Grand Bazaar, Jaffna. 021 222 3139 | 021 222 8107


Moving money for better
WESTERN UNION WU
021 221 7007
சாரங்கா நகைமாடம்
என்றும் உங்கள் எண்ணம் போல் நகைகள்
இல 157/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல : 021 222 9672


VIKKI
LEARNRES
அரச அங்கீகாரம் பெற்ற
சாரதி பயிற்சிப் பாடசாலை
விரைவாக சாரதிப் பயிற்சிகள்
விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம்
எழுத்து பரீட்சைக்கான விசேட வகுப்புகள்
STUDENT DRIVER
HOTLINE
077 830 8360
சுன்னாகம்
திருநெல்வேலி
மானிப்பாய்
021 722 3201